மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 24 ஞாயிற்றுக்கிழமை (06.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 132

# மடுப்பகுதி நெருக்கடியைப் போக்க பாப்பரசர் தலையிட வேண்டுதல்

## இராஜதந்திர ரீதியில் அணுக வற்புறுத்து

கொழும்பு,ஏப்ரல்6

மடுமாதா தேவாலயத்தில் உருவாகியுள்ள நெருக்கடியை - ஆபத்தான - பதற்றமான - நிலையைப் போக்குவதற்கு உலகளாவிய கத்தோலிக்க திருச்சபைகளின் அதி உயர் தலைவரான பாப்பரசரைத் தலையிடுமாறு வேண்டுதல் விடுக்கப்பட்டுள்ளது.







தற்போதைய ஆபத்தான நிலையை ராஜதந்திர ரீதியில் அணுகி உடன் தீர்த்து வைக்குமாறு மன்னார் ஆயர் அதிவண. கலாநிதி இராயப்பு ஜோசப், கொழும்பில் உள்ள வத்திகான் பிரதிநிதியான மேற்றிராணியார் மேரியோ செனாரி மூலம் இந்த வேண்டுதலை பரிசுத்தப் பாப்பரசர் பதினாறாவது சின்னப்பரிடம் விடுத்துள்ளார்.

இப்போதைய நிலையைப் போக்குவதற்கு உடனடியாக ஏதாவது செய்யுமாறு மேற்றிராணியார் மூலம் வத்திக்கானுக்கு நான் அறிவித்துள்ளேன் என்று மன்னார் ஆயர் கூறினார்.

மடுத்தேவாலயப் பகுதியில் நடைபெறும் மோதல்கள் விரைவில் நிறுத்தப்படவேண்டும் என்பதிலேயே நாம் அதிக அக்கறையாக உள்ளோம் - என்றும் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆண்டகை கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, எட்டியாதோட்டை புனித

(16ஆம் பக்கம் பார்க்க)

## மியான்மரிலிருந்து சலுகை விலையில் 50,000 மெற்றிக்தொன் அரிசி

கொழும்பு,ஏப்.6

நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து மியான்மரில் இருந்து சலுகை விலையில் அரிசியை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கை ஒன்றில் அரசாங்கம் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின்படி 50 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசி மியான்மரில் இருந்து கொள்வனவு செய்யப்படவிருக்கின்றது என்று அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்தார். இது தொடர்பான அலுவல்களை கவனிப்பதற்காக நேற்று மியான்மர் பயணமானார். (16ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துமாறு அரசு, புலிகளிடம் நேரடியாக வலியுறுத்த முடிவு

## மன்னார், வவுனியாவில் திருப்பலி, வெள்ளியன்று உண்ணாநோன்பு

வவுனியா,ஏப்ரல்6

மடுமாதா தேவாலயப் பகுதியை சமா தானப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி அமைதி வலயமாக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகளிடமும் அரசாங்கத்திடமும் நேரில் கேட்டுக்கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் நேற்றுக் கூடிய அருட்தந்தையர்கள் இந்த முடிவை மேற்கொண்டனர்.

இதனை வலியுறுத்தி மக்களிடம் கையெழுத்துக்களைச் சேகரிப்பது என்றும், மன்னார், வவுனியாவில் இன்று விசேட திருப்பலிகளைநடத்துவதென்றும் கோரிக்கை நிறை வேறும் வரை வெள்ளிக்கிழமைகளில் உண்ணாநோன்பு அனுஷ்டிப்பது என்றும் நேற்றைய குருமார்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

மன்னார், மடுமாதா திருச்சுரூபம் தொடர்பில் அடுத்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி மன்னார் மறைமாவட்ட அருட்தந்தையர்கள் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் கூடி ஆராய்ந்த கத்தோலிக்க குருமார்கள், மடுதேவாலயத்தின் உண்மை நிலைமைகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போக்குவரத்துச் சபையின் சேவைகள் தடைப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.6

மின்கலங்களுக்கு (''பற்றரி''களுக்கு) ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக யாழ். போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை தடைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

மின்கலம் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையைச் சேர்ந்த 17 பஸ்கள் தற்போது சேவையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒகேனக்கல் குடிதண்ணீர் திட்டத்தை ஒத்திவைப்பதாக கருணாநிதி திடீர் அறிவிப்பு

சென்னை,ஏப்.6

கர்நாடக சட்டமன்றத் தேர்தல் முடியும் வரை ஒகேனக்கல் குடிதண்ணீர் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முடிவை ஒத்திவைப்பதாக தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்று அறிவித்தார்.

தமிழகத்தின் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்வதற்காக ஒகேனக்கலில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. கூட்டத்தில் வீரவன்ஸ இல்லை

கொழும்பு,ஏப்.6

கொழும்பில் ஜே.வி.பியின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற தியாகிகள் நாள் கொண்டாட்டங்களை அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ புறக்கணித்தார்:

இந்நிகழ்வின் பிரதான பேச்சாளராக முன்னர் நியமிக்கப்பட்டிருந்த அவர் கொழும்பு மாநகரசபை மைதானத்திற்கு முன்புள்ள விகாரமகாதேவி பூங்காவில் நடைபெற்ற தியாகிகள் நாளில் பங்கேற்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தனது மாநிலங்களில் ஒன்றல்ல என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும்

### எச்சரிக்கிறார் ஜே.வி.பியின் சோமவன்ஸ

கொழும்பு,ஏப்.6

இலங்கை அரசாங்கம் தம்மிடம் மட்டுமே ஆயுதம் வாங்க வேண்டும் என்று இந்தியா நிபந்தனை விதிக்கிறது. இலங்கை, இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றல்ல என்பதை அந்த நாடு நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று மாலை நடைபெற்ற ஏப்ரல் புரட்சியின் 37 ஆவது ஞாபகார்த்த வைபவத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

மக்கள் விடுதலை முன்னணி என்ற ஒரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இரண்டு இளைஞர்கள் சுட்டுக்கொலை

வவுனியா,ஏப்.6

வவுனியாவில் நேற்று மாலை இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் வவுனியா, கூமாங்குளத்தைச் சேர்ந்த சிவராஜா(வயது 32) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்

NEW YEAR SPECIAL

Flash 1Gb-850/- 2Gb-1400/- 4Gb-2300/-

All in Special prices with warranty

All Computer & Allied products are in this offer

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணினியுடனும்

Free

1/2/4 Gb Flash /Scanner/Printer/ /TV Capture/TV Tuner/ UPS

UNIT மனோகரா சந்தி 347, K.K.S Road, Jaffna ☏4590720, 2228844



## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளில் அனுபவமுள்ள ஆள்கள் தேவை

i) விற்பனைப் பிரதிநிதி (SALES REP.)

ii) விற்பனையாளர்

உடன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:- விளம்பரஇல 3079

மே/பா உதயன்



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் உள்ள ஏழு பரப்பு காணியுடனான தபாற்கந்தோர் கட்டடமும், இணைந்த வீடும் விற்பனைக்குண்டு.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்திற்கு அண்மையில் ஆறு பரப்பு காணியுடனான மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்: 0771517904



35 வருடங்களாக 1973 - 2008

தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்

O/L Day Class

ஏப்ரல் 10 இல் ஆரம்பம்

காலை 8.00 - பி.ப 1.00 வரை

இன்று முதல் பதியும் 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்

The Express Institute Irupalai, Kopay. -அதிபர்





புத்தாண்டு சிறப்பு விற்பனை

SUN TV, K TV, RAJ TV, ESPN, STARSPORTS உட்பட 102 சனல்கள் கண்டு களிக்கக்கூடிய Package க்கள் (ஒருவருட இலவச சந்தாவுடன்)

ரூபா 12 000/=

1 வருட சந்தா மற்றும் Activation Charges உட்பட

* விரையுங்கள் 50 ரிசீவர்கள் மட்டுமே இச்சலுகை விலையில்
* Dish TV க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்தித் தரப்படும்
* எம்மிடம் கொள்வனவு செய்யும் Dish TV க்குரிய கட்டணங்கள் செலுத்தும்போது 10% விலை கழிவு உண்டு.
* மற்றும் கேபிள் TV க்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும்.
* கேபிள் TV துறையில் 20 வருட அனுபவமுள்ள SatsTech நிறுவனம், உங்களுக்குச் சரியான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் என்றுமே வழங்கிவருகின்றது.

மேலும் விவரங்களுக்கு:

SATS - TECH ENGINEERS

இல.182,கே.கே.எஸ். வீதி, (குளப்பிட்டி சேர் அருகில்)

கொக்குவில் தொ.பே. 021 222 5908


## கண்ணீர் அஞ்சலி



## தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்

(உதவிக்கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வி வலயம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)

*ஆசிரியம் சிறக்க ஆசையுடன்*
*வளங்கள் சேர்த்து*
*ஆற்றிய பணிதனை ஆர் மறப்பர்*
*அவனிதனில்*

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(சி/552185)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 6

வண்ணை நாச்சிமார் கோயில் வருடாந்த பெருந் திருவிழா இன்று மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும 19 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 6

புங்குடுதீவு கண்ணகை அம்மன் வருடாந்த பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 6

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை மு.ப. 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 6 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1-202)

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்பும், பற்சுகாதார விழிப்புணர்வுக்கருத்தரங்கும் நேற்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றன.

போரூட் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் முன்பள்ளிகளுக்கு முதலுதவிப்பெட்டிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தி.கிளின்டஸ் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பல் வைத்திய நிபுணர் ஆர். டேவிட் உட்பட பலர் உரையாற்றினர். (1-207)

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்குமுரியவரும் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளருமாகிய

உயர்திரு த. பஞ்சலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் துயரம் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

யாழ். பாலர் கல்விக் கழகம்
49/5, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

## 45 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர்
தியாகராசா கஜேந்திரன்
(ஜேர்மனி)

பிறப்பு 12 ★ 06 ★ 1981

இறப்பு 22 ★ 02 ★ 2008

அமரர் தியாகராசா கஜேந்திரன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். மேலும் அன்னாரது மறைவினால் துயருற்றிருந்த வேளையில் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் மற்றும் தொலைபேசி, கடித மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு. (சி/552182) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## சதாசிவம் இரட்ணபாலா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இரட்ணபாலா 04.04.2008 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சதாசிவம்- சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் பிறக்லி- மேரி (இத்தாலி) ஆகியோரின் மருமகனும் யசிந்தாராணியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி, விஜயந்தி, டானியல் ஆகியோரின் அன்புத் தந்தையும், சதானந்தன், சந்திரபாலா, சூரியபாலா, உதயபாலி, உதயகலா, தவச்செல்வி, கருணபாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கீதா, உஷா, சியாமளா, ஜெகதீஸ்வரன், ஸ்ரீகாந்தன், காலஞ்சென்ற சிவநேசன், புஸ்பா, கிறக்கறி லூயில், கிறக்கறி கிறேஸ், லூயிஸ் பரமேஸ்வரி, கிறேஸ் நாகரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (07.04.2008) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*புகையிரத வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
சதாசிவம் (தந்தை).

(சி/552180)

## மரண அறிவித்தல்

## ஆறுமுகன் பரமேஸ்வரன்



களபூமி, காரைநகரை பிறப்பிடமாகவும் மருதப்பு வளவு, அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரமேஸ்வரன் 05.04.2008 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- செல்வமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மருதப்பு- பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் நாகேஸ்வரியின் (ஈஸ்வரி) அன்புக் கணவரும் திலீபன், தீபன், தீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோமசுந்தரம், காலஞ்சென்ற சரஸ்வதியம்மா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அராலி தெற்கில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூணாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மருதப்பு வளவு,*
*(கரைப்பிட்டி பிள்ளையார் கோவிலடி)*
*அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.* (72866)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மடுத்திருப்பதிக்கு நேர்ந்துள்ள அவலம்

பழைய தமிழ் சினிமாப் படம் ஒன்றில் பலரையும் கவர்ந்த பாடல் ஒன்றுக்கு முன்னர் ஒலிக்கும் ஒரு வசனம் பலரது மனதிலும் இன்றும் நிலைத்திருக்கும்.

''காய்ந்துபோன பூமியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதலடையும் அந்த நதியே காய்ந்து போய் விட்டால்...?'' என்று எதற்கும் கலங்காத தனது மாமனைப் பார்த்து ஒரு பெண் கதாபாத்திரம் ஏக்கத்துடன் கேட்பது போன்ற பாணியில் அந்த வசனம் அமைந்திருக்கும்.

இந்த நிலைதான் இன்று ஈழத்தமிழ் மக்களுக்கும்.

பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக மீட்சி வேண்டிப் போராட்டம் நடத்திவரும் ஈழத்தமிழர்களின் வீரஞ்செறிந்த பூமி வன்னி மண். ஆக்கிரமிப்புக் கொடூரத்துக்கு எதிராக வீரத் தியாகம் புரிந்த பூமி அது. தம்மீது தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தின் அராஜகங்கள் காரணமாக வாழ் விடங்களை விட்டுப் பலமுறை நகர்ந்து - இடம்பெயர்ந்து - அகதிகளான அனுபவம் அவர்களுக்கு நிறையவே உண்டு.

அவ்வாறெல்லாம் அவர்கள் இடம்பெயர்ந்த காரணங்களில் அவர்களுக்குத் தஞ்சம் தந்த ஒரு புனித மண் வன்னி நிலப்பரப்பில் இருந்தது. அதுதான் மடு மாதா திருத்தலம்.

இடம்பெயர்ந்து ஏதிலிகளான பல்லாயிரக்கணக்கான குடும்பங்களை ஒரே சமயத்தில் பராமரித்துப் பாதுகாத்துப் பேணி சுகநலம் ஓம்பிப் பெருமை படைத்த திருத்தலம் மடு அன்னைப் பதி.

பல்லாயிரக்கணக்கில் அகதிகளைப் பேணிப் பாதுகாத்துப் போற்றிய மடு அன்னையே இன்று அகதியாகிவிட்டார்.

பாதுகாப்புக் கருதி மக்கள் கூட்டம் கூட்டமாக இடம் பெயர்வது போல, மடு அன்னையும் பாதுகாப்புக் கருதி மடுத் திருப்பதியை விட்டுக் கிளம்பவேண்டியவரானார். மடு அன்னையின் திருச்சுரூபம் இப்போது முழங்காவிலில் தஞ்சம் புகவேண்டிய நிலைமை .

ஒரே சமயத்தில் இருபத்தியையாயிரத்துக்கும் அதிகமான அகதிக் குடும்பங்கள் மடுத்திருப்பதியை சூழ ஒன்றாகத் தஞ்சம் புகுந்து தங்கியிருந்தமை மறக்கக்கூடியதல்ல.

கடந்த இரண்டு தசாப்த காலக் கொடூர யுத்தத்தின் மத்தியில் மக்களுக்கு ஆறுதலளித்துத் தஞ்சம் வழங்கும் பெரும் மையமாக - கேந்திர ஸ்தானமாக - முக்கிய தளமாக - ஸ்தலமாக - விளங்கியது மடுத் திருப்பதியே.

வந்தாரை வரவேற்பதிலும் அகதிகளைப் பராமரித்து புனர்வாழ்வழிப்பதிலும் வற்றாத நதியைப் போன்று வாரி வழங்கிய மடுத்திருப்பதி இன்று காய்ந்துபோன பூமியாக வரண்டு போய்க் கிடக்கின்றது.

இராணுவ ஆக்கிரமிப்பை வரவேற்க விரும்பாத மடு அன்னை அதனால் மடுவிலேயே இருக்க மனங்கொள்ளாது முழங்காவிலுக்கு இடம்பெயர்ந்துவிட்டார்.

சமாதானத் தூதுவரான இயேசுபிரானின் பெயரால் அமைதியையும் சாந்தியையும் சகோதரத்துவத்தையும் நிலை நிறுத்தும் புனித பணியில் மடுத்திருத்தலமும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது.

அந்தப் புனித பிரதேசத்தைத் தனது இராணுவ வெறித் திட்டம் காரணமாக - யுத்தமுனைப்புப் போக்குக் காரணமாக - போர்ப்பூமியாக மாற்றியிருக்கின்றது இலங்கை அரசு என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் பா.நடேசன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

போர் மரபுகளின்படியும் ஐ.நா. சாசனங்களின் பிரகாரமும் இத்தகைய புனித திருத்தலங்களைப் போர்ப்பிரதேசமாக்குவது முறையற்றது. நாகரிக மரபுகளுக்கும் அது மாறானது. எனினும் இந்தப் புனித ஸ்தலம் மீதும் தனது இராணுவத் தீவிர வெறியையும் ஆக்கிரமிப்புச் சிந்தனைப் போக்கையும் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது கொழும்பு என்றும் குற்றம் சுமத்தியிருக்கின்றார் நடேசன்.

இவ்வாறு பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு அபயம் அளித்த திருப்பதியைத் தனது போர்க்களமாக மாற்றி அங்கு யுத்தம் ஒன்றைத் திறக்க - திணிக்க - எத்தனிக்கும் இலங்கை அரசின் செயலும் அத்தகைய போரை ஏவிவிட்டிருக்கும் அதிகார மமதையும் திமிரும் நீண்டகாலம் நிலைக்காது.

இப்படித்தான் 1999இல் மடுத்திருப்பதிக்குள் நுழைந்த அரசுப் படைகள் போர்த்தாங்கிகள் மூலம் நடத்திய குண்டுத்தாக்குதலில் மடு ஆலயத்துக்குள்ளேயே தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், முதியோர்கள், பெண்கள் என முப்பது பேர் வரை உடல் சிதறிப் பலியானமை இலகுவில் மறக்கக்கூடியதல்ல. அதேபோன்று கடந்த பெப்ரவரி 28ஆம் திகதியும் மடுத்திருப்பதிக்கு அண்மையில் - புனித வளாகப் பகுதியில் - பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருந்த பாடசாலைச் சிறார்கள், ஆசிரியர்கள் போன்றோர் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதலில் 18 அப்பாவிகள் உயிரிழந்தனர் என்பதும் கவனித்தக்கது.

தன்னுடைய பௌத்த, சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை - மேலாண்மையை - காட்டுவதற்காகவும் நிலை நிறுத்தவும் வசதியாக காருண்யசீலர் புத்த பெருமானின் உருவச் சிலைகளையே ஆக்கிரமிப்புச் சின்னமாக்கி அதையே சர்ச்சைக்குரிய இடங்களில் வல்வந்தமாக நிறுவி அவற்றுக்கு அளவுக்கு அதிகமாகப் பாதுகாப்புக் கொடுத்து அவற்றின் ஊடாக தன்னுடைய மதப் பெருமையையும் மேலாதிக்கத் திமிரையும் கட்டிக்காத்து வரும் கொழும்புக்கு சிறுபான்மை இனத்தவர்களது மதங்கள் குறித்தும் அவற்றின் புனித தலங்கள் குறித்தும் கிஞ்சித்தும் கவலை இல்லை.

அந்த மதங்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்ற மமதைப் போக்குக் கொழும்புக்கு முற்றிவிட்டது. அதன் தொடர் விளைவே மடுத்திருப்பதி மீதான இந்த ஆக்கிரமிப்பு யுத்தமும் அகோர ஷெல் தாக்குதல்களுமாகும்.

தென்னிலங்கையின் இந்த வெறுப்பூட்டும் போக்கு- செய்கை - இப்போது வத்திக்கான் வரை அம்பலமாகியிருப்பது நல்ல சகுனமே.

தன்னுடைய இராணுவ வெறிப்போக்குக் காரணமாக சர்வதேச ரீதியில் தன்னிமைப்படுத்தப்படும் ஆபத்தை எதிர்கொண்டிருக்கும் இலங்கைக்கும் இந்த ஆட்சிப் பீடத்துக்கும் மேலும் கெட்ட பெயரைச் சம்பாதித்துத் தரும் விடயமாகவே - விவகாரமாக - மடு மீதான தாக்குதல்கள் வந்து அமைந்திருக்கின்றன.

# உயிரியல் கற்று மக்களின் உயிர்காக்கும் உன்னதசேவையை செய்வதே எனது விருப்பம்

### அகில இலங்கை ரீதியில் 5ஆம் இடத்தைப் பெற்ற நிதர்சன் சொல்கிறார்



உயிரியல் பிரிவில் கற்று உயிர் காக்கும் உன்னத சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே எனது இலட்சியம். மக்களுக்குச் சேவையாற்றுவது மனதுக்கு மகிழ்ச்சி தரும் ஒன்றாகும். எனது குடும்பத்தினரின் ஆசையும் நான் டாக்டராக வர வேண்டும் என்பதே.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் தமிழ்மொழி மூல மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் ஐந்தாவது இடத்தைப் பிடித்துக்கொண்ட கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவன் ஆனந்த[illegible]கம் நிதர்சன்(பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி [illegible], கரவெட்டி) மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார். இவர் யாழ். மாவட்டத்தில் நான்காம் இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

உதயனுக்கு வழங்கிய பேட்டியில் அவர் பின்வருமாறு சொன்னார்:

எமது பிரதேசததில் இன்று டாக்டர்கள் பற்றாக்குறையால் எமது மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் பற்றி அறிந்துள்ளேன். எனது குடும்பத்தினரின் விருப்பமும் நான் சிறந்த டாக்டராகத் திகழவேண்டும் என்பதே.

எனது அப்பா தனியார் வர்த்தக நிலையத்தில் பணிபுரிகிறார். அக்கா துஷ்யந்தி, யாழ். மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மாணவி. விக்னேஸ்வராக் கல்லூரியில் பயின்ற எனது அண்ணா பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

கல்வியில் நான் சிறந்து விளங்குவதற்கு எனது அக்காவும் அண்ணாவும் மிக முக்கியமானவர்கள். எனது ஐயங்களைத் தீர்த்துக்கொள்வதில் அக்காவும் அண்ணாவும் உடனுக்குடன் உதவி வந்தனர்.

முதலாம் ஆண்டிலிருந்து இதே கல்லூரியில் கற்று வருகின்றேன். எனக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் எனக்கேற்படும் ஐயங்களைத் தீர்ப்பதில் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பும் பாராட்டுக்குரியது. பாடசாலையில் இடம்பெறும் சகலவிதமான போட்டிகளிலும் என்னைப் பங்குபற்றச்செய்து எனக்கு வழிகாட்டியாக அவர்கள் திகழ்ந்தனர். அதிபர், ஆசிரியர்களின் ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் என்னை நல்வழிப்படுத்தியதையும் நான்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கை நோக்கி முயற்சியுடன் செயற்படின் அதனை அடைந்து உயர்வு காண முடியும்

### டாக்டராக வர விரும்பும் கோபிகா



நான் நெல்லியடி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை யில் 5ஆம் ஆண்டு வரை கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் 146 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்குச் சென்றேன். நான் வகுப்பில் முதலாவது மாணவியாகவே தொடர்ந்து வந்திருக்கின்றேன்.

இலக்கை நோக்கி முயற்சியுடனும் துணிவுடனும் செயற்படுபவர்கள் அதனை அடைந்து உயர்வடையமுடியும். இதனை ஒவ்வொருவரும் கருத்தில்கொண்டால் வெற்றி நிச்சயம்.

- இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை மெதடிஸ் பாடசாலையிலிருந்து ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றி 10 ஏ சிறப்புச் சித்தி அடைந்த கோபிகா.

வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த இவர் கந்தகாமிக் குடுக்களின் மகளாவார்.

உதயனுக்கு அளித்த செவ்வியில் அவர் மேலும் கூறியதாவது-

எனது கல்வி மேம்பாட்டுக்கு எனது அதிபர், ஆசிரியர்களும் பெற்றோர், சகோதரங்களும் வழங்கிய ஒத்தாசைகளும் உதவிகளும் என்னை உயர்த்தியுள்ளதை நான் வாழ்க்கையில் மறக்கமுடியாது.

எனக்குப் பத்திரிகைகள் வாசிக்கும் பழக்கம் உண்டு. பத்திரிகைகள் மூலமும் எனக்கு வேண்டிய அறிவை நான் சிறப்பாகப் பெற்றுள்ளேன். எனது சக மாணவிகளும் எனக்கு உதவி, என்னை நேசித்தும் உயர்ச்சிக்கும் கைகொடுத்தனர்.

இந்த இன்னல்கள் நிறைந்த காலத்திலும் என் மீது முழு

(15ஆம் பக்கம் பார்க்க)

# தன்னம்பிக்கையும் விட முயற்சியும் நிச்சயம் நல்ல பெறுபேறுகளைத் தரும்

### வட்டு.மத்திய கல்லூரியின் மாணவி மைதிலி



விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் கல்வி கற்றால் பரீட்சையில் நிச்சயம் நல்ல பெறுபேறுகளைப் பெறமுடியும் என்று கூறுகின்றார் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி (வட்டு மத்திய கல்லூரி) யில் கடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 10 'ஏ' சிறப்பு சித்தி பெற்ற மாணவி மைதிலி மோகனராசன்.

விவசாயம், தமிழ்இலக்கியம், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமயம், சமூககல்வி, சுகாதாரம் உட்பட 10 பாடங்களிலும் இவர் 'ஏ' பெற்றுள்ளார். இவர் இக்கல்லூரியில் முதலாம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து கல்வி கற்று வருவதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

கல்லூரியில் பெற்று வரும் கல்வியே இந்த விசேட சித்திக்கு பேருதவியாக அமைந்தது. தனியார் கல்வி நிலையங்களில் இரண்டு, மூன்று பாடங்களுக்கு மட்டுமே சென்று கற்றேன். இனி க.பொ.த உயர்தர வகுப்பில் உயிரியல் பிரிவில் உயர்கல்வியை மேற்கொள்ளவிருக்கின்றேன் வைத்திய கலாநிதியாக எதிர்காலத்தில் பதவி பெற்று மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலட்சியம்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில பரீட்சை யிலும் சித்தி பெற்றுள்ளேன். கல்லூரி வரு டாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2005, 2006 ஆம் ஆண்டுகளில் இருந்து விளையாட்டு வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டேன். வடக்கு - கிழக்கு மாகாண மட்ட போட்டியில் குண்டெறிதல் போட்டியில் 2005ஆம் ஆண்டில் 3ஆம் இடத்தைத் தேடிக் கொண்டேன்.

கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் நடத்திய பவளவிழா கட்டுரைப் போட்டியில் (2005இல்) முதலிடம் பெற்று

(15ஆம் பக்கம் பார்க்க)

# மதிப்பீட்டுப் பரீட்சைகளை அடிக்கடி நடத்தி எமது திறமைகளை வளர்க்கக் கல்லூரி உதவியது

### 10 'ஏ' சிறப்புச் சித்தி பெற்ற ஹாட்லி மாணவன்



எமது கல்லூரியில் ஆசிரியர்கள் அடிக்கடி மதிப்பீட்டு பரீட்சைக ளை நடத்தி, எமது திறமைகளை மேம் படுத்த வழிசெய்தனர். நான் பரீட்சையில் 10'ஏ' பெற்றுச் சிறப்புச் சித்தி யடைய அவை பெரி தும் உதவின.

நான் ஒரு வைத்தியராக வேண்டும் என்பது எனது பெற்றோரின் பெருவிருப்பம். அதனை நிறைவேற்றும் இலக்குடனேயே இதுவரை பயின்றேன். இனியும் கற்பேன்.

இவ்வாறு கூறுகிறார் ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையில் 10'ஏ' சிறப்புச் சித்திபெற்ற ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பாலகோபால் கோகுலன்

"ஹரிச்சந்திரன் வளவு" புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்தவர் கோகுலன். இவரது தந்தை புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாற்றுகிறார்.

கோகுலன் பின்வரும் விடயங்களை உதயன் வாசகர்களோடு பகிர்ந்து கொண்டார்.

அவர் சொன்னதாவது:-

ஐந்தாம் ஆண்டுவரை புற்றளை மகாவித்தியாலயத்தில் பயின்றேன். 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில், 163 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் 13 ஆவது இடத்தைப் பிடித்தேன்

புகழ்பூத்த ஹாட்லிக் கல்லூரியில் பயில வேண்டும் என்ற ஆவல் இருந்தது. புலமைப் பரிசிலில் சித்தி எய்தியதும் அங்கு சேர்ந்து கொண்டேன்.

ஆசிரியர்களை மதித்து, தன்னம்பிக்கையுடன், இறை நம்பிக்கை யோடு கற்றால் கல்வியில் உயரலாம். அவர்கள் தாம் கற்ற கல்வியால் மேன்மை அடையும் போது கல்லூரிக்கும், பெற்றோருக்கும் பெருமை சேர்க்க முடியும். நிச்சயம் கல்வியில் உயர்வடைந்து சமூகத்தில் மேன்மையுறுவர். இவ்வாறான மாணவர்களால் அவர்கள் பயின்ற கல்லூரிக்கும் பெயரெடுத்து பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்க முடியும். எனது இலட்சியத்தில் வெற்றிபெற புற்றளை சித்திவிநாயகர் தொடர்ந்தும் அருள்பாலிக்க வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

கணித, விஞ்ஞான வலயமட்டப்போட்டிகளில் இரண்டாம் வைகள் பரிசில்களும் பெற்றுள்ளேன். பாராட்டுக்களும் என்னைக் கல்வியில் ஊக்கம் கொள்ள வழிவகுத்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 25 | 07.04.2008 திங்கட்கிழமை |
| திதி: பிரதமை | காலை 07.49வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி மு.இ.08.42வரை |
| சுபநேரம் : | 12.07-01.37 |
| ராகுகாலம் : | 07.37-09.07 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.6

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டுப் பாடசாலைகளின் அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:

**இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி**

எஸ்.கண்ணன் - 8ஏ2பி, வி.கு.ஞான தயாளன் - 7ஏ3பி, சி.சபேசன் - 5ஏ4பிஎஸ், து.நவிலன் - 4ஏ3பி2சிஎஸ், ஜோ.கி. அனோசியன் - 4ஏ2பி4சி.

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

சந்திரகுமார் மேனன் - 10ஏ, பரராஜசிங்கம் சுஜீவன் - 10ஏ, சிறீதரன் தாருகாஸ் - 10ஏ, பஞ்சலிங்கம் தீபாதரன் - 9ஏபி, சிவபாலன் கௌசல்யன் - 9ஏசி, சேதுராஜா நிகபரன் - 9ஏசி, சிவகுமார் கௌதமன் - 9ஏஎஸ், பாலச்சந்திரன் துஷ்யந்தன் - 9ஏஎஸ்.

**வேலணை மத்திய கல்லூரி**

அருட்பிரகாசம் நிரோஜன் - 8ஏபிஎஸ், சண்ஜா சோமசுந்தரம் - 7ஏபி2சி, பரஞ்சோதி விஷ்ணுகாந் - 6ஏ3பிஎஸ், துளசிகா மகாலிங்கம் - 4ஏ4பி2சி, இரட்சநாதன் அருள்ராஜ் - 3ஏ3பி3சி, சாந்தலிங்கம் தர்சன் - 3ஏபி4சிஎஸ்,

அபிரா நாகரத்தினம் - 3ஏபி3சி 2எஸ், சங்கீதா சிறீதரன் - 3ஏ2பி4சி, சர் மிளா பொன்னையா - 3ஏபி4சிஎஸ், தேவ தாஸ் கபிலன் - 2ஏ2பி4சிஎஸ், செல்வ நாயகம் லக்ஸ்மன் - 2ஏபி4சி, கிருத்திகா குகராசா - 2ஏ3பி2சிஎஸ், சுவர்ந்தினி சுதந்திர ராஜா - 2ஏ3பிசிஎஸ்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

த.ஆரணியா - 10ஏ, உ.பிரணவதர்சன் - 9ஏபி, ப.பிரசாத் - 9ஏசி, சி.பவிதா - 9ஏஎஸ், வி.அரவிந்தன் - 9ஏஎஸ், த.ஹம்சாலினி- 8ஏபிஎஸ், நா.சுவீதனா - 8ஏசிஎஸ், மே.ஜோ. ரோஜர் ருவீனஸ் - 7ஏ3பி, சூ.சாரங்கவாணி- 6ஏ3பிசி, த.ரமணன் - 6ஏ3பி, இ.குகதாசன் - 5ஏ3பிசி.

**காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி**

சிவசோதி றமேஸ் - 9ஏசி, விசுவநாதன் பாலேந்திரன் - 7ஏபி2சி, சசிகலா செல்வரட்ணம் - 7ஏ2பிஎஸ், இதயநேசன் யசோதரன் - 5ஏபி2சி2எஸ்.

**இணுவில் மத்திய கல்லூரி**

வே.அஜந்தினி - 10ஏ, செ.நிஷாந்தி - 8ஏ2பி, ப.சங்கீதா - 5ஏ4பிஎஸ், ஜெ.ஜெயந்தா - 4ஏ3பி2சி, சி.சிந்து - 4ஏபி4சிஎஸ், ப.தர்சிகா - 4ஏபி4சிஎஸ், யோ.பிரபாலினி - 3ஏ4பி3சி, க.திருநிறைஞ்சன் - 3ஏ2பி4சி, யோ.பிரியதர்சன் - 3ஏ2பி4சி, ப.பிரியா - 3ஏ2பி3சிஎஸ், ச.ராஜி - 3ஏ3சி3எஸ், வி.வானதி -3ஏபி2சி2எஸ்.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

சிறிமுருகதாஸ் விசாகன் - 10ஏ, இராசலிங்கம் மாதங்கி - 10ஏ, குணபாலசிங்கம் கஸ்தூரி - 10ஏ, கனகரத்தினம் சோபிகா - 10ஏ, தங்கவேல் ஜெஜிதா - 10ஏ, ஜெய கணேசன் ஜெயதர்சினி - 10ஏ.

பொன்னம்பலம் ஜெனோத் - 9ஏபி, சரவணமுத்து சபேசன் - 9ஏசி, பரராஜசேகரம் கமலபரன் - 9ஏஎஸ், தம்பையா நிரோஜினி - 9ஏபி, நித்தியானந்தசோதி டியானி - 9ஏபி, ஜெயராஜா அனுஷியா - 9ஏபி, நாகலிங்கம் சரண்ஜா - 9ஏபி, செல்வராஜா வினுஜா - 9ஏசி, குணசிங்கம் மகிழினி - 9ஏபி.

ஸ்ரீகரன் யசோதரன் -8ஏ2பி, சந்திரசேகரம் கிருஷ்ணவேணன் - 8ஏபிசி, இரவீந்திரன் சஜீவன் - 8ஏபிசி, பொன்னுத்துரை கான்ஸ் - 8ஏபிசி, திருச்செல்வம் ஜெகத் - 8ஏபிஎஸ்,

முத்துலிங்கம் சுமன் - 8ஏபிசி, தனபாலசிங்கம் நிரோஜிதா - 8ஏபிசி, நித்தியானந்தன் கீர்த்தனா - 8ஏ2சி, இரத்தினம் யசோதாயினி - 8ஏ2பி, சிவலோகநாதன் அஜந்தினி - 8ஏ2பி.

திருநாவுக்கரசு ஈஸ்வரன் - 7ஏ2பிஎஸ், விநாயகமூர்த்தி சுபராஜ் - 7ஏ3பி, வேலாயுதபிள்ளை பிரநிஜன் - 7ஏ2பிசி, சிவபாலன் நெடுஞ்செழியன் - 7ஏ3பி,

ஜெயகுமார் கஜேந்தினி - 7ஏ3பி, சண்முகலிங்கம் ஜஸ்விணி - 7ஏ2பிசி, மகேஸ்வரன் புவித்திரா - 7ஏ2பிசி, சிவராஜா பிரசங்கீதா - 7ஏ2பிசி, ஐயாத்துரை அர்ச்சனா - 7ஏ 2பிசி, பரமேஸ்வரன் சிந்துஜா - 7ஏ3பி.

மகேந்திரலிங்கம் சுபன் - 6ஏ3பிஎஸ், பத்மநாதன் வித்தகி - 6ஏ4பி, யோகநாதன் கஸ்தூரி - 6ஏபி3சி, மகாதேவா ஆரணிகா - 6ஏ2பி2சி, மார்க்கண்டு கீர்த்திகா - 6ஏ3பிசி, பாலசுப்பிரமணியம் சரிதா - 6ஏபி3சி, கிருஸ்ணசாமி சுகிர்தனா - 6ஏ2பிசிஎஸ், சதாசிவம் சங்கரி - 6ஏ2பிசிஎஸ், கோடீஸ்வரன் பிரியங்கா - 6ஏ4பி, சிவ[illegible]ான சுந்தரம் பிரபூர்ணா - 6ஏ2பி2சி.

குமாரசாமி யோகசிறி - 5ஏ[illegible]2சி2எஸ், அருள்பிரகாசம் கஜானன் - 5ஏ4பிஎஸ், மயில்வாகனம் நிக்ஜா - 5ஏ4பிஎஸ், தங்கராஜா நிருஜன் - 5ஏ5பி, தவபாலன் லக்சன் - 5ஏ3பி2சி, வைரவப்பிள்ளை பிரமிலன் - 5ஏ3பிசிஎஸ்,

தம்பையா சோபிதா - 5ஏ 2பி2சிஎஸ், இந்திரபவன் சுபைதா - 5ஏ 3பி2சி, விக்னகுமார் சிறானி - 5ஏ3பி2சி, பேரின்பநாதன் தனுஷா - 5ஏ4பிசி, யோக ராஜா வர்சிகா - 5ஏபி3சிஎஸ், தயாபரன் வைஷ்ணவி - 5ஏ3பிசி, யோகேஸ்வரசர்மா மயூரி - 5ஏ 2பி3சி.

# ஹைதராபாத் புலமைப் பரிசில்

திருகோணமலை,ஏப்.6

ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்துள்ள ஆசிரியர்களுக்கு ஹைதராபாத்தில் பட்டம் பெறுவதற்கானப் புலமைப் பரிசில் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரிய ஆலோசகர், ஆசிரிய பயிற்சியாளர்கள் மற்றும் உதவிப் பணிப்பாளர்களாவதற்கு இப்பட்டம் உதவியாகவிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பம் செய்கிறவர்களுக்குப் பின்வரும் தகுதிகள் இருக்கவேண்டும்.

2008 ஏப்ரல் 20ஆம் திகதி 45 வயதுக்குட்பட்டவராய் இருத்தல்வேண்டும்.

ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து பட்டம் பெற்றிருத்தல், ஆங்கிலத்தில் பட்டப்பின் படிப்புடன் பொதுபட்டம், ஆங்கிலப் பயிற்சி ஆசிரியர், ஆங்கிலக் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கல்வி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் நேர்காணப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.

இதுபற்றிய விவரங்கள் மாகாண கல்வி அமைச்சினால் சகல வலயக் கல்வி பணிப்பாளர் அலவலகர்களுக்கும் அனுப்பிவைக்க ப்பட்டுள்ளன.

# ஜி.சீ.ஈ. பரீட்சையில் ஆங்கிலமொழி மூலத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் சகலரும் சித்தி

யாழ்ப்பாணம்,ஏப்.6

கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியிலிருந்து தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

இம்முறை இக்கல்லூரியிலிருந்து 26 மாணவர்கள் ஆங்கிலமொழி மூலம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினர். தோற்றிய அனைவரும் சித்தியடைந்துள்ளனர்.

இக்கல்லூரியின் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**ஆங்கிலமொழி மூலம்**

ஜெபரட்ணம் ஜோய் மாதவன் - 10ஏ, தேவராஜா நிரோஜித் - 7ஏ2பிசி, ஜோன் லெஜ்லி ஜனார்த்தன் - 7ஏபிசிஎஸ், மோகன்ராஜ் கஜ் ரோன்ராஜ் - 6ஏ4பி, ஜோசப் தேவராஜா கரந் சாந்தரூபன் - 6ஏ3பிசி, மகாலிங்கம் ஜோண் சேவியர் - 6ஏ2பி2சி, பிரேமநாயகம் ஜெயதாஸ் ரிபுசியஸ் தனேஸ் - 6ஏ2பி2சி, மாட்டின் நெல்சன் அனோஜ் கிளிமென்சன் - 6ஏ2பி2சி, வெலிச்சோர் வலன்ரைன் மொறிஸ் - 6ஏ2பிசிஎஸ், விக்ரர் டிலக்ஸன் - 5ஏ5பி, டக்லஸ் சதீஸ் - 5ஏ3பிசிஎஸ், கிறிஸ்ரி சுந்தரம் சியாம் சென்யூட் சுதர்சன் அஜந்தன் - 5ஏபி3சிஎஸ்.

**தமிழ்மொழி மூலம்**

மரியதாஸ் மிதிலன் - 10ஏ, தேவராஜா பிராங்கிலின் நிராஜ் - 9ஏசி, பஞ்சாட்சரம் பாரத் - 8ஏ2பி, வலன்ரைன் றிச்சி டொனால்ட் - 7ஏ2பிசி, பிலிப் வெனாட் றெஜி றஜீவன் - 6ஏ4பி, ஜெரோம் ஜேம்ஸ் கொலின்டன் - 6ஏ2பிசிஎஸ், கதிர்காமநாதன் பிறேம்நாத் - 5ஏ4பிசி, பிரான்சிஸ் ரேசன் நிதர்சன் - 5ஏ4பிசி, செல்வரட்ணம் அன்ஸ்லி பிலிப் - 5ஏ4பிசி, சாள்ஸ் விஜயரட்ணம் ஜோண் கலிஸ்ரஸ் - 5ஏ2பி 2சிஎஸ். (202)


## O/L Day Class

இதிலும் நாமே முன்னணியில்!
கடந்த ஆண்டு 50 மாணவர் கொண்ட 2 பிரிவுகள்
இம்முறை 50 மாணவர் கொண்ட 3 பிரிவுகள்
ஆரம்பம்: ஏப்ரல் 10 காலை 8 மணி
கட்டணம் மிக மிகக் குறைவு. வறிய மாணவர்க்கு சலுகைக் கட்டணம்
அனுமதிகளுக்கு விரையுங்கள்
மது கல்வி நிறுவனம், டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.


# பிரியாவிடை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.6

கொக்குவில் மத்தி மேற்கு (ஜே/128) கிராம அலுவலர் விஜயரட்ணத்திற்கு பதவி உயர்வு பாராட்டும் பிரியாவிடை விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (202)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஏப்.6

சுன்னாகம் சிவன் முன்பள்ளியின் 'பாலர் பாடல் கள்' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202)

# காளை மாடு குத்தி வயோதிபர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

காளை மாடு கொம்பினால் வயோதிபரின் வயிற்றில் குத்தி காயப்படுத்தியது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வைரவன் சின்னையா (வயது 70) என்பவரே காயமடைந்தவராவார்.

காளை மாட்டின் அருகே கட்டப்பட்டிருந்த பசு மாட்டினை மேய்ச்சலுக்கு விடுவதற்காக அவிழ்த்தபோது காளை மாடு கொம்பினால் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (202-207)

## இதய அஞ்சலி

அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்
(யாழ்.வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி), அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் துணைப் பொதுச்செயலாளர்)



அன்னாரின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.கிழக்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம், புத்தூர்.

## அந்தியேட்டி அழைப்பு

மலர்வு 28 * 01 * 1947



உதிர்வு 22 * 02 * 2008

அமரர் தங்கவேல் சீதாலட்சுமி (சீதை)

*உமது அன்பான நினைவுகளில் மூழ்கின்றோம் அம்மா!*
*நிம்மதியின்றியே நித்தம் அழுகின்றோம் அம்மா!*
*அப்பாவும் நாங்களும் ஆதரவற்றுத் தவிக்கின்றோம் அம்மா!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.*

இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி, உடுப்பிட்டி. (72856) குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

இசுசு 4HF1.350 மொடல் வாகன இயந்திரம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஆஸ்பத்திரி முன்பாக, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு. (72851)

## குத்தகைக்கு

நன்கு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலசரக்குக் கடை குத்தகைக்கு கொடுக்கப்படும்.
தொடர்பு: 222 5907
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (72857)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க
மாபெரும் மலிவு விற்பனை
25.03.2008 முதல் -14.04.2008 வரை
சகல புடைவைகளுக்கும் கழிவு வழங்கப்படும். றெடிமேட் ஆடைகளுக்கு அதிகூடிய விலைக்கழிவு வழங்கப்படும். ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் கடை திறந்திருக்கும்.
லைடன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி [பஸ் நிலையம் முன்பாக], யாழ்ப்பாணம். (8/552171)


## வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களின் கண்ணீர் அஞ்சலி

அமரர் த.பஞ்சலிங்கம்
(யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர்)

*அவர்களின் மறைவுக்கு எமது அஞ்சலியையும் அனுதாபத்தையும் தெரிவித்து அன்னாரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுகின்றோம். யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் தேவையை ஓரளவேனும் பூர்த்திசெய்த சேவையை நாம் மறக்கமாட்டோம்.*
*கல்விப்புலத்தில் சிறந்த அதிகாரியாக விளங்கியவராவார்.*

இணைப்பாளர், ஆசிரியர் சங்கம்,
வலி.மேற்கு, சித்தன்கேணி. (8/552174)

## கண்ணீர் அஞ்சலி

*எமது சங்கத்தின் முன்னாள் பணியாளரும் தற்போதைய கூட்டுறவுப் பரிசோதகருமாகிய*
இ.ஜெயமோகனராசா
*அவர்களின் தந்தை*
அமரர் வேலன் இராசையா



*அவர்கள் 04.04.2008 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியமையை அறிந்து எமது கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்துவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்
அச்சுவேலி ப.நோ.கூ. அபி.கூ. சங்கம். (72854)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு தலையிடியை ஏற்படுத்தியுள்ள அக்தரின் தடை விவகாரம்!



ஐந்து ஆண்டுகள் தடை விதித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தன்னை பலிக்கடா வாக்கி விட்டதாக அக்தர் ஆவேசமாகக் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகபபந்து வீச்சாளர் சொயிப் அக்தருக்கு 5 ஆணடுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் கொள்கைகளுக்கு எதிராகப் பேசியது மற்றும் இதர நடத்தை விதிமுறைகளை மீறிய குற்றத்துக்காக இந்த தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகவும் தண்டனையை எதிர்த்து அக்தர் 7 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.

இந்தத் தடையால் அக்தரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், தனது அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை விளக்குவதற்காக அக்தர் கடந்தவெள்ளிக்கிழமை இஸ்லாமாபாத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவரை அவரது ஆதரவாளர்கள் தோளில் சுமந்து கொண்டு வந்தனர். பாகிஸ்தான் கிரிக்கெட் தலைவர் நசிம் அஸ்ரப்பை கண்டித்து கோசங்களை முழங்கிய அவர்கள் அக்தர் மீதான தடையை நீக்க வேண்டும் என்று வலியுறுத்திகையில் சுலோக அட்டைகளையும் வைத்திருந்தனர்.

அக்தர் இது பற்றி நிருபர்களிடம் கூறியதாவது.

"பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நான் தனிப்பட்ட முறையில் பலிக்கடாவாக்கப் பட்டிருக்கிறேன். இந்தத் தடையை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். ஏனெனில், நான் பெரிய குற்றம் எதுவும் செய்யவில்லை. நான் ஏதேனும் ஒழுங்கீன சம்பவத்தில் ஈடுபட்டிருந்தால் அது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெளிவுபடுத்தி விட்டு அதன் பின் தண்டனையை அறிவித்திருக்க வேண்டும். தீர்ப்பை எதிர்த்து அடுத்த 48 மணிநேரத்திற்குள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு எதிராக மேன்முறையீடு செய்வேன். கிரிக்கெட்சபை விதிகளைப் பின்பற்றியே முறையீடு செய்வேன். எனது மேன்முறையீட்டை அவர்கள் நிராகரித்தால் நீதிமன்றம் சென்று நியாயம் பெறுவேன்.

பாகிஸ்தான் நாட்டுக்காக எனது 100 சதவீத பங்களிப்பை அளித்திருக்கிறேன். உடல் தகுதியுடன் இல்லை என்பதற்கும் நடத்தைக்கும் சம்பந்தம் கிடையாது. சில விடயத்தில் நான் பாகிஸ்தான் சபையை எதிர்த்துப் போராடியதால் எனக்குத் தடை விதித்து விட்டார்கள். இந்தத் தடை நியாயமற்றது. இதனை எதிர்த்து போராடுவேன். போராட்டத்தில் இருந்து பின்வாங்கமாட்டேன்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக கடுமையான காய்ச்சலிலும் விளையாடியிருக்கிறேன். அதற்கு பாகிஸ்தான் சபை கொடுத்த பரிசு தான் இது".

இதற்கிடையில் அக்தர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் புதிய பிரதமர் யூசுப் ராஸா கிலானி பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத தலைவர் நசிம் அஸ்ரப்புடன் பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அப்போது




அவர் அக்தர் மீதான தண்டனையை மறு ஆய்வு செய்யும் படி வலியுறுத்தியதாக தெரிகிறது.

இந்நிலையில், பாகிஸ்தான் விளையாட்டுத்துறை அமைச்சர் காவஜா ஆசிப் இது பற்றிக் கூறுகையில்:

"அக்தருக்கு விதிக்கப்பட்ட தண்டனை கடுமையானது. இதனை இந்த தேசம் ஏற்றுக் கொள்ளாது. எனவே, பாகிஸ்தான் சபை இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதனால், அணிக்குள் பிளவு உணடாகும். பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்" என்று கூறியுள்ளார்.

எம்.பி.க்களும் அக்தருக்கு ஆதரவாக குரல் கொடுத்திருக்கிறார்கள். ஹனீப் அப்பாசி என்ற எம்.பி. கூறுகையில்:

"அக்தரின் தடையை பாகிஸ்தான் சபை நீக்காவிட்டால் நாடாளுமன்றத்தில் பேசி நடவடிக்கை எடுக்க முயற்சிப்போம்" என்றார்.

### முன்னாள் அணித் தலைவர்கள் அக்தரின் தடைக்கு கடும் எதிர்ப்பு

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தருக்கு, அந்நாட்டு கிரிக்கெட் சபை 5 ஆண்டுகள் தடை விதித்துள்ளதற்கு முன்னாள் வீரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அணித் தலைவர்கள் இம்ரான் கான், ஜாவிட்மியான்டாட், சஹீர் அபாஸ் ஆகியோர் அக்தர் மீதான தடைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

"அக்தருக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழிவை நோக்கிச் செல்வதைக் காட்டுகிறது" என்று இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

அவர் மீது விதிக்கப்பட்டுள்ள தடை ஏற்றுக்கொள்ள முடியாதது. சபையின் தவறான கொள்கைகளால் நல்ல வீரர்களை நாம் இழந்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

வீரர்கள் மீது ஒழுங்கீன நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை. அது மிகவும் தீவிரமாக இருப்பதை நான் எதிர்க்கிறேன். சபையின் கொள்கை குறித்து விமர்சித்ததற்காக ஐந்து ஆண்டுகள் தடை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் மியான்டாட் தெரிவித்தார்.

அதேபோல் முன்னாள் தலைவர் சஹீர் அபாஸ், இக்பால் காசிம், ரசீப் லதீப் உள்ளிட்டோரும் அக்தருக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர்.

இதே நேரம் அக்தருக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து அவருடைய ரசிகர்கள் கோசமிட்டனர். செய்தியாளர்கள் கூட்டத்துக்கு வந்த அவருக்கு பதாகைகளை ஏந்தியும் கோசங்கள் எழுப்பியும் சிறப்பான வரவேற்பளித்தனர். சிலர் அவரை தோளில் தூக்கிக் கொண்டு அவருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

### தடை நியாயமானதென்கிறது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை


ஜிலானி

அக்தருக்கு விதிக்கப்பட்ட 5 ஆண்டுகாலத் தடை சரியானதுதான் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுங்கு நடவடிக்கை குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் தொடர்ந்து ஒழுங்கீனமாக நடந்து கொண்டதால் 5 ஆண்டு காலம் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் சிபாரிசை ஏற்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அக்தருக்கு விதிக்கப்பட்ட தண்டனை குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஒழுங்கு நடவடிக்கை குழுத் தலைவர் முனீர் ஹபீஸ் விளக்கமளித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்:

அக்தர் பலமுறை உடல் தகுதி பிரச்சினையில் சிக்கியுள்ளார். பல போட்டிகள் மற்றும் சுற்றுப் பயணத்தில் பாதியில் இடையூறு செய்துள்ளார். கிரிக்கெட் சபையின் கொள்கைகளுக்கு எதிராக அறிக்கை விட்டதால் மட்டும் அவருக்குத் தடை விதிக்கப்படவில்லை. இதுபோல் பல விதிமுறை மீறல்களில் ஈடுபட்டதால் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்றார்.


## பிரதமர், அமைச்சர்கள், முன்னாள் வீரர்கள் தடையைத் நீக்கக் கோரி கடும் அழுத்தம்

டிலான்

# பேயில் நம்பிக்கை மிக்க டென்மார்க் பெண்கள்



பேய்கள் இருக்கின்றன என்றும் சாஸ்திரத்தில் உண்மை இருக்கிறது என்றும், ஆவிகள் உள்ளன என்றும் பெரும்பாலான டென்மார்க் பெண்கள் நம்புவதாக புதிய ஆய்வு தெரிவிக்கின்றது. ஒவ்வொரு மூவருக்கும் ஒருவர் என்ற அடிப்படையில் இந்த மூடநம்பிக்கைகளினால் கவரப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும் பேய்கள் இருக்கின்றனவா என்ற கேள்விக்கு அரைப்பங்கு டென்மார்க் பெண்கள் இருக்கின்றது என்று நம்புவதாகவும் அந்தக் கணக்கெடுப்பு கூறுகின்றது. பேய்கள் இருக்கின்றனவா என்ற ஆய்வு கடந்த ஆண்டு 200 தடவைகளும் இவ்வாண்டு இதுவரை 82 தடவைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பில்லி, சூனியம், மந்திரதந்திரம் போன்றன தற்போது ஐரோப்பாவில் தமிழர்களிடையே ஆங்காங்கு அரங்கேறி வருகின்றன. வருங்காலங்களில் இவையும் டென்மார்க் மக்களிடையே பரவினாலும் ஆச்சரியப்பட இல்லை. புதிய ஐரோப்பிய ஒன்றியத்தில் மந்திரவாதிப் படிப்பை ஆரம்பித்தால் கைநிறைய உழைக்க வாய்ப்புள்ளதையும் மறுக்க இயலாது.



# மின்சாரத்தில் இயங்கும் படுக்கை



வேலை செய்து களைத்துப் போய் வீடு திரும்பியவுடன் படுக் கையை விரிப் பதற்குக் கூட முடியாமல் சோம்பலாக இருக்கிறதா? இனி அதற்காக கவலைப் பட வேண்டாம். இத்தாலியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் தானாகவே விரித்துக் கொள்ளும் படுக்கை (Automatic Bed) ஒன்றை உருவாக்கியிருக்கிறார். ஜெனிவாவில் நடை பெற்ற புதிய கண்டு பிடிப்புகளுக்கான சர்வதேச கண் காட்சியில் இந்தப் படுக்கையை அவர் அறிமுகப்படுத்தி உள்ளார்.

படுக்கை விரித்துக் கொள்ள தமக்கு மிகவும் சோம்பலாக இருக்கும் என்பதால் இதை உருவாக்கி இருப்பதாக கூறும் என்ரிகோ பெருட்டி என்ற அந்தப் பொறியியலாளர் சோம்பேறிகளுக்கு மட்டுமல்ல முதுகை வளைத்துக் குனிய முடியாமல் தவிக்கும் முதுவலிக்காரர்களுக்கும் இது உதவும் என்கிறார்.

# சாதனை செல்போன்



சீன வாலிபர் ஒருவர் உலகிலேயே மிகபெரிய செல் போனை உருவாக்கி சாதனை படைத்திருக்கிறார். இந்தச் சாதனைக்காக அவர் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பெற முயற்சி செய்கின்றார். சீனாவில் சாங்யுயான் நகரில் வசிக்கும் டான் எனும் அந்த வாலிபர் 3 அடி உயரம் கொண்ட மெகா செல்போனை உருவாக்கியிருக்கிறார்.

உலகிலேயே மிகப் பெரிய செல்போன் இது என்று அவர் கூறுகிறார். இதை விட இராட்சத செல்போனையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால் அவையெல்லாம் விளம்பரத்திற்கு வைக்கப்பட்ட பொம்மை செல்போன்கள்.

சீன வாலிபரின் செல்போன், மற்ற போன்களை போல பயன்படுத்தக் கூடிய உண்மையான செல்போன் என்பது தான் விசேடம்.

இதிலிருந்து பேசுவதா அல்லது எஸ்.எம்.எஸ்.அனுப்புவதோ சாத்தியம். மேலும் கமரா வசதியும் இதில் உண்டு.

மிகப் பெரிய போனை உருவாகக வேண்டும் என்ற உத்தேசத்தோடு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இந்தப் போனை உருவாக்கி இருப்பதாக டான் கூறிகின்றார்.

இதனை செய்து முடிக்க முடியும் எனும் நம்பிக்கையை ஏற்படுத்தியது தனது அப்பாதான் என்றும் அவர் கூறுகிறார்.

# சொக்லெட் கோட்டை



24 மணி நேரத்தில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்க முடியுமா? குரோஷியாவைச் சேர்ந்த மனிதர் ஒருவர் இப்படி 24 மணி நேரத்தில் ஒரு கோட்டையை உருவாக்கி இருக்கிறார்.

ஆனால் அவர் உருவாக்கிய கோட்டை கல்லையும், மண்ணையும் ஆதாரமாகக் கொண்டதல்ல. சொக்லெட் கட்டிகளை கொண்டு அந்தக் கோட்டையை அவர் உருவாக்கி இருக்கிறார்.

சுமார் 10 அடி உயரம் கொண்டதாக அமைந்துள்ள அந்தக் கோட்டைய முழுக்க முழுக்க சொக்லெட் கட்டிகளைக் கொண்டே வடிவமைத்திருக்கிறார். இதற்காக 10 ஆயிரம் சொக்லெட்கட்டிகளை அவர் பயன்படுத்தி இருக்கிறார். இவற்றின் மொத்த எடை 10 தொன் ஆகும்.

இந்தச் சொக்லெட் கோட்டை கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஏலத்திற்கு வரும் ஷாஜகான் வாள்



காதலின் சின்னமான தாஜ்மகாலை கட்டிய ஷாஜகான் பயன்படுத்திய தங்கத்தாலான வாள் ஏலத்தில் விற்பனைக்கு வருகிறது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த புடைவை வியாபாரியான ஜாக் டெசன்பென்ஸ் என்பவருக்கு சொந்தமான இந்த வாள் இந்த மாதம் 10ஆம் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஷாஜகான் பற்றிய விவரங்கள் பொறிக்கப்பட்டுள்ள இந்த வாள் 10 லட்சம் டொலருக்கு விலை போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
முன்னாள் அதிபரும்
யாழ்ப்பாண கல்வி வலய
பிரதிக் கல்விப்
பணிப்பாளரும் இலங்கைத்
தமிழர் ஆசிரியர் சங்க
சிரேஷ்ட துணைப் பொதுச்
செயலாளருமாகிய

**அமரர் தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்**

அவர்களின் பிரிவாற்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.

(72770)

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில் பின்வரும் பொருத்தமான பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படவிருக்கின்றன. ஆர்வமும் தகுதியுமுடைய வர்கள் தங்கள் சுயவிவரங்களைக் கொண்ட விண்ணப்பத்தை 15.04.2008 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

I. தொழில் பயிற்சி இணைப்பாளர்கள்
II. நிதி உதவியாளர்
III. பயிற்றுவிப்பாளர்கள்
- 01. உணவு பதனிடல்
- 02. பேக்கரி உற்பத்தி, கேக் ஐசிங்
- 03. வீட்டுத்தோட்டம்
- 04. கைவேலை/ கைவினை உற்பத்தி
- 05. ஆடை தயாரிப்பு
- 06. அழகுக்கலை

**தகைமைகள்:**

01. 25-45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
02. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத் தல் வேண்டும்.
முகாமைத்துவமாணி, வர்த்தகமாணி விரும்பத்தக்கது. (குறிப்பாக 1ஆம், 2ஆம் பதவியினருக்கு)
03. கணனியிலும், ஆங்கிலத்திலும் திறமையுடையவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
04. மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் விரும்பத்தக்கது.
05. குறித்த துறை சார்ந்த தகைமைச் சான்றிதழ்களும், ஆர்வமும் கொண்டிருத்தல் வேண்டும். (3 பதவிகளுக்கும் பொருந்தும்)

தொலைபேசி இல.: இல.060 221 3293

**இயக்குநர்,**
சிறுவர் கல்விக்கும் பயிற்சிக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம்,
மூளாய், சுழிபுரம்.

(அ/552150)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் இறைச்சி சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் ஹவுஸ்**
19, முருகேசர் லேன், நல்லூர். (72220)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழி, கல்பேட்
உயிர் நிறை 390/=, சுத்தம் செய்தது 590/=
நாள்நடைத் தீவனங்களும் புறொயிலர் கோழிக் குஞ்சுகளும் பெற்றுக்கொள்ளலாம்.
சிவகுமாரன் பாம், கல்வியங்காட்டுச் சந்தி.

## காணி விற்பனைக்கு

கோயில் வீதி, நல்லூரில் 1 பரப்பும் 2குழி சற்சதுரக் காணி (சுற்றுமதிலுடன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: செ.சுப்பிரமணியம்
167/10, கோயில் வீதி, நல்லூர்.
T.P.:021-222 5826
(72724)

## ஆடு விற்பனைக்கு

சினையுடன் யமுனாப்பாறி ஆடும், இன விருத்திக்குகந்த கடாய்க் குட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 17, நாவலடி லேன்,
பேச்சியம்மன் கோயிலடி, வண்ணார்பண்ணை
T.P.:0771550082.
(72741)

## வாடகைக்கு உண்டு

42/6, அம்மன் றோட், கந்தர்மடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: சீ.சரஸ்வதி
42/6, அம்மன் றோட்,
கந்தர்மடம்.
(72791)

## இந்தியாவில் பிரிந்தாவன் கல்லூரியில் கற்கும் வாய்ப்பு

- பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
- க.பொ.த.உயர்தரம் 2 பாடங்களில் சித்தியுடன்
- பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன

கற்கை நெறிகள்: B.Sc., B.B.M., B.C.A., B.Com.

சந்திப்புக்கான கால நேரத்தை முற்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 0777- 317043

**Company Secretarial Services (Pvt) Ltd.**
285c1/1, Stanley Tillakaratne Mawatha,
Jubilee Post, Nugegoda.

## விபத்தில் ஒருவர் காயம்

வீதி வளைவில் திரும்பிய மிதிவண்டியும் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதில் மிதிவண்டியில் பயணித்தவர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் மகேந்திரராசா (வயது56) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார். (202-207)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்

### வாழ்த்துகின்றோம்

க.பொ.த.(சா/த) பெறுபேறு- டிசம்பர் 2007

| இல. | பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 01. | க.விஷ்ணு | 10A |
| 02. | சி.மாதுமை | 10A |
| 03. | எம் நர்மதா | 8A 2B |
| 04. | எஸ்.சக்திதாயினி | 7A 2B 1C |
| 05. | டபிள்யூ.சதுசன் | 6A 3B 1C |
| 06. | எஸ்.சாருகி | 5A 2B 3C |
| 07. | பி.கஸ்தூரி | 5A 2B 3C |
| 08. | ஆர். றஜிந்தன் | 5A 2B 3C |
| 09. | எஸ்.சாளினி | 5A 1B 4C |
| 10. | பி.தர்மிலா | 4A 5B 1C |

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.
ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம், கனடா.
(72798)

## 6ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி இந்திராணி தங்கராசா (இந்து)**

மலர்வு: 02.01.1951 உதிர்வு: 13.04.2002
திதி: பிரதமை வளர்பிறை (06.04.2008)

இதய தேவதையே! எங்கள் இனிய அம்மாவே!
நீங்கள் எம்மைத் தனிக்க விட்டுச் சென்று
ஆண்டுகள் ஆறு ஆகினவோ.....?
பாசத்துடன் எமைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த
பண்பே உருவான தெய்வமே.....!
காலமெல்லாம் உங்கள் வருகைக்காகக் களிப்புடன்
தவம் கிடந்து காத்திருக்கும் உமது உதிரங்கள்.

பத்திரகாளி கோயில் ஒழுங்கை, பருத்தித்துறை.

கணவர்: க.தங்கராசா, மகன்: த.சுகந்தன்,
மகள்: த.சங்கீதா, மருமகன்: ச.சந்திரகாந்,
பேரப்பிள்ளைகள்: சஜீவன்,சஞ்சய்,
மருமகள்: சு.கஜந்தினி, அம்மா: அன்னரத்தினம்.

(72690)

## கலாலயா
பயிற்சியகம்
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

### விடுமுறைக் கால 12 நாட்கள் வகுப்புக்கள்

பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் மற்றும் மகளிருக்குமானது.

- பற்றிக் வர்ணம் தீட்டுதல்
- பூ வேலை
- கைவேலை
- கூந்தல் அலங்காரம்
- அடிப்படைத் தையல்
- சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
- அடிப்படை Facial அழகுக்கலை மற்றும் மணப்பெண்கள் அலங்காரம்

**ஆரம்பம் - 10-04-2008 வியாழன் காலை 9.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

பதிவாளர்.

## இன்றே இணையுங்கள் எம்முடன் .........!
## அறிந்து கொள்வோம் ஆரோக்கிய வாழ்வை!

DXN

- இலங்கையில் மட்டுமல்ல உலகில் 55 நாடுகளில் கிளைகளைக் கொண்டுள்ள மலேசியாவின் DXN நிறுவனத்துடன் நீங்கள் இணைந்து கொள்வதன் மூலம்.......!
- இன்றைய அன்றாட வாழ்வில் நாம் அனைத்து அம்சங்களிலும் இரசாயன நச்சுத்தன்மை கலப்பு வாழ்க்கைப் பழக்கவழக்கம் ஆகியவற்றின் மூலம் ஒரு ஆபத்தான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
- உங்கள் வீட்டில் எவரேனும் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், புற்றுநோய் என பலதரப்பட்ட நோய்களால் அவஸ்தைப்படுகின்றார்களா?
- உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நோயைக் குணமாக்க அதிகளவில் பணம் செலவிடுகின்றீர்களா?
- இவ்வாறான நோய்கள் வராமல் முன்கூட்டியே உங்களை பாதுகாக்க விரும்புகின்றீர்களா?

### இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

- இயற்கையான முறையில் இலவசமாக ஆரோக்கியத்தை பெறுவது எப்படி?
- DXN பொருள்களை கருவறையிலிருந்து கல்லறைவரை யாவரும் பாவிக்கலாம். எவ்வித பக்கவிளைவுகளும் அற்றது.

### மனிதனுக்குத் தேவை ஆரோக்கியம்..... வாழ்க்கைக்குத் தேவை ஆதாயம்.....!

- நீங்கள் தொழில் புரிந்து கொண்டிருப்பவர்களா? தொழில் இன்றி இருப்பவர்களா? எவரா யினும் பரவாயில்லை!
- பாரிய மூலதனம் தேவையில்லை, தொழில் ஸ்தாபனம் தேவையில்லை, மாதாந்தம் உங்கள் வருமானத்தைப் பெருக்கி கொள்ளும் முறை பற்றி அறிய எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
- தொடர்பு: தினமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

**DXN கிளை அலுவலகம், 36, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

T.P.: 0212226196, 0777730708, 0776139307

E.mail: info@dxnlanka.com Website:www.dxnlanka.com

(72918)

## கட்டட நிர்மாணத்துறைப் பணியாளர்களுக்கான
## வெற்றிடங்கள்

வவுனியா நகரில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய கட்டட நிர்மாண வேலை ஸ்தலங்களுக்குக் கீழ்க்குறிப்பிடப்படும் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் தங்குமிட வசதிகளுடன் உள்ளன. தகுதியுடையோர் கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

01. கட்டடப் பொறியியலாளர் -Site Engineer
B.Sc. Degree in civil Engineering with minimum 3 Years Experience.
02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டடம்)- Technical officer
N.D.T.in Civil Engineering with minimum 3 Years Experience
Or
NCT (Civil) with minimum 7Years Experience

**THE DIRECTOR**
V.V.Ramanathan and Company Private Limited
Hospital Circular Road, Vavuniya.
E.mail: vvrcopvt@sltnet.lk

(72753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஏவியன் இன்புளுவென்சா" பரவும் அபாயம்; புதுவகைக் காய்ச்சலை எதிர்கொள்ளத் தயாராகுவோம்

**அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சலின் பரவுகையினாலும் (out breaks) கண்டம் தாண்டும் பறவைகள் இளைப்பாறிச் செல்வதாலும் இலங்கையும் பறவைக் காய்ச்சலுக்கான அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது. எனவே "வருமுன் காப்போம்" என்ற விழிப்புணர்விற்காக.......**

அண்மைக் காலங்களில் அயல்நாடுகளில் பரவி பறவைகளிலும் மனிதர்களிலும் இறப்புக்களை ஏற்படுத்தி உள்ள பறவைக் காய்ச்சலினால் (Avian Influenza) எமது நாடும் பாதிப்படையக் கூடிய அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது. இலங்கை ஒரு தீவாக இருந்த போதிலும், பெரும்பாலான மக்கள் பண்ணை வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவதாலும், ஆகாரத்திற்காக வளர்க்கப்படும் பறவைகளின் பண்ணைகள் பரந்து காணப்படுவதாலும், கண்டந் தாண்டும் பறவைகள் இளைப்பாறிச் செல்லும் இடமாக அமைவதாலும், பறவைக் காய்ச்சல் பரவுவதற்கான அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது.

பறவைக் காய்ச்சல் என பொதுவாக அழைக்கப்படும் "பறவைகளைத் தாக்கும் இன்புளுவென்சா" என்பது இன்புளுவென்சா (Influenza) எனப்படும் ஒரு வைரசினால் ஏற்படுத்தப்படும் ஒரு தொற்றுநோய். இது இன்புளுவென்சா வைரசினால் மனிதர்களில் ஏற்படுத்தப்படும் குளிர் கபசுரம் (flu காய்ச்சல்) என பொதுவாக அழைக்கப்படும் இன்புளுவென்சாவின் ஒரு வகையே ஆகும். அண்மைக்காலங்களில் இந்த பறவைக் காய்ச்சலானது பறவைகளை மட்டுமன்றி மனிதர்களையும் தாக்கி இறப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இதுவரையில் பறவைக் காய்ச்சலானது ஒரு மனிதனில் இருந்து இன்னொரு மனிதனுக்கு தொற்றக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பதற்கான தரவுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இவ்வகையான ஆற்றல் பெறப்படுமாயின் மட்டுமே முன்னைய காலங்களில் இன்புளுவென்சா மனிதர்களிடையே திடீரென தோன்றிப் பரவி (Pandemic) பல மில்லியன் கணக்கான உயிரிழப்புக்களை ஏற்படுத்தியதை போன்று ஏவியன் இன்புளுவென்சாவும் எதிர்வரும் காலங்களில் மனிதர்களில் உலகலாவிய ரீதியில் பரவுவதற்கான




சாத்தியக்கூறைக் கொண்டிருக்கும். பறவைக் காய்ச்சலானது மனிதர்களில் வழமையான வைரல் புளுவை ஒத்த அறிகுறிகள் தொடக்கம் சிக்கலான நிலைமைகள் வரை உருவாகுவதுடன் உயிரிழப்புக்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே உயர் தொற்றுகை அடையக்கூடிய பறவைக் காய்ச்சலின் உலகலாவிய பரவுகை உயிர்ச்சேதங்களை மட்டுமன்றி பாரியளவு சமூக பொருளாதார நட்டங்களையும் ஏற்படுத்தும் அபாயத்தை கொண்டுள்ளது. "வருமுன் காப்போம்" என்பதற்கமைய உரிய நேரத்தில் தகுந்த முற்காப்பு நடவடிக்கைகளை கையாளுவதன் மூலம் பறவைக் காய்ச்சல் பரவும் அபாயத்தை தவிர்த்துக் கொள்ளமுடியும்.

**மனிதர்கள் மற்றும் பறவைகளில் இன்புளுவென்சாவை ஏற்படுத்தும் இன்புளுவென்சா வைரஸ்**

இன்புளுவென்சா வைரசுக்கள் அவற்றின் புரதக் கலவைகளை அடிப்படையாகக் கொண்டு வகை ஏ (A), பி (B), சி (C) என வகைப் படுத்தப்பட்டுள்ளன. வகை ஏ இன்புளுவென்சா வைரஸ் ஆனது வாத்துக்கள், கோழிகள், பன்றிகள், திமிங்கிலங்கள் போன்ற பலவகையான மிருகங்களில் தொற்றுக்களை ஏற்படுத்துவதோடு மனிதர்களிலும் தொற்றுக்களை ஏற்படுத்துகின்றன. இன்புளுவென்சா பி (B) வைரஸ்கள் மனிதர்களில் பரந்தளவில் தொற்றுக்களை ஏற்படுத்துகின்றன. இன்புளுவென்சா சி (C) வைரஸ்கள் மனிதர்களிலும் மற்றும் பன்றிகள், நாய்கள் போன்ற மிருகங்களிலும் தொற்றுக்களை ஏற்படுத்துகின்றன. இவ்வகை தொற்றுக்களை ஏற்படுத்துகின்ற வைரசுக்களில் இன்புளுவென்சா "ஏ" வைரசுக்களே அதிக ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய வையா

**ஞானகலா ஞானகுரு**
*4 ஆம் வருடம்,*
*சமுதாய மருத்துவத்துறை, மருத்துவபீடம்.*

கக் காணப்படுகின்றன. முன்னைய காலங்களில் ஏற்பட்ட இன்புளுவென்சாவின் உலகலாவிய பரவுகைகளும் இந்த இன்புளுவென்சா "ஏ" வைரசினாலே ஏற்படுத்தப்படனவாகும். மேலும் இன்புளுவென்சா "ஏ" வைரஸ்கள் அவற்றின் மேற்பரப்புகளில் காணப்படும் புரதங்களை அடிப்படையாகக் கொண்டு HA (Haemagglutinin), NA (Neuraminidase) எனும் உபவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 16 HA உபவகைகளும் 9 NA உபவகைகளும் இன்புளுவென்சா "ஏ" வைரசுக்களில் அடையாளங்காணப்பட்டுள்ளன. தற்போது மனிதர்களில் இன்புளுவென்சா ஆனது $H_1N_1$, $H_1N_2$, $H_3N_2$ எனும் உபவகைகளாலும், பறவைகளைத் தாக்கும் ஏவியன் இன்புளுவென்சா ஆனது $H_5N_1$ எனும் உபவகையினாலும் ஏற்படுத்தப்படுகின்றது.

**மனிதர்களில் ஏற்படும் இன்புளுவென்சா என்பது என்ன?**

பொதுவாக வைரஸ் புளு (Flu) என அழைக்கப்படும் இன்புளுவென்சா ஆனது வைரசினால் சுவாசப்பாதையில் ஏற்படுத்தப்படுகின்ற தீவிரமாகப் பரவுகை அடையக்கூடிய ஒரு தொற்றுநோய் ஆகும். சகல வயதுடையவர்களும் இந்த இன்புளுவென்சா நோயினால் பாதிக்கப்படுகின்ற போதிலும் சிறுவர்கள் கூடியளவில் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தப் புளு (Flu) ஆனது கார்த்திகை தொடக்கம் சித்திரை வரைக்குமான பருவ காலங்களிலேயே மனிதர்களை பெருமளவில் பாதிக்கின்றது.

**இன்புளுவென்சாவின் அறிகுறிகளும் அடையாளங்களும்**

இன்புளுவென்சாவின் அடையாளங்களும் அறிகுறிகளும் பெரும்பாலும் சாதாரண தடி



இன்புளுவென்சா வைரஸ்

மனை ஒத்தவையாகக் காணப்பட்டாலும் அவற்றை விட தீவிரமான தன்மையைக் கொண்டிருக்கின்றன.

காய்ச்சல், நடுக்கம், தலையிடி, தசைகளில் வலி, மூக்கிலிருந்து நீர் வடிதல், காது வலி, வயிற்றோட்டம், தலைச்சுற்று, பசியின்மை, சோர்வு, இருமல், தொண்டை நோ, வயிற்றுப் பிரட்டல், வாந்தி என்பன Viral புளு (Flu) இற்குரிய அறிகுறிகளாகும்.

இருமல், சக்தியின்மை போன்ற அறிகுறிகள் தொடர்ச்சியாக காணப்பட்டபோதிலும் காய்ச்சலும் ஏனைய அறிகுறிகளும் 5 நாள்களின் பின்பு மறைந்து விடுகின்றன. இன்புளுவென்சாவிற்குரிய அனைத்து அடையாளங்களும் அறிகுறிகளும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் மறைந்துவிடுகின்றன. இருந்த போதிலும் சரியான முறையில் சிகிச்சை பெறாவிடின் குறிப்பாக சிறுவர்களில் நியூமோனியா மற்றும் உயிராபத்தினை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகள் உருவாகலாம்.



புளு வைரஸ்கள் கடத்தப்படுதல்

**இன்புளுவென்சா பரவும் முறைகள்**

புளு (Flu) வினால் பாதிப்படைந்த ஒருவர் தும்மும்பொழுதும் மற்றும் இருமும் பொழுதும் காற்றின் மூலமாக நோய்க்கிருமி ஏனையவர்களுக்கு பரவலடைகின்றது. இதனைவிட புளுவினால் பாதிப்படைந்த ஒருவர் கையாண்ட பொருள்களை ஏனையவர்கள் தொடுவதன் மூலம் அவர்களுக்கு இந்நோய் கடத்தப்படுகின்றது. சனத்தொகை கூடிய இடங்களாகிய பாடசாலை, நெருக்கமான வாழ்விடங்கள் போன்ற இடங்களில் இந்நோயானது விரைவாக காற்றினால் பரவலடைகின்றது.

**இன்புளுவென்சாவிற்கெதிரான சிகிச்சை முறைகளும் தடுப்பு மருந்துகளும்**

இன்புளுவென்சாவானது வைரசிற்கு எதிரான (Anti viral) சில மருந்துகள் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இன்புளு வென்சாவிற்கு எதிரான தடுப்பு மருந்துகள் வருடந்தோறும் புரட்டாதி, கார்த்திகை மாதங்களிற்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் வழங்கப்படுகின்றன. இத்தடுப்பு மருந்து இன்புளுவென்சா ஏற்படும் காலப்பகுதிகளில் ஒருவர் இன்புளுவென்சா நோயினால் பாதிப்படையும் சந்தர்ப்பத்தை 80% அளவிற்கு குறைவடையச் செய்கின்றது. தடுப்பு மருந்தை பெற்றுக்கொண்ட ஒருவருக்கு இன்புளுவென்சா ஏற்படும் சந்தர்ப்பத்தில் நோய்க்குரிய அறிகுறிகள் குறைவாகவும் தீவிரமற்றவையாகவும் காணப்படுகின்றன.

புளு (Flu) வைரசுக்கள் மாற்றமடைவதால் ஒரு வருடத்தில் இன்புளுவென்சாவிற்கு எதிராகப் பெறப்பட்ட தடுப்பூசி அடுத்த வருடத்தில் ஏற்படும் இன்புளுவென்சாவிற்கான தடுப்பு மருந்தாக அமையமாட்டாது. ஒரு நபருக்கு இன்புளுவென்சா தடுப்பு மருந்து ஏற்றுவதற்கான செலவு 16 ஸ்ரேலிங் பவுண் (3500 இலங்கை ரூபா)

**உலகை வலம் வரும் பறவைக்காய்சல் இங்கும் வருமா? 01**

ஆக காணப்படுவதனால் இலங்கையில் பொதுவாக அரசாங்க வைத்தியசாலைகளில் இத்தடுப்பு மருந்து வழங்கப்படுவதில்லை.

**இன்புளுவென்சாவிற்கெதிரான தடுப்பு மருந்தை பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள**

- இன்புளுவென்சா [illegible] அபாயத்தை குறைக்க விரும்பும் அனைவரும்
- 6 மாதம் தொடக்கம் 5 வயது வரைக்குமான சிறுவர்கள்
- நீண்டகால நோய் நிலைமைகளை கொண்டிருக்கும் முதியவர்கள் *(உதாரணம் - சக்கரை வியாதி, ஆஸ்துமா)*
- நீண்டகாலமாக அஸ்பிரின் மருந்தி லிருக்கும் 6 மாதம் தொடக்கம் 18 வயது வரைக் குமான சிறுவர்கள்
- இன்புளுவென்சா நோய் ஏற்படும் பருவகாலத்தில் கர்ப்பந்தரிப்பவர்கள்
- இன்புளுவென்சா நோயாளிகளுடன் தொடுகையுறுபவர்கள்
- 50 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும்

முட்டை மற்றும் இன்புளுவென்சா தடுப்பு மருந்திற்கு ஒவ்வாமையை கொண்டிருப்பவர்களும் காய்ச்சலுடன் இருப்பவர்களும் இன்புளுவென்சாவிற்கான தடுப்பு மருந்து பெறுவதை தவிர்த்தல் வேண்டும்.

**வைரல் புளு (Viral flu) பரவலடைவதை தவிர்ப்பதற்கு**

- வைரல் புளுவிற்கான அறிகுறிகளைக் கொண்ட ஒருவர் வாய் மற்றும் மூக்கை மூடிய வண்ணம் இருமுதல் அல்லது தும்முதல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வாயையும் மூக்கையும் மூடுவதற்கு பயன்படுத்திய துணியை குப்பைக் கூடைக்குள் போடவேண்டும்.
- நோய் ஏற்பட்டவர்கள் இருமும்போதும் தும்மும் போதும் வெளியேற்றப்படும் திரவக் கழிவுகளுடன் அல்லது அவற்றால் அசுத்தமாக்கப்பட்ட பொருள்களுடன் தொடுகை ஏற்படின் சவர்க்கார நீரினால் அல்லது அற்ககோல் மற்றும் நோய்க்கிருமிகளுக்கெதிராக பயன்படுத்தப்படும் பதார்த்தங்களைப் பயன்படுத்தி தங்கள் கைகளை நன்றாக கழுவவேண்டும்.
- வைத்தியர் ஒருவரினால் வைரல் புளு ஏற்பட்டுள்ளதாக உறுதிப்படுத்த அல்லது சமூகத்தில் வைரல் புளு பரவும் சாத்தியம் அதிகமாக உள்ள பருவகாலங்களில் காய்ச்சலுடன் சுவாசநோய்க்குரிய அறிகுறிகளை கொண்டுள்ள ஒருவர் காய்ச்சல் இருமல் போன்ற அறிகுறிகள் நீங்கும்வரை வீட்டை விட்டு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பொது இடங்களுக்கு செல்ல வேண்டி ஏற்படின் வாயையும் மூக்கையும் மறைக்க கூடிய வகையிலான முகமூடி (Mask) அணிய வேண்டும்.
- நோய்க்கான அறிகுறிகளைக் கொண்ட பாலூட்டும் தாய்மார் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கும் சந்தர்ப்பங்களிலும் இவ்வகையான மாஸ்க் (Mask) அணிதல் வேண்டும்.

(தொடரும்....)

## ஒலி மாசுறுதல் குறித்து அக்கறை வருமா எங்களுக்கு?

கடந்த சிவராத்திரி தினத்தன்று ஒலிபெருக்கி பாவிப்பதாயின் தம்மிடம் அனுமதி பெற வேண்டும் என்று யாழ்ப்பாணப்பொலிஸார் அறிவித்திருந்தனர். இது மிகவும் வரவேற்கப் படவேண்டிய ஒரு விடயம்.

இலங்கையில் இரவு பத்துமணி முதல் ஆறு மணிவரை ஒலிபெருக்கி பாவிப்பது உயர்நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

ஒலிபெருக்கி பாவனைத் தடையை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அறிவித்தபோது ஒலி பெருக்கிப்பாவனை தொடர்பான பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் ஆங்கிலப்பத்திரிகைகள் மூலம் இடம்பெற்றன.

முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஒலி மாசடைதல் கட்டத்திற்கு எதிர்ப்புத்தெரிவித்தனர் ஒலி மாசடைதல் சட்டம் அடிப்படை மனித உரிமை மீறல், மதவழிபாட்டுச் சுதந்திரத்தைப் பாதிக்கின்றது என்றெல்லாம் பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒலி மாசடைதல் சட்டத்தை எதிர்க்க வேண்டுமென முஸ்லிம்கள் வலியுறுத்தினர்.

முஸ்லிம் அமைச்சர்கள் உட்படப் பலர் கையொப்பமிட்டு மகஜர்களையும் அனுப்பி வைத்தனர். எனினும் சில உலமாக்கள் அரசாங்கச் சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் சட்டதிட்டத்திற்குக் கீழ்படிந்து நடக்கவேண்டும் எனவும் கருத்துத்தெரிவித்தனர்.

மதவழிபாட்டுச் சுதந்திரம் என்பது பிற மதத்தவருக்கு அல் லது ஏனையோருக்கு இடைஞ் சல் இல்லாமல் வழிபடுவதே என முஸ்லிம்கள் சிலர் உட்பட பலரும் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதினர். உலமாக்களில் பெரும்பாலானோர் இதனை ஏற்றுக்கொண்டனர்.

**மதவழிபாட்டு சுதந்திரம் எப்படி அமையவேண்டும்**

இலங்கை பல்லின கலாசார, பல்லின மக்களையுடைய ஓர் ஜனநாயகநாடு இங்கு பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களும் வாழ்ந்து வருகின்றனர். யாருக்கும் தான் விரும்பிய மதத்தைப் பின் பற்றவோதான் விரும்பிய விதத்தில் வழிபாடு செய்வதற்கோ உரிமையுண்டு. ஆனால் ஒரு வருடைய மத வழிபாட்டுச் சுதந்திரம் அடுத் தவரின் உரிமையைப் பறிக்கக்கூடாது.

தமிழ் நாட்டில் ஒலி மாசடைதல் சட்டம் சில வருடங்களுக்குமுன் னரே நடைமுறைக்கு வந்துவிட்டது. சீனா வில்வாகனங்கள் பலத்த ஒலியுடன் "ஹோர்ண்" அடிப்பது தண்டனைக்குரிய குற்றம், கொழும்பிலும் பஸ் வண்டிகள் பலத்தஒலியுடன் "ஹோர்ண்" அடிப்பதைத் தடைசெய்ய வேண்டும்மெனச் சிலர் பத்திரிகைகளில் எழுதியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்த ஆலயங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஒலிபெருக்கிகள் தாராளமாகபயன்படுத்தப் படுகின்றன. இவற்றைவிட தற்போது யாழ்ப்பாணத்தில் வீடுகளும் கிறிஸ்தவ சபைகளாக மாறி வருகின்றன. இவ்வாறு சபைகளாக மாறியுள்ள வீடுகளில் ஒலிபெருக்கி பாவிக்காவிட்டாலும் பிராத்தனை நேரங்களில் அருகிலுள்ள வீடுகளில் மக்கள் நிம்மதியாக இருக்கமுடியாத சூழ்நிலை காணப்படுகிறது.

யாழ்.நகரின் கேந்திரப் பகுதியில் கிறிஸ்தவ சபையொன்றின் ஆலயம் அமைந்துள்ளது. அருகில் இரண்டு தனியார் வைத்தியசாலைகள் அமைந்துள்ளன இந்தச் சபையில் ஆராதனை நடைபெறும் வேளையில் வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகள் பெரிதும் சிரமப் படுகின்றனர். இது ஓர் உதாரணம் மட்டுமே.

**ஜேர்மனியில் அம்மன் கோயில்**

ஜேர்மனியிலுள்ள உறம் நகரில் அம்மன் கோயிலொன்று உள்ளது இந்தக் கோயில் கட்டுவதற்கு அனுமதிக்கு விண்ணப்பித்தபோது நீங்கள் கோயிலில் மேளம் அடிப்பீர்கள் அது மக்களுக்கு இடையூறாக இருக்கும். கோயில் கட்ட விரும்பினால் மக்கள் குடியிருப்புக்களற்ற தொழிற்சாலைகள் நிறைந்த (Industrial area) பகுதியில் கட்டுங்கள் என மாநகராட்சி மன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்பிரகாரம் தற்போது தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில் காமாட்சியம்மன் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

**தமிழகத்து மக்களால் இயலுமானால் எங்களால் ஏன் முடியாது...?**

யாழ்ப்பாணத்திலும் ஒலி மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்குக் சகல மதப்பிரமுகர்களும், சமூக அக்கறையுள்ளோரும் ஒத்துழைக்க வேண்டும். நீதிமன்றம், பொலிஸ் என்பனவும் ஒலிமாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒலி மாசடைதல் சட்டம் இறுக்கமாகப்பின்பற்றப்படுகிறது என்றால் படித்த சமூதாயம் எனக்கூறிக் கொள்ளும் யாழ்ப்பாணத்தில் ஏன் பின்பற்ற முடியாது? ✱

- ந.பரமேஸ்வரன்.

## கூர்நோக்கு

### சிவராத்திரியன்று விழித்திருந்தோம் எதனால்,... பயத்தால்!

கடந்த சிவராத்திரி தினத்தன்று ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு, இரவு ஆலயங்களில் நடைபெறுகின்ற பூசைகளிலும் பிரார்த்தனைகளிலும் கலந்துகொள்ள வசதிசெய்து கொடுக்கப்பட்டது.

அன்று இரவு முழுவதும் இளைஞர்கள் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் அதிகவேகமாக கூக்குரலிட்டும், அவலக்குரல்களில் கத்தியும் ஓடித்திரிந்தனர். அதுமட்டு மல்லாது இராணுவத்தினரின் வேண்டுகோளின்படி வீடுகளுக்கும் கடைகளுக்கும் வெளியே போடப்பட்டிருந்த மின்விளக்குகள் களற்றப்பட்டன. சில அடித்து நொருக்கப்பட்டன. அன்று இரவு முழுவதும் சிவனை நினைத்தோமோ இல்லையோ, பயத்தை நினைத்து விழித்திருந்தோம்.

இந்த நிலமை எதைக்காட்டுகிறது? பல தசாப்தங்களாக அவசரகால நிலையிலும், ஊரடங்கு நிலையிலும் வாழப் பழகிக்கொண்ட எமக்கு, சுதந்திரமாக, மற்றையோருக்கு கெடுதலின்றி நடமாட முடியவில்லையே....! வெட்கம் நாம் அமைதியாக இருக்க எமக்கு ஒரு துவக்குத் தேவையாக உள்ளதோ என்ற எண்ணம் எம்மையும் அறியாமலேயே மனதில் எழுகிறது. இந்த நிலை வேண்டும்தானா...?

எங்கள் மனநிலை எப்போது மாறும்? மற்றையோருக்கு தீங்கு செய்யாமல் வாழப்பழகுவோமா? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?......?

[illegible] இசையாக அடுத்தவருக்கு இடைஞ்சல் உண்டு பண்ணாத, ஏனையோரை [illegible]க்கூடிய, பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாக எப்போது வாழப்பழகப் போகிறோம்?

இது சகல மதங்களின் போதனைகளுக்கும் கிடைத்த தோல்வியா?

- முருகபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரத்தில் மட்டுமன்றி மேலதிக நேரத்திலும் கற்பிக்க ஆசிரியர்கள் தயாராக இருக்கவேண்டும்



23 வருடங்கள் ஸ்கந்தாவில் பணியாற்றிய பின் கடமையைச் சரிவரச் செய்த திருப்தியோடு

ஓய்வுபெற்ற அதிபர் **சிவாஜி**

யாழ்ப்பாணத்தில் நூற்றாண்டு விழாக் கண்ட கல்லூரிகளில் ஒன்றான கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 12 வருடங்கள் அதிபராக இருந்து பெரும்பணியாற்றியவர் கந்தசாமி சிவாஜி. தனது 31 வருட அரச சேவையின் பெரும் பகுதியாகிய 23 வருடங்களில் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக ஸ்கந்தாவிலேயே கடமைபுரிந்தவர். சிறந்த ஆங்கில அறிஞராகவும் ஆசானாகவும் திகழும் அவர், யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப் படிப்புகள் பிரிவு, யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம் என்பவற்றின் வருகை நிலை விரிவுரையாளராகவும் உள்ளார். அவரது அனுபவங்களை அறிந்துகொள்வதற்காக அவரது உடுவில் இல்லத்தில் சந்தித்தோம்..

கேள்வி: ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உங்களது பணி பற்றிக் கூறுங்கள்?

பதில்: 1977 ஆம் ஆண்டிலே இரத்தினபுரித் தமிழ் வித்தியாலயத்திலே ஆசிரியப் பணியை ஆரம்பித்த நான் 1986 ஆம் ஆண்டு ஸ்கந்தாவிற்கு வந்தேன். இடையிலே ஒரு வருடம் பல்கலைக்கழகத்திலே கற்ற காலத்தை விட்டால் 23 வருடங்கள் ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராகப் பணியாற்றியிருக்கிறேன்.

கே: நீங்கள் ஆங்கில ஆசிரியராகவே உங்களது ஆசிரியப் பணியைச் செய்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஆங்கிலத் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

ப: எனது ஆர்வத்திற்கான முதலாவது காரணம் எனது தாயார் தங்கரத்தினம்தான். உடுவில் மகளிர் கல்லூரியிலே கற்ற அவர் நான் 8 ஆம் தரம் படிக்கும்போதே ஒலியனியல் (Phonetics) பற்றிக் கற்பித்து எனது ஆங்கில உச்சரிப்பு சிறப்பாக அமைய உதவினார். அவர் சிறுவயதிலிருந்தே ஆங்கிலமொழியில் எனக்கு ஆர்வத்தை ஏற்படுத்திவந்தார். ஆங்கில ஆரம்பக் கல்வியைப் பெற்ற சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆங்கில ஆசான் குலசிங்கம் அவர்களும் எனது ஆர்வத்துக்குக் காரணமாக இருந்தார். இவை எல்லாவற்றுக்கும் மேலாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நான் பெற்ற கல்வியும் காரணமாகியது.

கே: பாடசாலையிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் ஒரே நேரத்தில் ஆசிரியப் பணியை செய்திருக்கிறீர்கள். இரண்டுக்கும் இடையே எத்தகைய வேறுபாட்டை உணர்ந்தீர்கள்?

ப: பாடசாலையிலே திறமையான மாணவன் தொடக்கம் மெல்லக் கற்போர் வரை பலதரப்பட்ட மாணவர்கள் இருப்பார்கள். எனவே அவர்களை முன்னேற்றுவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். ஆனால் நான் கற்பித்த தனியார் நிறுவனங்களில் மாணவர்கள் உயர் கல்வியின் ஒரு பாடப் பகுதியாக ஆங்கிலத்தைக் கற்கும் ஆர்வத்தோடு வருவதால் சிறு முயற்சியே போதுமானது.

**கழுத்தில் வந்து விழுந்த மாலை**

கே: எப்போது அதிபர் பதவியைப் பெற்றீர்கள்? அப் பதவியை நோக்கிய உங்கள் படிப்படியாக வளர்ச்சி எவ்வாறு அமைந்திருந்தது?

ப: 1997 இல் நான் அதிபரானேன். அந்தப் பதவி எனது படிப்படியான வளர்ச்சி யாலோ, நகர்விலாலோ ஏற்பட்டதன்று. பாடசாலையின் பிரதி அதிபர்கள் இருவரும் திடீரென ஓய்வுபெற அப் பதவியை ஏற்குமாறு பலரால் வற்புறுத்தப்பட்டேன். பின்னர் அதிபரான கமலநாதன் அவர்கள் கல்விப் பணிப்பாளராகச் செல்ல நான் விரும்பாமலேயே மாலை என் கழுத்தில் விழுந்தது.

கே: ஆசிரியராகக் கடமையாற்றியதற்கும், அதிபராகக் கடமைஆற்றியதற்கும் இடையில் எத்தகைய வேறுபாடுகளைக் கண்டீர்கள்?

ப: எனக்கு விருப்பமான தொழிலாக ஆசிரியத் தொழிலே இருந்தது. எனினும் அதிபராகக் கடமையாற்றிய 12 வருடங்களும் ஆசிரியர்கள் தந்த முழுமையான ஒத்துழைப்பால் அதிபர் பதவியும் மகிழ்ச்சிகரமானதாக அமைந்தது.

கே: நீங்கள் அதிபராகப் பொறுப்பேற்ற போது பாடசாலையில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென நினைத்தீர்கள்? அவை நிறைவேற்றப்பட்டனவா?

ப: மாணவரின் ஆங்கில அறிவு மட்டத்தை உயர்த்துதல், மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல், பல்கலைக்கழகம் செல்வோர் தொகையை அதிகரித்தல், ஆரம்பப் பிரிவை உருவாக்குதல், ஆன்மீகத்துடன் இணைந்த ஒழுக்கத்தை வளர்த்தெடுத்தல் என்பனவே எனது நோக்கங்களாக இருந்தன. இவை பெரும்பாலும் நிறைவேறிவிட்டன. 610 ஆக இருந்த மாணவர் தொகை 1331 ஆக இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

கே: நூறு வருடங்களுக்கு மேலாக ஆரம்பப் பிரிவு இல்லாமல் இயங்கி வந்த பாடசாலையில் ஆரம்பப் பிரிவைத் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது?

ப: எமது பாடசாலையில் ஆரம்பப் பிரிவு இல்லாத நிலையில் அயற்பாடசாலைகளில் இருந்து பல்வேறு தரங்களைக் கொண்ட மாணவர்கள் 6 ஆம் வகுப்பில் இங்கு வந்து கற்கின்றனர். பாடசாலைக்கு வரும் கல்வி அதிகாரிகளோ தரம் 6 இலேயே எழுத்தறிவு இல்லாத மாணவர்கள் இருப்பதாக குற்றஞ்சாட்டுகின்றனர். அதற்காக இம் மாணவர்களைப் பாடசாலையிற் சேர்க்காமல் விட்டால் அது 'ஏழைப் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்க வேண்டும்' என்ற ஸ்தாபகரின் இலட்சியத்துக்கு முரணாக அமையும். இதற்குத் தீர்வாகத் தரமான மாணவர்களை ஆரம்பத்திலிருந்தே உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் ஆரம்பப்பிரிவு உருவாக்கப்பட்டது. அது இப்போது சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

## ஆங்கில மொழி மீதான எனது ஆர்வத்திற்கு தாயாரே காரணம்

கே: நீங்கள் மாணவர் தொடர்பாக மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பவர் என்று கூறப்படுகிறது. எல்லா மாணவர்களையும் மென் போக்கினால் நெறிப்படுத்த முடியுமா?

**மென்மையான போக்கினால் மாணவர்களைத் திருத்த முடிந்தது**

ப: முடியும் என்றே உறுதியாகக் கூறுவேன். இம்முறை மூலம் மாணவர்களை நல்வழிப்படுத்த முடியும் என்பது எனது அசையாத நம்பிக்கை. தவறிழைத்த எத்தனையோ மாணவர்களைத் திருத்தியும் இருக்கிறேன். பிறர் கருத்துகளுக்கும், நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் விடயத்தில் மென்மையாக இருந்தேனே தவிர எனக்குச்சரியென்றுபட்ட விடயத்தைச்செய்ய எப்போதும் உறுதியாக இருந்திருக்கிறேன்.

கே: ஆசிரியர்களிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பை எதிர்பார்த்தீர்கள்? அது கிடைத்ததா?

ப: ஆசிரியர்கள், பாடசாலை நேரத்தில் தான் கற்பித்தல் என்று இல்லாமல் மேலதிக நேரத்திலும் செயற்படத் தயாராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தேன். எல்லோரும் என் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார்கள். ஒவ்வொரு பாடத்திலும் துறைபோந்த ஆசிரியர்கள் என்னிடம் இருந்தனர்.

இந்த ஆசிரியர்கள் மேற்கொண்ட நம்பிக்கையால் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதியிருக்கும் எனது மகளைத் தனியார் கல்வி நிலையத்திற்கு அனுப்பவில்லை. அவளுக்கு இது கவலையாக இருக்கலாமென்று ஒரு முறை தனியார் கல்வி நிலையத்திற்கு அனுப்பியபோது இரண்டு நாள்களில் தனக்குப் பாடசாலைக் கல்வியே போதும் என்று அவளே நின்றுவிட்டாள். இம்முறை அவளுக்குச் சிறந்த பெறுபேறு கிடைக்கும் என ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

கே: பாடசாலையிற் பல்வேறு பௌதீக வள அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளீர்கள். இவற்றுக்கான நிதியை எங்கிருந்து பெற்றீர்கள்?

ப: நான் அதிபராகப் பொறுப்பேற்ற காலத்தில் பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி என்பவற்றை நடத்துவதற்கு வீடுவீடாகச் சென்று பணம் சேர்க்க வேண்டிய தேவை இருந்தது. காவலாளி, சுத்திகரிப்புத் தொழிலாளி, மைதான உதவியாளர் பதவிகளுக்கு நியமனங்கள் செய்யப்படவில்லை. இத்தகைய சூழலில் பிரதி அதிபர் திரு. ஆறு திருமுருகன் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சொற்பொழிவுக்காகச் சென்ற போது பழைய மாணவரிடமிருந்து பெருமளவு நிதியைச் சேர்த்துத் தந்தார். பெருமளவான அபிவிருத்தித் திட்டங்களுக்கும் தற்காலிக நியமனங்களுக்கும் இந் நிதியே உதவியது.


கே: 23 வருடங்கள் பணியாற்றிய பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற அந்த இறுதி நாளில் உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

ப: துன்பமும், இன்பமும் கலந்ததாக இருந்தது. இவ்வளவு காலமும் கட்டிக் காத்த பாடசாலையைநல்ல அதிபரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஏக்கமும் கலந்ததாக எனது உணர்வுகள் இருந்தன. இவற்றுக்கும் மேலாக எனது கடமையைச் சரியாகச் செய்தேன் என்ற மனத்திருப்தியோடு நான் ஓய்வு பெற்றேன்.

**செவ்வி: ம.பா. மகாலிங்கசிவம்.**

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 06



அனுப்புபவர் பெயர்:..........

விலாசம்:..........

..........

கையொப்பம்:..........

**மேலிருந்து கீழ்**

1. குறுமுனி.
2. மறைவில் திட்டமிடுவது.
3. காட்டில் காணலாம்.
4. செடியின் பகுதி.
5. வழிமுறை.
7. காப்பிய நாயகி.
8. உலகமே இதில்தான் செயற்படுகிறது.
10. எது.
12. முன்னிருந்து பார்த்தாலும் பின்னிருந்து பார்த்தாலும் ஒன்றே.
15. கூட்டுதல்.
16. இந்துக்களின் வரவேற்பு வைபவத்தில் முதலிடம் வகிப்பது.
17. சிலை.
18. சாணம்.
20. செயலைத் தொடங்கத் தேடும் நேரம்.

**இடமிருந்து வலம்**

1. சோம்பல்.
6. அமர்வது.
7. வெட்டு.
8. பக்கச் சார்பின்மை.
9. ஞானிகள் செய்வது.
11. திடமாக வகுக்கப்பட்டது.
13. இராஜ வம்சமொன்று.
14. தப்பிதம்.
17. புத்தகத்தின் அங்கம்
18. கவிதைக்கு வேண்டுமொரு அம்சம்.
19. சாதுவானது.
21. நிறம்.
22. கண்ணாடியில் தெரிவது.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 06**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு (16.04.2008) முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.06 இல் வெற்றிபெற்றோர் விவரம் 20.04.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துக்கொள்ளத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு, பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறையிலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 04 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1) அகதிகள். (5)சபா. (7) திரிகடு. (8)அகவை. (9)திக்கம். (11)ரவை. (12)கடாமி. (13)பொன். (14)கைது. (15)விறு. (16)மா. (18)பிணைப்பு. (20)பகல். (22) புதுடில்லி.

மேலிருந்து கீழ்
(1)அதிகாரம். (2)கரி. (3)திகதி. (4)கடுக்கன். (5)சக. (6)பாவையர். (8)அம்பிகை. (10)கடா. (13)பொறுப்பு. (15)வினை. (17)கால். (18)பிரி. (19)புது. (20)பல். (21)கலி.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 04இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — செல்வி சிவப்பிரியா வைரவநாதன், நீர்வேலி தெற்கு, கரந்தன் சந்தி, நீர்வேலி.

2 ஆம் பரிசு — திருமதி சரஸ்வதி லிங்கமூர்த்தி, அமெரிக்கமிஷன் பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

3 ஆம் பரிசு — திரு.இ.சந்திரசேகரன், மாசியப்புலம் வீதி, ஏழாலை வடக்கு, ஏழாலை.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு ... தபாலில் ... வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதார மணம்

சினிமாவிலும் சிறுகதைகளிலும் நடக்க முடியாத சம்பவம் சின்னத்தங்கச்சியின் வாழ்க்கையில் நடந்தது. இருபத்து மூன்று வருஷங்களுக்கு முன்பு அவளுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்ததைச் சொல்லவில்லை. அவர்கள் வளர்ந்து ஒருவருக்கு அடடா! அந்த இரண்டும் பெண்கள் என்பதை முன்பே சொல்ல மறந்து போய் விட்டது அவர்களில் ஒரு பெண்ணுக்குக் கல்யாணமான பிறகுதான் இவ்வளவும் நடந்தது.

அந்த இரண்டு பெண் குழந்தைகளுக்கும் கண்மணி, சிந்தாமணியெனப் பெயரிட்டு வளர்த்தாள். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இம்மாதிரிப் பெயர்கள் ''பாஷானா'' யிருந்தன. இப்போது இரண்டெழுத்து மூன்றெழுத்துப் பெயர்கள் நாகரிகமாயில்லை, அதைப்போல, இருவருக்கும் ஒரே மாதிரி, ஒரே நிற உடைகள் வாங்கிக் கொடுத்தாள். இதென்ன, தகப்பனில்லாத குழந்தைகளா, எல்லாமே தாய் செய்தது என்று கூறுவதற்கு என்று கேட்டால், சின்னத் தங்கச்சிக்குக் கணவன் இருந்தும் இல்லாதது போலத்தான். திடகாத்திரமான தேகம் படைத்தவனாயிருந்தும் ஒரு விபத்தில் அகப்பட்டதன் காரணமாகக் கைகளில் ஒரு நடுக்கம். எந்த வேலையும் அவனாற் செய்ய முடியாது. ஆகவே, சின்னத்தங்கச்சிக்குக் குடும்பப் பாரத்தைத் தாங்கும் பொறுப்பு ஏற்பட்டது.

கொண்டுவந்த சீதனத்தையும் உழைப்பையும் விவேகத்தையும் மூலதனமாகக் கொண்டு முன்னேறிக் கொஞ்சம் மிச்சமும் பிடித்து இருபது ஆண்டுகளைத் தள்ளி விட்ட பிறகு பெண்களின் கல்யாணத்தைப் பற்றிச் சிந்திக்கலானாள். இருவரும் தோற்றத் தில் ஒரே மாதிரி இருந்தார்கள். உருவம் மட் டும் ஒத்திருந்ததே தவிர குணமும் நடத் தையும் வெவ்வேறாயிருந்தன. ஒரே பந்த லில் இரண்டு கல்யாணங்களையும் நடத்தி விட்டால்.... நல்ல யோசனை! ஆனால் இரண்டு மாப்பிள்ளைகளுக்கு எங்கே போவது? எங்கேயாவது, இரட்டைக் குழந்தைகள் ஆண்களாக இருந்தால்.... அடடா! ஆசையைப் பார்! தினமும் எல்லோருக்கும் இரட்டைக் குழந்தைகளா பிறக்கின்றன?

வாகீசன் வந்தான், பெண் பார்க்க. இரண்டு பெண்களும் அலங்கரித்துக் கொண்டு நின்றார்கள். ''இவள்தான் பெண்'' என்று முன்னாற் கூட்டி வந்து ''பாடத் தெரியுமா, ஆடத் தெரியுமா'' என்று பரீட்சிப்பது இந்த ஊர் வழக்கமில்லையே. ''முன்னால் நிக்கிறவள்'' என்று காட்டினார்கள். முன்னால் நின்றவளுக்கும் பின்னால் நின்றவளுக்கும் தான் வித்தியாசமில்லையே! அவனுக்குப் பிடித்து விட்டது. யாரை? கண்மணியையா சிந்தாமணியையா?

கண்மணி அடக்கமானவள்; கலகலப்பாகப் பேசமாட்டாள். சிந்தாமணி கொஞ்சம் நோஞ்சான். ஆனால் சிரிப்பும் குதிப்புமாக இருப்பாள். இதையெல்லாம் எங்கே கண்டான் வாகீசன். சரியென்று சொல்லி விட்டான். அவனுக்கு வகை சொல்ல, வழிகாட்ட ஆளில்லை. கன்னியைக் காட்டினார்கள், கண்ணை மூடிக் கொண்டு கல்யாணத்துக்குச் சம்மதித்தான்.

''யாராவது கல்லுக்குத்தி'' விட்டாலும் என்ற அச்சத்தில் மேற்கொண்டு கருமங்கள் விறு விறு என்று நடைபெற்றன. சமயாசார முறைப்படி விவாகம் நிறைவேறுவதற்கு முன்னரே சட்டபூர்வமான விவாகப் பதிவு நடைபெற்றது. விவாகப் பதிவுகாரர் இருவரையும் பதிவுப் புத்தகத்திற் கையெழுத்திடச் செய்தார். அதன்பின் ஒரு பிரசங்கமே செய்தார். ''சமயாசாரப்படி அல்லது சாதியாசாரப்படி கல்யாணம் நடக்காது போனாலும் நீங்களிருவரும் இன்று தொடக்கம் கணவன் மனைவியாகி விட்டீர்கள்...... இக்கல்யாணப் பதிவு மாவட்ட நீதிமன்றத்தினால் தள்ளப் பட்டாலன்றி, அல்லது இருவரிலொருவர் காலஞ்சென்றாலன்றி இன்னொரு கல்யாணம் செய்து கொண்டால் இலங்கை பீனல் கோட்டிலுள்ள சட்டத்துக்கிணங்க இருதார மணம் புரிந்த குற்றத்துக்குள்ளாகி அதற்குரிய தண்டனைக்கு ஆளாவீர்கள் என எச்சரிக்கை செய்கிறேன்''. இவ்வாறு அவர் கூறி முடித்தபோது வாகீசனும் கண்மணியும் பயபக்தியுடன் நின்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். பதிவுகாரரின் மீசையும், கண்ணாடியும், பெரிய சந்தனப் பொட்டும், விரலுக்குப் பதிலாகச் சுட்டிக் காட்டுவதற்கு அவர் உபயோகித்த தடித்த ''பெளண்டன்'' பேனாவும் சிந்தாமணிக்குச் சிரிப்பையுண்டு பண்ணின. கண்மணிக்குப் பின்னால் முகத்திற் புன்னகை தவழ நின்றாள்.

இரண்டு மாதங்களுக்கிடையில் திருமணமும் கோலாகலமாக நடைபெற்றது. சின்னத்தங்கச்சி கெட்டிக்காரி. செட்டாக, சிக்கனமாகக் காரியத்தை முடித்து விட்டாள். ஆனால் வெளிப்பார்வைக்குக் குறைவில்லாமல் மேளதாளம், ஊர்வலம், அலங்காரம், பலகாரம் எல்லாம் குறைவில்லாமல் ஏற்பாடாகியிருந்தன. தனிக்குடித்தனத்திற்குக் கண்மணி கணவனோடு புறப்பட வேண்டியிருந்தது. கைக்கு அடங்கிய பிள்ளையாய் வீட்டோடு வாழ்ந்தவளுடன் கூடவே சென்று எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்து விட்டுக் கொஞ்ச நாள்களின் பின் திரும்பலாம் என்று சின்னத்தங்கச்சி நினைத்தாள். தன் கணவன் கதி என்னாவது என்று கலங்கினாள். எல்லாம் தெரிந்த வாயாடியாக, வல்லமை படைத்தவளாக உள்ள சிந்தாமணியின் விஷயத்திலானால் இப்படித் கவலைப்பட நேராது.

கணவனும் மனைவியும் சினிமாவுக்குப் போகும்போது குதித்துக்கொண்டு சிந்தாமணியும் போய்விட்டாள். வாசலில் கார் வந்து நின்றதும் ''என்ன அத்தான், செருப்பைக் கூடக் கழற்றாமல் நேரே வீட்டுக்குள்ளே வருகிறீர்களே?'' என்று சிந்தாமணி கேட்டதும் காதில் விழுந்தது. எவ்வளவு திறமைசாலி? அன்பு, கனிவு எதிலும் குறைவில்லை. கருமத்திலும் கண். பெண் என்றால் இப்படியல்லவா பிறக்க வேண்டும். சொல்லுவார் புத்தி கேட்கிற, எதற்கும் பயந்து நடுங்குகிற கண்மணி என்ன செய்யப் போகிறாள்? சின்னத் தங்கச்சிக்கு ஒரு யோசனை ''பளிச்'' சிட்டது. துணைக்குச் சிந்தாமணியை அனுப்பி வைத்தாள்....

அப்புறமென்ன? கண்மணியுடன் சிந்தாமணியும் ரயில் ஏறினாள். சந்தித்த நண்பருக்கு எவள் தன் மனைவியென்று சொல்லிக் காட்டுவதே வாகீசனுக்குப் பெரிய சிரமமாகி விட்டது. தோற்றத்தில் ஒற்றுமையைத் தவிர்க்க உடையிலாவது வேற்றுமையைப் புகுத்தியிருக்க வேண்டும். அதுவும் இல்லை. மெதுவாகக் கண்மணியிடம் விஷயத்தை விளக்க வேண்டும் என்று அப்போது எண்ணினான்.

அவன் வேலைபார்த்த இடம் கொழும்பு. அங்கிருந்து பத்து மைலுக்கு அப்பால், பட்டினத்தின் வெளியோரக் கிராமம் ஒன்றில் அவனுக்குக்கட்டுப்படியாகக்கூடிய வாடகையில் ஒரு வீட்டையமர்த்தி இருந்தான். அங்கு போய்ச்சில மாதங்களுக்குள் கல்யாண சுவாரசியத்தின் புதுமெருகு மறைந்தது. கண்மணியின் கவர்ச்சி குன்றிவிட்டதாகப்பட்டது. எதைச் சொன்னாலும் ஏதென்று கேட்காமல் நசிந்து பணியும் கண்மணியிடத்தில் அவன் கசப்படைந்தான்.

ஆனால்.... இதிலே புதுமை என்ன இருக்கிறது? ''அத்தான்'' என்று கணீரென்று கொக்கரிக்கும் சிந்தாமணி, தகாததைச் சொன்னாற் சகோதரிக்காகப் பரிந்து சண்டைபோடும் சிந்தாமணி அவன் கருத்தைத் தொட்டாள். விறைப்பாய் நிமிர்ந்து நிற்கும் மரத்தைத் தான் பாய்ந்தோடும் ஆறு முட்டித் தள்ளுகிறது. மரமும் விழுகிறது. ஆனால் வளைந்து கொடுக்கும் புல்லை அது தடவிவிட்டுச் செல்கிறது.

பத்து நாள் நிற்கவென்று வந்தவள், மாதமொன்றாகியும் ஊருக்குத் திரும்பவில்லை. சின்னத்தங்கச்சி கடிதம் எழுதினாள், ''உடனே வா'' என்று. ரயிலிலே கூடிக்கொண்டு வர வசதியாகத் துணை கிடைத்ததும் வருவதாகப் பதில் வந்தது. வாகீசனின் போக்கை கண்மணி உணராமல் இல்லை. எதிர்த்தால் எல்லாம் தலைகீழாகி விடுமோவென்று ஏங்கினாள். எதிர்த்தே பழக்கமில்லாதவளுக்கு, அடிமையாக வாழ்வதேஇன்பம்என்றுநினைப்பவளுக்கு இது வாழ்க்கையிலே தவிர்க்க முடியாத அம்சம் என்று பட்டது.

ஊரிலிருந்து வந்த ஒருவர் சிந்தா மணியை அழைத்து வரும்படி சின்னத்தங்கச்சி சொல்லி விட்டதாகக் கூறினார். சின்னத் தங்கச்சி திடீரென்று முடிவு பண்ணினாளே ஒழிய, அவளுக்கு இரண்டு பெண்களையும் பிரிந்திருப்பது கஷ்டமாய் இருந்தது. கலகலப்பாகவிருந்த வீட்டில் ''உம்மணா மூஞ்சி'' மாதிரி இருப்பது கசந்தது. அத்துடன் தான் செய்தது தவறோ என்ற ஐயமும் எழாமல் இல்லை. வாழ்க்கையில் எவ்வளவையோ கண்டவளுக்கு இதை உணர்வது முடியாத காரியமா?

தன்னால் வர முடியவில்லை. தகப்பனாலும் முடியாது. அயலவன் ஒருவன் கொழும்புக்குப் போவதை அறிந்ததும் ஒத்தாசை கேட்டாள். இவ்வளவுக்கும் இடையில் மூன்று மாதங்கள் ஓடிவிட்டன.

சிந்தாமணி வருவாளென்று காத்திருந்த சின்னத்தங்கச்சிக்கு வாகீசனின் கடிதம்தான் வந்தது. ''கண்மணி கர்ப்பிணி ஆகிவிட்டாள். இன்னுமிரண்டு மாதங்களில் அவளை ஊரில் கொண்டு வந்து விடுகிறேன். அதுவரை...'' பேரப்பிள்ளையைக் காணப்போகிறோமென்று குதூகலிப்பதா? பெற்றபிள்ளையைக்காணோமே என்று குமுறுவதா என்று தெரியவில்லை சின்னத்தங்கச்சிக்கு. ''பொறுப்போம்... வரட்டும்'' என்கிற முடிவைத் தவிர வேறேதுவும் தென்படவில்லை, அவளுக்கு.

கடைசியில் அவர்கள் மூவரும் வந்து சேர்ந்தார்கள். கண்மணி தாயைக் கண்டதும் களிப்புக் கடலில் மூழ்கினாள். இரண்டு மூன்று நாள்களுக்குப் பின் வாகீசன் திரும்ப வேண்டியிருந்தது. சிந்தாமணியும் பெட்டி படுக்கையைத் தயார் பண்ணுவதைக் கண்ட சின்னத்தங்கச்சி ''என்னடி?'' என்றாள்.

''அம்மா, அத்தான் வரட்டுமாம், கொஞ்ச நாளைக்குத் தானே'' என்றாள் சிந்தாமணி.

சின்னத்தங்கச்சி புருவத்தை நெரித்த மாதிரியைப் பார்க்க வேண்டும்! அதில் நாணேற்றியிருந்தால் சிந்தாமணி சிம்பு சிம்பாகியிருப்பாளென்றுதான் தோன்றும். அவள் வாயைத்திறப்பதற்குள்ளெங்கிருந்தோ வாகீசன் வந்து சேர்ந்தான்.

''ஏன் மாமி அவள் இங்கேயேயிருந்தால் உங்களுக்குக் கஷ்டம் தானே? என்னோடு வரட்டும்'' என்றான். இருபத்து மூன்று வருஷங்களாகக் கஷ்டமில்லாமல் இப்போது என்ன வந்தது என்று அவளுக்குக் கேட்கத் தோன்றியது. ஆனால் மருமகனுடன் மரியாதைக் குறைவாகப் பேச நேர்ந்தாலும் என்று சும்மா போய்விட்டாள்.

தன் கணவரிடம் ''கேட்டீர்களா?, என்றாள். அவன் கேட்டாலும் சரிதான், கேளாவிட்டாலும் ஒன்றுதான். கண்மணியிடமே நேரிற் கேட்டாள். அவள் ''தடுக்காதீர்கள் அம்மா போகட்டும்'' என்றாள். சின்னத்தங்கச்சிக்குக் கதைகளிலேகூட இப்படி நடக்காதே என்றுதான் தோன்றியது.

மறுநாள் வாகீசனும் சிந்தாமணியும் கொழும்புக்குப் போனது உண்மை. இருதாரக் குற்றத்துக்குத் தண்டனையுண்டு சட்டப் புத்தகத்திலே. ஆனால் இது இருதார மணம்தானா? இதில் நடவடிக்கை எடுப்பது யார்? எப்படி? சுற்றிவளைத்துச் சொல்வானேன்? சிந்தாமணியும் வாகீசனும் தெய்வீக உறவு பூண்டு வாழவில்லைத்தான். ஆனால் அதற்கு மீட்சி எது? மீட்சிக்கு மார்க்கமெது?.1959 (ஈழநாடு)

*(நன்றி: தேவன் - யாழ்ப்பாணம் சிறுகதைகள்)*



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் தேவன் - யாழ்ப்பாணமும் ஒருவர்; மிகப் பிரபல்யமானவர்.

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர், நாவல் ஆசிரியர், நாடக ஆசிரியர், விஞ்ஞானக் கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர் என்ற பன்முகத் தோற்றத்தைக் கொண்ட தேவன் - யாழ்ப்பாணம் என்ற இளையப்பா மகாதேவா சமூக மட்டத்தில் பேச்சாளர், நாடக இயக்குநர், நாடகத் தயாரிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், அறிவிப்பாளர் எனப் பல்வகைப் புலமைகளை வெளிப்படுத்தியவர்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கியவர்; அதன் பின்னர் யாழ்.இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் கடமை புரிந்தார். அவ்வேளை பல இளம் எழுத்தாளர்களையும் நடிகர்களையும் வளர்த்துவிட்டவர்.

ஈழத்துச் சிறுகதைத் துறையில் 1944 ஆம் ஆண்டுமுதல் - தமது 20 ஆவது வயதில் இருந்து - ஏறக்குறைய 35 ஆண்டுகள் காலம் தன்னை ஈடுபடுத்தியிருந்த தேவன் - சிறந்த சிறுகதைகள் பலவற்றைப் படைத்தவர். ஈழத்தின் பல பத்திரிகைள் சஞ்சிகைகளில் - ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு, கலைச்செல்வி என்று பலவற்றில் அவர் எழுதினார்.

ஈழத்துச் சிறுகதைத் துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியோர் வரிசையில் தேவன் - யாழ்ப்பாணத்துக்கும் மிக முக்கிய பங்குண்டு. அமரராகிவிட்டார்.

# அவமானத்துக்கு ஆளானவோரின் முதல் எதிரி அவரவர் மனமன்றி வேறு எதுவும் இல்லை

துறுகல் அயலது மாணை மாக்கொடி
துஞ்சு களிறு இவருங் குன்ற நாடான்
நெஞ்சு களனாக நீயலென் யானென
தாவா வஞ்சினம் உரைத்தது
நோயோ தோழி நின் வாயினானே?

இருபது வருடங்களுக்கு முன்பு ஒரு சேவை நிறுவனத்தின் முழு நேர ஊழியராக நான் குறுகிய காலம் வேலை செய்ய நேர்ந்தது. ஏழ்மையின் முகங்களை நான் நெருங்கி அறிய நேர்ந்த காலகட்டம் அது. ஏழ்மையின் கொடுமை பசியைவிட நோயில் அதிகம். நோயை விட உறவுகளில் அது உருவாக்கும் அதி மூர்க்கத்தில் அதிகம். கூலி கிடைக்காத அன்று தாய் பசித்தழும் கைக் குழந்தையைத் தூக்கித் தெருவில் வீசுவதை நான் கண்டிருக்கிறேன் என்பதை இப்போது என்னாலேயே நம்ப முடியவில்லை. சகஜமாக இத்தகைய வன்முறை வெளிப்படுவது கணவன் - மனைவி உறவில்தான்.

**சங்க இலக்கியத்தின் அடிப்படை அழகியல்**

எனவே ஒரு பொதுச் சேவகனின் அன்றாடப் பணிகளில் குடும்பத் தகராறைத் தீர்த்து வைப்பது முக்கிய இடம் வகிக்கிறது. படித்தவன் என்ற காரணம் அன்று இருபதை எட்டாத எனக்குத் தீர்ப்புச் சொல்லும் தகுதியாக அமைந்தது.

அப்போது வந்த ஒரு வழக்கில் பெண் கேரள ஈழவக் குடும்பத்தைச் சேர்ந்த அழகி. பெயர் அம்முக்குட்டி. பட்டப் படிப்புப் படித்தவள். தந்தை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர். வசதியான குடும்பப் பின்னணி. வாடகைக்கு விடும் பொருட்டு வீட்டின்மீது அவள் தந்தை ஒரு மாடி கட்டினார். கட்டியவன் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த இளம் கொத்தனார் சண்முகம். முதலில் குடிக்கத் தண்ணீர் கேட்டு வந்தவன், படிப்படியாக அவள் மனதில் இடம் பெற்றான். சாதி வேறு, அந்தஸ்தும் குறைவு

## இலக்கியப் பொழில்

என்பதனால் வீட்டில் ஏற்கமாட்டார்கள் என்பது இருவருக்கும் தெரிந்திருந்தது. அவன் அவளை ஊருக்குக் கூட்டிவந்துவிட்டான் - அவள் அப்பா அவளுக்காகச் சேர்த்து வைத்திருந்த அறுபது பவுண் நகையுடன்.

வந்து நான்கு மாதம் கழிந்துதான் அவளுக்கு அது அவன் சொந்த ஊர் அல்ல என்று தெரிந்தது. தன் சொந்த ஊரை விட்டுத் தள்ளி ஒரு வாடகை வீட்டில் அவளைக் குடி வைத்திருந்தான். அதன் காரணம் ஆறுமாதம் முடிவதற்குள் தெரியவந்தது. அவனுக்கு ஏற்கனவே திருமணமாகியிருந்தது. அதற்குள் அவள் நகைகளை அவன் வாங்கிவிட்டிருந்தான். 'இஷ்டம் இருந்தால் இரு, இல்லாவிட்டால் திரும்பிப் போ!' என்றான். அவளுக்குச் செலவுக்கு எதுவுமே தராமல் மாதக் கணக்கில் விட்டுச் சென்றான்.

சேவை நிறுவனத்தின் பார்வைக்குப் பிரச்சினை கொண்டு வரப்பட்ட போது அவள் பசியால் உருக்குலைந்து போயிருந்தாள். தந்தையின் வீட்டுக்குத் திரும்பச் [illegible] என்று அவளிடம் கேட்டேன். திட்டவட்டமாக மறுத்துவிட்டாள். வீட்டு விலாசமும் தரவில்லை. சண்முகம் பற்றி விசாரித்தபோது, அவன் இம்மாதிரி ஏற்கனவே இரண்டு முறை செய்திருந்தது தெரியவந்தது. அவனைப் பொலிஸில் பிடித்துக் கொடுக்கவேண்டும் என்று அவளிடம் சொன்னேன். அவள் அதற்கும் திட்டவட்டமாக மறுத்துவிட்டது எனக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது. அவளுக்கு ஒரு தையல் இயந்திரம் தர சிபாரிசு செய்ததோடு நான் ஒதுங்கிக் கொண்டேன்.

சண்முகம் போன்றவர்களின் வெற்றி இரகசியத்தை இன்று ஓர் எழுத்தாளனாக என்னால் ஊகிக்க முடிகின்றது. அவன் கவர்ச்சியான

## இயற்கை மீது தனது துயரை ஏற்றிவிட்டாள் அம்மு என்ற பெண்

வனோ, திடகாத்திரமானவனோ அல்ல. அறிவாளியும் அல்ல ஆனால் அவனிடம் பேசும்திறன் இருந்தது. கலிக்காமல் வேடிக்கையும் விளையாட்டுமாக அவன் பேசுவான் என்றாள் அம்மு.

அத்துடன் இம்மாதிரி நபர்க ளுக்கே உரிய முக்கியமான சிலதந்திரங்களும் அவனிடம்

**ஜெயமோகன்**

இருந்தன. பெண்களின்கண் களைப் பார்த் துப் பேசுதல், அந்தரங்கமானது என்ற பாவனை உடைய தாழ்ந்த குரல், முக்கியமான விடயங்களில் பெண்களிடம் ஆலோசனை கேட்பது, [illegible]வின் உருக்கமான விடயங்களை உணர்ச்சியுடன் தனிப்பட்ட முறையில் சொல்வது .....

நமது சமூகத்தில் இளம் பெண்கள் வெகு காலம்வரை குழந்தைகளாகவே கணிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பொருட்படுத்தி யாரும் பேசுவதில்லை. மதித்துப் பேசுவது போன்ற பாவனையே அவர்களுடைய தடை அரண்களை சாதாரணமாக உடைத்துவிடுகிறது. சண்முகம் தன் காலில்லாத (கற்பனை) தங்கையைப் படிக்க வைக்கலாமா வேண்டாமா என்று அம்முவிடம் ஆலோசனை கேட்டான், அவ்வளவுதான்.

தையல். இயந்திரத்துடன் அம்மு தன் வாழ்க்கையை முன்னகர்த்தி இருக்கக்கூடும். தெரியவில்லை. சண்முகத்துக்கு அவள் குழந்தைகளைக்கூடப் பெற்றிருக்கலாம். நான் ஆறு மாதத்துக்குள் வேறு ஊருக்குப் போய்விட்டேன். பிறகு அவளைப் பார்க்கவே இல்லை. ஆனால்,அவள் சொன்ன ஒரு வரி நீண்டநாள் என் மனதில் இருந்தது. அவள் வந்து சேர்ந்த ஊரின் சூழல்பற்றி விவரிக்கும் போது, 'கண்மூடிப் படுத்துவிட்டால் காடு வந்து உடம்பை மூடிவிடும்' என்று சொன்னாள்.

மலையடிவாரக் கிராமம் அது. எப்போதுமே மழையும் ஈரமுமாக இருக்கும். ஒருவாரத்தில் எந்த இடத்திலும் செடிகள் மண்டிவிடும். முற்றத்தையும் வயல்களையும் செதுக்கியபடியே இருக்கவேண்டும். ஆனால் அவள் சொன்னது வேறு எதையோதான் என்று எனக்குப் பட்டது. அதை அவளே அறியாமல் இருக்கலாம்.

துரோகத்துக்கும் அவமானத்துக்கும் ஆளானவர்களின் முதல் எதிரி அவர்கள் மனம்தான். அது ஓய்வதேயில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதியோரைப் பெரும் சொத்ததாக மதித்து பேணி வருகின்றது சிவபூமி இல்லம்

**நம்பி**

''சுனாமியின் தாக்கத்திற்கு உள்ளாகி மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் பலி கொடுத்து விட்டு யாருமற்ற நிலையில் இருந்த என்னை சாந்திகம் அமைப்பினர் இங்கு சேர்த்தனர்'' எனக் கூறும் நாகர் கோவிலைச்



இல்லத்தின் தோற்றம்

சேர்ந்த சு. வயிரவப்பிள்ளை (80 வயது) என்ற முதியவர். ''துயரங்களை மறந்து இப்போது ஆறுதலாக இருக்கின்றேன். என் போன்று ஏதிலிகளாக இங்கே அடைக்கலம் புகுந்துள்ள ஏனையவர்களுடன் பழகும்போது முன்னைய சோகங்கள் எல்லாம் படிப்படியாகக் குறைந்துவிடுகின்றன.

''நான் தனியனல்லன். எனக்கு மதிப்பளிக்கப்படுகிறது, அன்பு கிடைக்கிறது என்பதை இங் குள்ள அனைவரின் ஊடாகவும் உணர முடிகிறது'' என்றார்.

''நாட்டில் ஒரு சுமுக நிலை ஏற்பட்டால் நாகர் கோவிலுக்குச் சென்று திரும்ப வேண்டும் என்ற ஆசை இருக்கிறது'' என்கிறார் அவர்.

தனது முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 'சிவ பூமி' முதியவர்கள் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்.

தற்சமயம் அங்கு 24 முதியவர்கள் தங்கியுள்ளனர். இவர்களில் பலர் பிள்ளைகளிருந்தும் உறவினர் உதவிகள், ஆதரவுகள் இன்மையால் இந்த இல்லத்தில் இணைந்து கொண்டவர்கள் என்று அறிய முடிந்தது. இயற்கையின் சீற்றம், பிள்ளைகளின் உதாசீனம் என ஏதோ ஒரு வகையில் ஆதரவின்றிக் கஷ்டப்படும் முதியவர்களுக்குக் கை கொடுத்து அரவணைக்கும் கருணை இல்லமாக 'சிவபூமி' முதியோர் இல் லம் விளங்குகிறது.

### இறைவனே வந்து உதவுவது போல்....

இல்லத்தின் வாயிலில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் தினமும் வழிபாடுகள் செய்வதாகவும் திருமுறைகளைப்பாடுவதில் நிம்மதியும் மன நிறைவும் கிடைப்பதாகவும் ஆழ்வார்ப் பிள்ளை செல்வரத்தினம் (80 வயது) என்னும் மூதாட்டி கூறினார்.

பிள்ளைகள் கைவிட்டதாக ஏன் நான் வருத்தப்பட வேண்டும். இறைவனே உதவுவது போன்று இங்கு மகிழ்ச்சி கிடைக்கின்றது'' என்கிறார் அவர். ''எனது இரண்டு பிள்ளைகளும் வெளி நாட்டில். முன்பெல்லாம் அடிக்கடி உதவுவார்கள், இப்போது இல்லை. விழுந்து சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் இருந்த பின் இங்கு வந்து சேர்ந்தேன். சந்தோசமாக நாள்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன என'' அவர் மனந்திறந்து கூறினார்.

கணவன் - மனைவியாக இந்த இல்லத்தில் வதியும் அளவெட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் தம்பதியினரும் கவனிப்பாரின்றி இங்கு வந்தவர்களே. கணவருக்கு குடல் இறக்கத்திற்கு அறுவைச் சிகிச்சை செய்ததாகவும் அதனை இவ் இல்லமே பொறுப்பேற்று நிறைவேற்றியதாகவும் திருமதி இராசரத்தினம் கூறினார்.

இ.போ.ச.வில் பணியாற்றிய சரசாலையைச் சேர்ந்த பரமசாமி (82 வயது), சக்கர நாற்காலியில் உலவும் பாக்கியம் (72 வயது), அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து இங்கு வதியும் ராசேந்திரம் (62 வயது) என அங்குள்ள அனைத்து முதியவர்களும் வேறுபாடு களின்றி ஒரே குடும்பமாக ஒருவருடன் ஒருவர் பரஸ்பர நட்புறவுடன் கதைத்து மகிழ்வதைக் காணக் கூடியதாக இருந்தது.



இல்லத்தில் தங்கியுள்ள மூத்தோரில் சிலர்....

# அன்பும் அரவணைப்பும் கிடைப்பதாக அக மகிழ்கிறார்கள் இல்ல வாசிகள்

### உடனுக்குடன் மருத்துவ உதவி

96 வயதான திருமதி இராமலிங்கம் ராஜேஸ்வரி சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டுள்ளதாக சிவபூமி முதியோர் இல்லப் பொறுப்பாளர் திருச்செல்வம் தெரிவித்தார்.

யாருக்காவது சிறிய அளவில் சுகவீனம் காணப்பட்டாலும் உடனடியாகவே உரிய சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இதற்கென மருத்துவ கூடம் உள்ளது. நிரந்தர பணியில் தாதியர் ஒருவர் உள்ளதாகவும் தற்சமயம் இரு பிள்ளைகள் தாதியருக்கான பயிற்சியைப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார். மருத்துவ சேவையை விரிவு படுத்தக் கூடியதாகப் புதிய மருத்துவமனை ஒன்றும் நூலகமும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.



புதிதாக அமைக்கப்படும் மருத்துவ மனையும் நூலகமும்

சிவபூமியில் சிறந்த வகையில் உணவு வழங்கப்படுகின்றது. சைவ உணவு உடலுக்கு ஆரோக்கியத்தை வழங்குவதாகவும் மனதுக்கு இதமளிப்பதாகவும் உள்ளது எனக் கூறும் பொ. இராசரத்தினம் (85 வயது) மஸ்கெலியா ஹற்றன் பகுதிகளில் உள்ள தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியராகப் பணியாற்றியதாகத் தெரிவித்தார். ஏற்ற உணவுகள் வழங்கப்படுவதாகவும் பணியில் உள்ள அனைவருமே தமது பெற்றோராகக் கருதி மனப்பூர்வமான உதவிகளை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.



வைரவப்பிள்ளையும் நாகேந்திரமும் | உதயன் பத்திரிகையுடன் முதியவர் ஒருவர் | சக்கர நாற்காலியில் நடமாடும் முதியவர்

### முதியோரின் பொழுது போக்கிற்கு

முதியவர்களின் பொழுது சந்தோசமாகக் கழிய வேண்டும் என்பதில் சிவபூமி இல்ல அமைப்பாளர்கள் கரிசனை கொண்டுள்ளனர். குருபூசை மற்றும் விசேட நாள்களில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பொழுதைப் போக்கவென தொலைக்காட்சி வசதி செய்யப்பட்டுள்ளது. பத்திரிகைகள், புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பூங்காவில் இருக்கைகள், அரங்கம் என வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளைப் படிக்கமுடியாதவர்களுக்கு அங்கு பணியில் உள்ளவர்கள் தினமும் பத்திரிகைகளைப் படித்துக் காட்டுகின்றனர்.

இன்று பிள்ளைகள் எல்லோருமே வெளிநாடு என்று பறக்கிறார்கள். வயது முதிர்ந்த பெற்றோர்கள் ஆதரவின்றி அலைகிறார்கள். ஆறு திருமுருகன் ஐயா அவர்களின் முயற்சியில் இந்த சிவபூமி முதியோர் இல்லம் அமைந்தது ஒரு ஆறுதலாக இருக்கிறது என பணியில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். இங்கு வாழும் முதியவர்களை நீராட்டி அவர்களின் உடைகளைச் சுத்தம் செய்து வேண்டிய பணிவிடைகளை மனம் கோணாது நிறைவு செய்யும் ஊழியர்கள் அனைவருமே நல்லிதயம் கொண்டவர்கள்.

### முதியோரைச் சொத்ததாக மதிக்கும் இல்லம்

முதியவர்ளைப் பெரும் சொத்தாக மதித்து அவர்களைப் பேணும் இந்த நிலையத்தின் தேவைகளை நிறைவேற்ற நல்லிதயம் படைத்த மக்களின் ஒத்துழைப்பு அவசியமாகிறது. அரச, அரச சார் பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையில், தனி மனித முயற்சியால் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தியே அது இயங்கிக் கொண்டிருக்கிறது.

அரசு இன்றைய சூழலில் இது போன்ற ஸ்தாபனங்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. யுத்த நிலை, பிள்ளைகளின் உதாசீனம், ஏனைய வழிகளில் உதவிகள் கிடைக்காத நிலையில் நிர்க்கதிக்குள்ளாகும் பல முதியவர்கள் சிவபூமி இல்லத்தில் அடைக்கலம் தேடி வரும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

எனவே வசதி படைத்த மக்களின் தரும சிந்தனையும் தாராள மனப்பாங்கும் இந்த நிலையத்தின் மீதும் திரும்புவது அவசியம். நாங்கள் நமது பெற்றோர்களைப் பாதுகாக்கின்றோம் என்ற மன உணர்வுடன் உதவ முன்வரும் அனைவராலும் சிவபூமி முதியோர் இல்லம் மிகவும் கூடுதலான முதியவர்களை அரவணைத்துப் பராமரிக்க முடியும் என இல்லப் பொறுப்பாளர் திருச்செல்வம் கூறுகிறார். ✱

---

## 5ஆம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவை இலவசமாக அரிசி வழங்கிக்கொண்டாடிய இலங்கைத் தமிழர் வைத்திலிங்கம்

**1918 ஏப்ரல் 10**

பிரபல சமூகசேவையாளரும் வர்த்தகருமான சங்குவேலியைச் சேர்ந்த காசிநாதர் வைத்திலிங்கம் காலமானார். இவருடைய சமூகப் பணியில் குறிப்பிடத்தக்கது பிரித்தானிய அரசான ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாக் கொண்டாட்டம்.

பிரிட்டிஷ் அரசரான ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழா யாழ்ப்பாணத்திலும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பிரபல வர்த்தகரான வைத்திலிங்கம் அன்றைய தினம் மாவட்ட நீதிமன்ற வளவில் வைத்து 5,000 பேருக்கு இலவசமாக ஒரு கொத்து அரிசி வழங்கினார். அப்போது அரசாங்க அதிபராக இருந்த பிறீமன் (Freeman) இலவச அரிசி வழங்கும் நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். ஒரு கொத்து அரிசியும் ஐந்து சதமும் அன்றைதினம் வர்த்தகர்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

### ஆயிரம் பேருக்கு வேட்டி, சேலை

இதேதினம் றிட்ஜ்வே மண்டபத்தில் வைத்து ஆயிரம் பேருக்கு வேட்டி, சேலை என்பனவும் வழங்கப்பட்டன.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

வைத்திலிங்கம் கட்டுவித்தமடம் ஒன்றும் கீரிமலையில் உள்ளது. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கருகில் அமைந்துள்ள வைத்திலிங்கம் மடம் தற்போது மிகவும் பாழடைந்த நிலையில் (பெரும் பகுதி இடிந்து) காணப்படுகிறது.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களும் வாய்ப்புகளும் தாராளமானாலும் நாட்டின் நிலைமையால் சீரழிந்துள்ள குடாநாட்டு கடல் தொழில்துறை

யாழ்.குடாநாட்டுக் கடற்றொழிலாளர்கள் நீண்டகாலமாக எதிர்கொள்ளும் சாதகமற்ற நாட்டுச் சூழ்நிலைகளால், தொழில் வாய்ப்பை இழந்தவர்களாகியுள்ளனர். இடப்பெயர்வு, தொழில் செய்வதில் ஏற்பட்டுள்ள மட்டுப்படுத்தல்என்பவற்றால் தொழில்வாய்ப்புகள் முடக்கப்பட்டுள்ளன. மீன் உற்பத்தி கடந்த 15 வருடங்களாக ஏற்பட்ட மாற்றங்களால் மிகவும் குறைந்துள்ளதுடன், கடல் தொழிலாளர் வருமான இழப்பையும் தொடர்ச்சியாகச் சந்தித்து வந்துள்ளனர். துறைமுகங்கள், இறங்குதுறைகள், ஒதுக்கிடங்கள், களப்புகள், குடாக்கள், ஆழ்கடல் மீன்பிடிப்புக்குரிய தளங்கள் என பல சாதகமான வாய்ப்புகளைக் கொண்டிருந்தபொழுதும் குடாநாட்டு கடற்றொழிலில் பாரிய பின்னடைவே காணப்படுகிறது.

இவ்வாறு தெரிவித்தார் மீன்பிடி நீரியல் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம்.

யாழ்.மாவட்ட மீன்பிடித் திணைக்களத்தில் விஷேடமாக ஒழங்குசெய்யப்பட்ட சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மாவட்ட கடற்றொழில் பரிசோதகர்களான து.விக்கினேஸ்வரன், ந.கணேசமூர்த்தி ஆகிய இருவரும் உடன் இருக்கப் பணிப்பாளர் உதயன் செய்தியாளருக்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நீண்ட கடற்கரையோரம், காலநிலை, கடல் வளம் என்பன இயற்கையாகவே கடற்தொழிலுக்குச் சாதகமான அமைப்பைக் கொண்டுள்ளது. பல் உருவக கடற்கரைப் பகுதிகளைக் கொண்டமைந்துள்ள குடாநாட்டு கடல் பகுதியும் கரையோர அமைவுப் பாங்கும் மிகவும் பொருத்தமானதாகும். வாய்ப்பான இட அமைவும் பௌதீக அமைப்பும் தொழிலுக்கு மிகவும் சாதகமானதாகும்.

ஒருகாலத்தில் அதாவது 1983ஆம் ஆண்டுக்கு முற்பட்டகாலத்தில் வடபகுதி (யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார்) இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் கால் பங்கை உற்பத்தி செய்துவந்தது. இந்த உற்பத்தொடர்ச்சியான வீழ்ச்சிப்படிநிலையானது, சமாதானகாலத்தில் சற்று உயர்ந்தபொழுதும் கடல்வலயச் சட்டம் மற்றும் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடமுடியாமை போன்றவற்றால் பழையநிலையை எட்டவில்லை.

**அட்டவணை - 01**

| வருடம் | மீன் உற்பத்தி (மெற்றிக் தொன்னில்) |
|---|---|
| 1983 | 48677 |
| 1984 | 23157 |
| 1985 | 23775 |
| 1986 | 13053 |
| 1987 | 1981 |
| 1988 | 24702 |
| 1989 | 25078 |
| 1990 | 21639 |
| 1991 | 1198 |
| 1992 | 1327 |
| 1993 | 1514 |
| 1994 | 3102 |
| 1995 | 2263 |
| 1996 | 1540 |
| 1997 | 2762 |
| 1998 | 2428 |
| 1999 | 3232 |
| 2000 | 2211 |
| 2001 | 2676 |
| 2002 | 5311 |
| 2003 | 21206 |
| 2004 | 21310 |
| 2005 | 15157 |
| 2006 | 13437 |
| 2007 | 2963 |

மீன்பிடி குறைவானதற்குப் பல காரணங்கள் உள்ளன. 1991ஆம் ஆண்டு அசாதாரண நிகழ்வுகளால் தீவுப் பகுதியில் இருந்தும் காங்கேசன்துறை, மயிலிட்டி, வளலாய், கீரிமலை, சேந்தான்குளம் வரை மீனவக் குடும்பங்களும் ஏனையவர்களும் இடம்பெயர்ந்திருந்தனர்.

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், வலிகாமம் முழுவதும் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். 2006இல் ஆழியவளை (920 குடும்பங்கள்), தாளையடி (1148 குடும்பங்கள்) இடம்பெயர்ந்தன.

வலிகாமம் வடக்கில் இருந்து தென்மராட்சியில் இடம்பெயர்ந்திருந்த குடும்பங்கள் 2000-2001இல் மீண்டும் இடம்பெயர வேண்டி ஏற்பட்டது. 2006 இல் குடாரப்பு, நாகர் கோவில் பகுதியில் உள்ளவர்களும் சொந்த இடங்களில் குடியிருந்து தொழிலில் ஈடுபடமுடியாது இடம்பெயர்ந்திருந்தனர்.

**மீன்பிடியில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை குறைந்துள்ளது**

2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதக் கணக்கெடுப்பின்படி 17,751 குடும்பங்கள் குடா



பாரம்பரிய படகுகள் 751 ஆகியன பாவிக்க முடியாததால் கரையேற்றி வைக்கப்பட்டுள்ளன. இதனாலும் கடற்றொழில் முடங்கிப் போயுள்ளது. இணைப்பில்லாத (FRD) படகுகள் 28 மட்டுமே பருத்தித்துறையில் பாவிக்கப்படுகின்றன.

**தென் இலங்கைக்கு ஏற்றுமதி இல்லை**

உற்பத்திக் குறைவு மற்றும் ஏற்றுமதிக்கான போக்கு வரத்துவசதிகள் தடைப்பட்டு போனமையால் இங்கிருந்து தென் இலங்கைக்கோ, வெளிநாடுகளுக்கோ மீன் ஏற்றுமதி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**அட்டவணை- 02**

| இல. | கடற்றொழில் பரிசோதகர் பிரிவு | மீனவ குடித்தொகை | மீனவர் எண்ணிக்கை | மீனவர்கள் குடும்ப எண்ணிக்கை | மீன் உற்பத்தி | கருவாடு உற்பத்தி | மீன் சங்க எண். |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆழியவளை | 4564 | 895 | 920 | - | - | 04 |
| 2 | தாளையடி | 5891 | 1305 | 1448 | - | - | 06 |
| 3 | பரு.கிழக்கு | 6056 | 1498 | 1350 | 44000 | - | 10 |
| 4 | பருத்தித்துறை மேற்கு | 8832 | 1744 | 1635 | 15942 | - | 10 |
| 5 | காங்கேசன்துறை கிழக்கு | 4951 | 1172 | 1101 | 10344 | - | 05 |
| 6 | காங்கேசன்துறை மேற்கு | 1512 | 271 | 382 | 4713 | 450 | 07 |
| 7 | சண்டிலிப்பாய் | 8109 | 1343 | 1740 | 17377 | - | 13 |
| 8 | சுழிபுரம் | 11459 | 2210 | 2637 | 34765 | - | 18 |
| 9 | ஊர்காவற்றுறை | 3925 | 1621 | 1025 | 16000 | - | 09 |
| 10 | நெடுந்தீவு | 1611 | 446 | 414 | 17600 | 4690 | 06 |
| 11 | வேலணை | 4063 | 1112 | 1108 | 35635 | - | 10 |
| 12 | யாழ்.மேற்கு | 12105 | 3209 | 2890 | 18515 | 3100 | 06 |
| 13 | யாழ்.கிழக்கு | 2632 | 735 | 595 | 10770 | - | 05 |
| 14 | சாவகச்சேரி | 2303 | 475 | 506 | 8180 | - | 08 |
| | மொத்தம் | 78013 | 18040 | 17751 | 233841 | 8240 | 117 |

தென் இலங்கைக்கு முன்பு எமது உற்பத்தியில் 70% ஐஸ்போட்ட மீனாகவும் கருவாடாகவும் லொறிகளில் அனுப்பப்பட்டன. குளிரூட்டிகளில் பதப்படுத்தப்பட்டு கடல் அட்டை, நண்டு, இறால், கணவாய், சிங்கிறால், சுறா என்பன வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. இதனால் அன்னிய செலாவணியும் பெறப்பட்டது. வடபுல மீன்பிடி சமாசம் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டது.

குடாநாட்டுப் பகுதியில் உள்ள மூன்று வகையான கரையோரங்களும் ஆழ்கடல் தளங்களும் இதை சாதிப்பதற்கு உதவின.

தாளையடி, செம்பியன்பற்று, மாதகல் கரையோரங்களில் மணல் நிறைந்த கடற்கரையோரங்கள் காணப்பட்டன. இவை கரை வலைத்தொழில் செய்யப் பொருத்தப்பாடா

இணைந்து வலைகள், கண்ணாடி இழைப்படகுகள் என்பவற்றை உற்பத்தி செய்தன. அந்த நிறுவனமே பெயர் மாற்றம் பெற்றுள்ளது. தற்பொழுது வலை செய்தலில் மட்டும் ஈடுபடுகிறது.

அரச அதிபர் மற்றும் சமாசத் தலைவர்கள், கடல்வள திணைக்கள பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள் ஒன்றிணைந்து இதனை விருத்தி செய்வதற்கு பணிபுரிந்து வருகின்றனர். வலைபின்னுவதற்கான நவீன கருவிகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கு ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிறுவனம் (UNDP) 12 மில்லியன் (120 லட்சம்) ரூபா ஒதுக்கியுள்ளது.

திணைக்களத்திற்கு ஒரு நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கான முன்னாயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக 20.1 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாத்து வைப்பதற்காக குளிரூட்டி ஒன்றும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 40x8x8 அடி கன அளவுடைய குளிரூட்டி மாதகல், காக்கை தீவு பகுதிக்கு (வலி.மேற்கு) வழங்கப்பட்டுள்ளது. பொன்னாலையில் இதை வைப்பதற்கான கட்டடம் ஒன்று யப்பானிய நிதி அனுசரணையுடன் கட்டப்பட்டு வருகிறது. இதற்கென 21 லட்சம் நிதியை JICS (JAPAN INTERNATIONAL CORPORATION SYSTEM) வழங்கியுள்ளது.

மீன்விலை சந்தைகளில் உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டு வருகின்ற பொழுதும் தொழிலாளர் வருமானம் (15-20%) குறைவானதா

## இடம் பெயர்வுகள், எல்லைக் கட்டுப்பாடுகள், சுனாமியின் அகோர தாக்கங்கள் மீனவ சமுதாயத்தை முடக்கிவிட்டது

தியில் 72% தென்இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தலைநகரத்தின் கடல் உணவுத் தேவையில் கணிசமான அளவை வட பிரதேச மீன்பிடிச் சமாசமே விநியோகித்தது. தற்போதைய சூழ்நிலையில் குடாநாட்டு மீன் உற்பத்தி மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்றுள்ளது.

**உற்பத்தி வீழ்ச்சி**

1983ஆம் ஆண்டு குடாக்கடல் பகுதியில் 48,677 மெற்றிக்தொன் கடலுணவுகள் உற்பத்தி செய்யப்பட்டது. 2007ஆம் ஆண்டில்



2963 மெ.தொன்னாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 1983ஆம் ஆண்டின் உற்பத்தித் தொகையின் 6% மட்டுமே கடந்த வருடம் உற்பத்தியாகியது.

1983இல் இருந்து 2002ஆம் ஆண்டுவரையும் உற்பத்தியில் (தளம்பல் இருந்தாலும்) ஒரு வீழ்ச்சியே காணப்படுகிறது. சமாதான உடன்படிக்கையை அடுத்து சிறிது அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதெனினும் முன்னைய உற்பத்தியளவின் பாதியைக்கூட தாண்டவில்லை.

1983இன் உற்பத்தி அடுத்தவருடமே பாதியாகக் குறைந்தது (23,157 மெ.தொன்). உள்நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையில் 1987ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி 1981 மெற்.தொன்னாகவும் 1991ஆம் ஆண்டு 1191 மெ.தொன்னாக வீழ்ச்சியடைந்தது. இதுவே கடந்த 25 வருட காலத்தில் மிகக் குறைந்த மீன் பிடித்தொகையாகும்.

நாட்டில் வசிப்பதாக மீன்பிடி திணைக்கள 2008 பெப்ரவரி மாத ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 1983ஆம் ஆண்டில் மீன்பிடி குடும்பங்களின் எண்ணிக்கையிலும் குறைவானதாகும். 22,000 குடும்பங்களுக்கதிகமாக மீனவ சமூகம் இருந்தது. தற்போது மீன்பிடி குடும்பங்கள் யாழ்.மாவட்டத்தில் 17,751 மட்டுமே உள்ளன. ஆனால் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப மீனவர் குடும்பங்களின் குடித்தொகை தற்போது 30ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்க வேண்டும்.

குடித்தொகை குறைவதற்கு காரணம் பெரும்பாலானவர்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளமையாகும்.

மீன்பிடி நேரம், மீன் பிடிக்கும் கடல்பரப்பு என்பன குறைந்த எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுமதி இல்லை. மீன்பிடிக் கலங்களின் பாவனை குறைந்துள்ளது. இயந்திரம் இணைத்த கலங்களைப் பாவிக்க இயலாது. தூர இடங்களுக்குச் சென்று தங்கி நின்று மீன்பிடிக்கவும் இயலாதுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பதின்நான்கு மீன்பிடி அலுவலர்கள் பிரிவுகளில் 117 கடல் தொழிலாளர் சங்கங்கள் உண்டு. இவற்றில் 3514 பாரம்பரிய கலங்கள் உள்ளன. இவை சிறிய வள்ளங்கள், கட்டுமரங்கள் ஆகும். இவற்றுள் 2763 மட்டுமே தற்போது பாவனையில் உள்ளன. எதிலும் வெளி இணைப்பு இயந்திரங்கள் இணைக்கப்படுவதில்லை. இணைக்கமுடியாது. மரக்கோல், சவள் என்பனவே பாவிக்கப்படுகின்றன.

இவற்றைவிட [illegible] (One day boats) படகுகள் [illegible] இயந்திரப்படகுகள் (FRD) 2758, மற்றும்

## அமைதியும் இயல்புநிலையும் திரும்பினால் மட்டுமே கடற்றொழில் சீரடையமுடியும்

னவை. யாழ்.குடாக்கடல் (களப்பு) சேற்றுக் கடலாகும். இங்கு கடல் அட்டை, கணவாய், நண்டு, இறால், சங்கு (சங்கு, சிப்பி மன்னார் கடலில் அதிகம்), சிப்பி என்பனவும் ஆழ்கடலில் சிங்கிறால், சுறா (தோல், சிறகு சரிகைக்குப் பயன்படும்) என்பனவும் பெறப்பட்டதால் 1983ஆம் ஆண்டுக்கு முன் ஏற்றுமதியில் ஈடுபடமுடிந்தது. மன்னார் பேசாலையில் பதனிடும் தொழிற்சாலையும் அமைந்திருந்தது.

தற்பொழுது நெடுந்தீவில் 4690 கிலோ கருவாடும் காங்கேசன் மேற்கில் 450 கிலோ கருவாடும் குருநகர், நாவாந்துறை (யாழ்.மேற்கு) ஆகிய இடங்களில் 3100 கிலோ கருவாடும் மட்டுமே உற்பத்தியா கிறது. குடாநாட்டுக்கு வெளியில் இவை அனுப்பப்படுவதில்லை. (அட்டவணை-02)

**அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணை**

கடற்தொழிலாளருக்கு 15 லட்சம் ரூபா (1.5 மில்லியன்) பெறுமதியான குறுகிய தூர மீன்பிடிக்கான உபகரணங்கள், வலை என்பவற்றை யாழ்.கடற்தொழில் திணைக்களத்துடன் இணைந்து யு.என்.டி.பி.நிறுவனம் வழங்கியுள்ளது.

உலக தரிசன நிறுவனம் 4.6 மில்லியன் (46 லட்சம்) பெறுமதியான உபகாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஜி.ரி.இசற் நிறுவனம் 2.2 மில்லியன் (22லட்சம்) பெறுமதியான பொருள்களைக் கொடுத்து உதவியுள்ளது. உபகரணங்கள், சிறுவலை என்பனவே பெரும்பாலும் விநியோகிக்கப்படுகின்றன.

[illegible] அனுப்பாத்திக்கண்மையில் [illegible] நிறுவனம் இயங்கிவருகிறது. முன்பு இலங்கையும் நோர்வேயும் (CEY-NOR)

கவே உள்ளது. இதனால் 5 பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு மாதாந்தம் 1600 ரூபா பெறுமதியான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுகிறது.

பொது நிறுவனங்கள், அரச அதிபருடைய உதவிகள் பெறப்பட்டுள்ள பொழுதும் குடாநாட்டு கடற்தொழில் பழைய நிலைக்கு திரும்பு

**யாழ்.கடல்வள நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கத்துடன் ஒரு சந்திப்பு: கை.பேரின்பநாயகம்**

வதானால் அமைதியும் இயல்பு நிலையும் திரும்பினால் மட்டும் அது சாத்தியம்-என்றார் அவர்.

சுனாமி தொடர்பான வினாவிற்கு பதிலளித்தபொழுது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதியில் சுனாமியால் பேரழிவு ஏற்பட்டது. இதனால் உயிரிழப்பும் பொருள் அழிவும் எதிர்பாராத அளவில் ஏற்பட்டுவிட்டன. வள்ளங்கள், வலைகள், உபகரணங்கள் சேதமடைந்ததுடன் காணாமலும் போயுள்ளன. மீனவர்களின் உடைமைகள் இயற்கையினால் பெருமளவில் கொள்ளை கொள்ளப்பட்டது இதுவே முதல் தடவை.

தொழிலாளரின் உடைமைகள் நாசமடைவது வழக்கமானதே. எனினும் இவை அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் மனிதாபிமான உதவியால் ஈடுசெய்யப்பட்டுள்ளன. சேதமடைந்த, இல்லாது போன வீடுகளையும் இந்த நிறுவனங்கள் யாழ்.மாவட்டத்திலும் கட்டிக் கொடுத்துள்ளன. ஆனால் உயிரிழப்புகளை யாரால் ஈடுசெய்யமுடியுமென்று-அவர் வினாவினார். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தீராத மூலவியாதியால் அவதிப்படுவோரின் கவனத்திற்கு....!

**இரசாயன முறையில் மூலரோக நிவாரணம்**

**மூல ஆர்சிஸ் இரசாயன மற்றும் மூலரோக பஸ்பம்**

மூலரோக சம்பந்தமான வியாதிகளை உடன் குணப்படுத்தும்

மூலரோகம் என்பது பரம்பரை வியாதி. இதனால் ஆரம்பத்தில் சிறு கட்டிகளை உண்டாக்கும். அத்துடன் எரிச்சல், கூடின மலம்போக்குத் தன்மை, சீதம்போக்கு, குடல்இறக்கம், குடலில் வாய்வு நிரம்புதல் போன்ற வியாதிகளை இம்முறையினால் குணப்படுத்த முடியும். மேலும் சிறுநீர் எரிச்சல், சிறுநீர் தடங்கல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. உடன் பாவித்து குணம் பெறுங்கள்.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured by:
Kadahapola Dharmarathne Aushadalaya
Kuliyapitiya Road, Kadahapola,
Narammala.

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
இல,288 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



31.03.2008 திங்கட்கிழமை
இறைவனடி சேர்ந்த பிரபல
சமூகசேவையாளர்
அமரர் சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா
(ஓய்வு பெற்ற அதிபர், புங்குடுதீவு அ.மி.வித்தியாலயம்)

தீவகத்து சேவைக்கு பூர்த்த மலர் பூராசா
வித்தியாலயத்தில் அதிபராய் ஆற்றிய பணி என்றும்
காலத்தால் அழியாத காவியமாய் மனிதத்துள்
ஏற்றி வைத்த ஒளிக்கு ஏற்றமிகு தலைவனாய்
மக்கள் மனதுக்குள் மாண்புடனே வலம் வந்து - இன்று
பூவுடல் பிரிந்தாலும் புகழுடல் தேசத்தில்
வாடாத மலராக வாழ்ந்திடுவீர் என்றென்றும் - உன்
பிரிவு கண்டு துயர்கொண்டு கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குகின்றோம்.

*சாந்தி! சாந்தி! சாந்தி!*

வேலணை
ப.நோ.கூ.சங்கம். (72796) தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,

## மரண அறிவித்தல்கள்

### கலைஞானகேசரி விசுவலிங்கம் பரஞ்சோதி

(முன்னாள் உபஅதிபர், யா/இணுவில் மத்திய கல்லூரி)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வி.பரஞ்சோதி அவர்கள் 02.04.2008 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான விசுவலிங்கம் - தங்கராசம் தம்பதியரின் அன்பு மகனும் அளவெட்டியைச் சேர்ந்த அமரர்களான செல்லப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் செங்கமலத்தின் பாசமிகு கணவரும் ஜனார்த்தனி (London), யசோதினி(London), றோஜினி, றமேஸ்கண்ணா (London) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜன் (London), பூங்குன்றன் (London) ஆகியோரின் மாமனும் வடிவாம்பிகை, தனலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் செல்வரத்தினம், நல்லையா, பாலசுப்பிரமணியம் (அளவெட்டி), நாகலக்சுமி (Canada), நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'வரஜனனபதி'*
*பாற்சங்க ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு.*
T.P.0776268308

தகவல்:
குடும்பத்தினர்.

(72778)

### திருமதி அன்னலெட்சுமி செல்லத்துரை



சரவணை கிழக்கு, வேலணை, பள்ளம் புலத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி விஸ்பாடினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலெட்சுமி செல்லத்துரை அவர்கள் (31.03.2008) திங்கட்கிழமை ஜேர்மனியில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - செல்லத்துரை (பிரபல வர்த்தகர், கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அமிர்தகுலலெட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கௌசலாதேவியின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான நடராசா (ஆசிரியர்), பொன்னுத்துரை. இராசலெட்சுமி, மற்றும் மகாலிங்கம், சௌபாக்கியலெட்சுமி, சாரதாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உலகநாயகி, காலஞ்சென்றவர்களான நடராசா, கலைமகள், பழனிநாதன் மற்றும் சோதிவேற்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் கலாமணி, உமாமணி, மகாமணி, ராதாமணி, சிவமணி, தயாமணி, மன்றன், கண்ணுதல், மயூரன், ஜெயந்தி, வசந்தி, சுதந்தி ஆகியோரின் அன்புப் பெரியத்தையும் திருமகள், மலர்மகள், முருகவேள், கலைமகள், யோகநாயகி, ஆரூரன், சாம்பவி, சேந்தன், சிவதீர்த்தன், சிவசரவணன், யசோதன், யமுனா, வதனா (Engineer), வினோதன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.04.2008 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் ஜேர்மனி பிராங்போட் நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சோதிவேற்பிள்ளை *(சகோதரி)*
தோ.பே.இல 0049 611 400396
0049 0171 3490594 } ஜேர்மனி

திரு.நா.மகாலிங்கம் (சகோதரன்)
*இல:-54/1, விதானையார் ஒழுங்கை,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (72799)

## உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.6

உடுவில் இந்து இளைஞர் மன்றம் தனது 10 ஆவது ஆண்டு நிறைவின் ஞாபகார்த்தமாக சிவதொண்டர் வஸ்திரங்களை வழங்கவுள்ளது.

வஸ்திரங்கள் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரசுவாமி ஆலய முகப்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரைகளை சிவஸ்ரீ சி.முத்துச் சாமிக்குருக்கள், சிவஸ்ரீ சி.பாலசுப்பிர மணியக் குருக்கள் ஆகியோரும் வாழ்த்துரையை மன்றப் புரவலர் கா.சிவாஜியும் பிரார்த்தன்யுரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்த் துவர்.

சிறப்பு வஸ்திரத்தை மன்றப் புரவலர் வழங்கிக் கௌரவிப்பார்.

முதல்வஸ்திரத்தை து.சிவஞானமும் மூத்தோர் வஸ்திரத்தை பதினொரு பேரும் சிறப்பு வஸ்திரத்தை 21 பேரும் பெறுவர்.

(202)

## அவமானத்துக்கு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கறையான் புற்றுப் போல அனைத்தையும் உண்டு வளர்ந்தபடியே இருக்கிறது அது. ஒரு கணம் செயலற்றுப் படுத் தால் கூட ஆயிரம் ஆயிரம் கறையான் கொடுக்குகள் கால் நுனியை வந்து பற்றிவிடும்.

தன் துயரை முழுக்க அறியாமலேயே இயற்கை மீது ஏற்றிவிட்டாள் அம்மு. இயற்கை என்பது என்ன? வெளியே நாம் காணும் ஜடப்பொருள்கள் மட்டும்தானா?

இல்லை, அவற்றுக்கு நாம் அளிக்கும் அர்த்தங் களும் சேர்த்துத்தான். ஆகவே, அத்தனை பொருள்களும் குறியீடுகளும் கூட, நாம், நம் அகத்தையே இயற்கையாக வெளியேயும் கண்டுகொண்டிருக்கிறோம். நம் உணர்ச்சிகளையே அதுவும் பிரதிபலிக் கிறது.

சங்க இலக்கியங்களின் அடிப்படை அழகியல் அதுவே. அவை மனித உணர்ச்சிகளை இயற்கைமீது ஏற்றிக் காட்டுகின்றன - அதன் மூலம் இயற்கையின் முடிவற்ற விந்தைகளை மனித உணர்வுகளுக்கும் தந்துவிடுகின்றன. இருநிலைக் கண்ணாடிகள் ஒன்றை ஒன்று பிரதிபலித்து முடிவின்மையை உருவாக்குவதைப்போல!

சங்கப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஏ.கே.ராமானுஜன் அளித்த தலைப்பு அற்புதமாக இதைச் சுட்டிக் காட்டுகிறது. அகநிலக்காட்சி (INTERIOR LANDSCAPE).

கவிதை வாசகன் என்பவன் வரிகளிலிருந்து கவிதையைத் தன் கற்பனையால் உருவாக்கிக் கொள்பவன். கவிதையின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்பவன் அல்ல. சங்கப் பாடல்களை வாசிக்கும் வாசகன் செய்ய வேண்டிய முக்கியமான பணி. இவ்விரு பிரபஞ்சங்களையும் ஒன்றோடொன்று உறவாடச் செய்வதே ஆகும். சங்கப் பாடல்களின் இயற்கை வருணனைகள் வெறும் பின்னணிச் சித்தரிப்புகள் அல்ல.

உருண்ட பாறை
அருகே இருந்தும்
மாணைக்கொடி
தூங்கும் யானைமேல் படரும்
குன்றுக்கு அதிபன்
உன் அழகிய தோள்களை
தழுவிய நாள்களில்
தன் நெஞ்சையே சாட்சியாக்கி
ஒருபோதும் பிரியேன் என
உறுதியளித்ததை எண்ணியா
வருந்துகிறாய் தோழி?

இயற்கையின் எல்லையை மீறிய மான [illegible]க் கொடியின் சித்தரிப்பில் ஒரு பெரும் நமபிக்கைச் சரிவின் மனம் பதைக்கச் செய்யும் கதை உள்ளது. காட்டை நாம் கற்பனையில் விரிக்கும் தோறும் அந்த நிகழ்வின் உக்கிரம் விரிந்தபடியே போகும். சங்கக் கவிதைகளின் வாசகன் இன்று செய்யவேண்டிய முதல் வேலை இவ்விரு ஆடிகளும் எதிர்நோக்கும் கோணத்தைத் துல்லியப்படுத்திக் கொள்வது மட்டுமே. ✱

**விற்பனைக்கு உண்டு**

DRENDALAQURIUM

நல்லவகை வளர்ப்புக் கலர் மீன்கள், வளர்ப்பு இனக் குருவிகள், புறொயிலர் இறைச்சிக் கோழிகள் என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு:

மல்ரிபாம்

*61, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.*
*(நாச்சிமார் கோயில் முன்றோட்).* (72792)

**வீடு வளவு உடன் விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை, மாவடிச்சந்தி, அடைக்கலம் தோட்டம் தெற்கு தார்றோட்டால் வந்து குளிப்பன் ஒழுங்கையில் 3ஆவது வீடு, 2பரப்பு காணியில் 2 அறை வீடு, குசினி, தனிக்கிணறு, மின்சார வசதியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு [illegible]
*மாதர்சங்க வீதி, சித்தன்கேணி.* (72748)

**பதவி வெற்றிடங்கள்**

இலங்கையில் காப்புறுதித் துறையில் முன்னணி நிறுவனமும் ஆசியாவிலேயே சமூக சேவைக்கான சர்வதேச விருதில் முதலிடத்தைப் பெற்றதுமான செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் சாவகச்சேரி கிளை நிறுவனத் திற்கான பதவி வெற்றிடங்கள்.

**பதவிகள்:**
i) Sales Consultant
ii) Team Leader

**தகைமை:**
* G.C.E. O/L, G.C.E.A/L

**கிடைக்கும் நன்மைகள்**
*கவர்ச்சிகரமான ஊதியம்
*இலவச மருத்துவ வசதி
*வாகன கடன் வசதி
*பதவி உயர்வுகள்
*வெளிநாட்டு சுற்றுலாக்கள் என்பனவும் வழங்கப்படும்.

*தகுதியானவர்கள் நேர்முகத்தேர்வுக்குச் சமூகமளிக்கவும்.*

நேர்முகத் தேர்வு: நாளை (07.04.2008) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு
இடம்: 15, கண்டி வீதி, சாவகச்சேரி *(ஆயுள் பகுதி)*
தொடர்புகளுக்கு: 077 3726097, 0773276500

(72774)

**YOGIS BEAUTY**

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)

**மீண்டும் யாழ்.நகரில் "Yogis Beauty"** நிறுவனத்தின் சகல சேவைகளும் ஆரம்பமாகியுள்ளன.

✱ நவீன துறையிலான மணப்பெண் அலங்காரங்கள்
(இது எமது தனித்துவம் மிக்க விசேட சேவை)
"Bridal Make-up is our Speciality, with Latest Fashion Jewelleries.

✱ அழகுக்கலை, ஒப்பனை வகுப்புக்கள் நடை பெறுகின்றன.
"Beauty Culture, Make-up and Hour Dressing)
நவீன கற்பித்தல் முறையிலான பயிற்சி நெறிகள்
ஒரு மாத காலத்தில் பயிற்சிகள் முடித்து
Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்.
ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.



ஆசிரியை:
திருமதி யோகினி சண்முகநாதன்
*75, அம்மன் வீதி, நல்லூர்*
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
*யாழ்ப்பாணம்.*

T.Phone:
021 222 2796
0777 164923

(72757)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சுப்பர் சின்னப்பு**

மலர்வு
08 ★ 04 ★ 1924

உதிர்வு
07 ★ 03 ★ 2008

1995 ஆம் ஆண்டின் இடப் பெயர்வின் போது எமது கரவீணா இசை மன்றத்திற்கு சாவகச்சேரி, கல்வயலில் சிறந்த இடவசதியையும் பல நிதி உதவிகளையும் இன்முகத்துடன் புரிந்து அன்று முதல் இன்று வரை எமது வளர்ச்சியில் சிறந்த பங்காற்றி சிவராத்திரி நன்நாளில் சிவபதம் எய்திய அமரர் சுப்பர் சின்னப்பு அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

கரவீணா இசை மன்றம்,
*75, கோயில் வீதி,*
*நல்லூர்.* *(76617)*

நிர்வாகி
S.S. ரஜீந்திரன்.

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05 ★ 04 ★ 1919



மறைவு
20 ★ 03 ★ 2007

### ஆழ்வார் கிருஸ்ணபிள்ளை

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*


அன்பெனும் மலர்களால் நாம் அர்ச்சிக்கும் ஆலயமே!
பாசமெனும் தீபத்தினால் ஒளியேற்றும் குலவிளக்கே!
ஆண்டொன்று சென்றபோதும் ஆறாத துயரில் - நாம்
உமைநினைத்து வாடுகிறோம்...

*உங்கள் ஆத்ம சாந்திக்காக வீரபத்திரப்*
*பெருமானை நித்தமும் வேண்டுகின்றோம்.*

மலையந்தோட்டம்,கொற்றாவத்தை. (72618) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை




கரவெட்டி,ஏப்.6

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.07 தொடக்கம் 1.39 வரையுள்ள சுபவேளையில் இடம் பெறவுள்ளது.

முற்பகல் 11.30 மணிக்கு மணிக்கோபுர கலச அபிஷேகம் இடம்பெற்று 12 மணிக்கு கும்ப ஆராதனை இடம் பெறும். தொடர்ந்து ஏககலச கும்பாபிசேகம் நடைபெறும்.

ஒரு மணிக்கு சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவார்.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று அடுத்தமாதம் 17 ஆம் திகதி சகஸ்ர மகாசங்காபிஷேகம் விசேட திருவிழா என்பன இடம்பெறும்.

யாழ்.மாவட்டத்தின் அனைத்து இடங்களில் இருந்தும் ஆலயத்துக்கு வருகைதரும் அடியார்களின் நன்மைகருதி இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சேவையும் தனியார் பஸ் சேவையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சேவைகள் நாளை அதிகாலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு ஆலயச் சுழலில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் சாரணர்களும் தொண்டர்களும் கடமையில் ஈடுவர் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆலயச் சூழலில் இரவுவேளை தங்கும் அடியார்கள் இராணுவ உத்தரவுக்கு அமைவாக ஆலய எல்லையைத் தாண்டவேண்டாமென்று நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (203-70)



*சுன்னாகம் மயிலணி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற 'சுன்னாகத்தின் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் வைத்து பவளவிழாக் காணும் மூதறிஞர் சிற்பி கௌரவிக்கப்பட்டார். சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.குமாரவேல் சிற்பி அவர்களைக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். (203)*

# தெய்வத் திருப்பணிக்கு முன்னின்று உழைத்தவர்



தெல்லிப்பழையில் பெரும் கோயிலாக துர்க்கை அம்மன் கோயில் விளங்குகின்றது. இங்கு நடைபெற்ற திருப்பணிகள் பல உண்டு. இவற்றில் முன்னின்று உழைத்த பெரியார்களில் ஒருவர் அமரர் அ.க.கணேசரத்தினம்.

இவருடைய தந்தையார் கனகசுந்தரம் தெல்லிப்பழைக் கிழக்கை பல வேறுவகையிலும் அணிசெய்த குடும்பத்தவர்களாவார். இவர் துர்க்கா தேவி தேவஸ்தான திருவீதி விஸ்தரிப்புப் பணிக்குத் தமது காணியிலிருந்து மேற்கு வீதிக்கு காணி நிலத்தைத் தர்மசாதனம் செய்த பெருமைக்குரியவர் ஆவார்.

இக் குடும்பத்தவரின் தலைமகனாகப் பிறந்தவர் அ.க.கணேசரத்தினம். இவர் துர்க்கை அம்மன் கோயிலில் இடம்பெற்ற சித்திரத் தேர்த்திருப்பணி, இராஜகோபுரத் திருப்பணி, கும்பாபிஷேகத் திருப்பணி என்பவற்றில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண் டவர்.

## நீத்தார் நயப்புரை

அன்னார் அமரத்துவம் பெற்ற வேளையில் அ.க.கணேசரத்தினம் பற்றி ஆலயப் பெரும் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா பின்வருமாறு குறிப்பிட்டார்:

''எங்கள் துர்க்காதேவி ஆலயத்தின் உயர்ந்த வளர்ச்சியில் நிறைந்த பங்காற்றியவர் இவர். உள் மண்டபத்திருப்பணி, சித்திரத்தேர் திருப்பணி, இராஜகோபுரத் திருப்பணி ஆகியவை நடைபெற்ற காலத்தில் தமது வாகனத்தையும், முழுநேரத்தையும் கோயிலுக்கு என்றே அர்ப்பணித்துச் செயலாற்றியவர்.

நிர்வாக சபைத் தனாதிகாரியாக இருந்து பொருளைச் சேர்த்து ஆலயத்துக்கு உந்து சக்தியாக விளங்கியவர் இவர். இவருடைய ஓய்வு நேரப் பணிகள் எல்லாம் எங்கள் ஆலயப் பணிக்காகவே அமைந்தன''. எனக் குறிப்பிட்டுள்ளமை அன்னாரின் பணியின் பெருமைச் சிறப்புச் செய்கிறது.

இவர் தமது இறுதிக்காலத்தில் தமது மகள் குடும்பத்தாருடன் வாழ்ந்து கொழும்பில் அமரரானார். இவருடைய மனையாள் மங்களம் விருந்தோம்பும் பண்பில் முதன்மையானவர். மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் இனிது வாழ்ந்த பெரியார் அ.க.கணேசரத்தினம் அவர்களின் மறைவு பெரும் இழப்பாகும். அவரை என்றும் நினைவுகொள்வோம்.

கா.சிவபாலன்.

# தியாகத்தின் சின்னம் நற்கருணை

நாம் வாழும் இன்றைய சூழலில் கிறிஸ்தவர்களுக்கும் இன்று பொதுவாக அனைத்துச் சிறுபான்மையினருக்கும் பல்வேறு இன்னல்களும் இடையூறுகளும் நேர்ந்து கொண்டேயிருக்கின்றன. போர் அபாயங்களும், இராணுவ அச்சுறுத்தல்களும், ஆள்கடத்தல்களும், சமூக-பொருளாதார அரசியல் சூழலில் புறக்கணிக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட - உரிமையற்ற நிலைமையிலும் வாழ வேண்டியுள்ளது.

இத்தகைய சூழலில் நமக்கு ஆறுதலும், மன உறுதியும் எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றலும் கிறிஸ்தவ வழிபாடுகளால் அளிக்க இயலுமா?

எம்மாவு நிகழ்வில் சீடர்கள் கொண்டிருந்த சோகத்தைக் கலைத்து அவர்களுகக்கு உறுதியூட்டிய இரு பெரும் சக்திகளை லூக்கா குறிப்பிட்டுச் சொல்கிறார். இறைவார்த்தை, நற்கருணை என்ற இரு அடிப்படை அருள் சக்திகள்தான் இவை. தொடக்க கால திருச்சபைக்கு இந்த இருபெரும் சக்திகள்தான் வலுவூட்டின. கிரிஸ்தவ வாழ்வுக்கு உரமும் ஊக்கமும் தந்தன.



இன்று பல்வேறு தொல்லைகள்- பிரச்சினைகளால் மனமுடைந்து நிற்கின்ற கிறிஸ்தவ சமுதாயம் புதிய தென்புடன் ஊக்கமும் ஆக்கமும் பெற இறைவார்த்தை, நற்கருணை என்பன மக்களின் அன்றாட வாழ்வாதாரமாக- வாழ்வாக சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இவற்றில் மக்கள் உயிர்த்த யேசுவை கண்டனுபவிக்கும் பக்குவம்- ஞானம்- வல்லமை பெறவேண்டும்.

நற்கருணையில் நாம் நினைவு கூரும் யேசு. இவ்வுலகில் இறையாட்சியை நிலைநாட்டியவர். வாழ்க்கைச் சவால்களைச் சந்தித்தவர். தன்னையே தியாகப்பலி பொருளாகத் தந்தவர் என்ற உணர்வுகள் இல்லாமல் நாம் நற்கருணையைக் கொண்டாட இயலாது இன்றும் அதே இயேசு நம்மில் செயற்பட வேண்டும் என்ற ஓர் உத்வேகப் புத்துணர்ச்சி நம்மில் ஏற்படாவிட்டால் நற்கருணை ஒரு சடங்காகவிருக்கும். நற்கருணையால் ஒன்று கூடுதல். கொண்டாடுதல், பகிர்தல், அக்கறை காட்டுதல், தியாகம் செய்தல், சவால்களைச் சந்தித்தல் போன்ற உணர்வுகள் மேலோங்கினால் இறைய சூழல் ஏற்படுத்தியுள்ள தொல்லைகள் குழப்பங்களை நாம் சுலபமாக மேற்கொள்ள முடியும். *

# சதாபிஷேகம் கண்ட இறைபணியாளர்



யாழ்ப்பாணம், காரைநகரைச் சேர்ந்த ஆன்மீகத் தொண்டர் கே.கே.சுப்பிரமணியம் அவர்களது சதாபிஷேக (எண்பது வயதுப் பூர்த்தி) விழாவும், கே.கே.சுப்பிரமணியம் - சரசுவதிஅம்மா தம்பதியினரின் திருமணப் பொன் விழாவும் கடந்த 23 ஆம் திகதி காரைநகர் மணற்காடு அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் சிறப்புற நடந்தேறின.

இளைப்பாறிய சுங்கத்திணைக்கள அதிகாரியான கே.கே.சுப்பிரமணியம் கடந்த பல ஆண்டுகளாக ஆன்மீக நெறியில் இறைபணிசெய்து வருகிறார். பல சைவசமய ஸ்தாபனங்களிலும் முக்கிய பதவிகளை வகித்து சமயத் தொண்டாற்றியும் வந்துள்ளார்.

அகில இலங்கை இந்து மாமன்றம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை என்பவற்றிலும் பொறுப்பான பதவிகளை வகித்து சமயப் பணியாற்றியுள்ளார். இவரது சமயத் தொண்டினைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சி ஆதிசங்கர மடம் உட்படப் பல சமய அமைப்புக்கள் இவருக்குக் கௌரவப் பட்டங்களை வழங்கிச் சிறப்பித்துள்ளன.

# ஏழையர்க்கு எட்டாத பண்டமானாய் பாணே! நீ விசும்பில் பறக்கின்றாயே!!





ஞாயிறு கவிதை

பாரினில் உன்னை பாண்என்பர் உரொட்டியென்பர்
ஊரில் உணவாய் உயிர்காப்பாய் - போரில் நீ
புரியும் பெரும்தொண்டால் புகழுற்றாய்
சிறியோரும் பெரியோரும் வாழ்கிறார் உன்னால்
இரண்டாம் அகிலப் போரின்போது உலகம்
இரண்டாய்ப் பிரிந்து பெரும்போர் புரிந்தனர்
ஏரினை மறந்து இயந்திரம் போற்றவே
அரிசியும் குறைந்து கோதுமையும் வந்தது
நல்லவெள்ளை ஆனதால்க ரியகுரக் கன்தாழ்ந்தது
பலவிதப லகாரமும் பசையு மாகுதது
காலையில் அம்மா பிள்ளைக்குப் பாண்தன்னை
விலைக்கு வாங்கும் வித்தையும் பிறந்தது
ஆருயிர் பாணே! அருமைப் பண்டமே!
யாருக்கும் எளியாய் யான்உனைப் போற்றுவேன்
ஆரம்பத்தில் வெறுத்தவர் அருமைஅறிந் துனைப்போற்றிட்டார்
வீரர்தாமும் விரும்பி வேளையுணவாய் புனைக்கொண்டனர்
வயலில்வ ஊவில்கூலி வாங்கிதொழில் செய்வோர்
இயல்பாய் பெறும்நல் உணவானாய் உழைப்போர்
படிப்போர் பசிதீர்க்கும் பாணேநீ வாழ்க!
சம்பல் உனக்குநற் சகபாடி வெண்நெய்யும்
பழப்பாகும் உனது பங்காளர் மாடிவீட்டு
சோலிமிக்க செல்விகளும் சோம்பல் மிக்கசீ
தேவியரும் உன்னை தேர்ந்து மென்றிடுவர்
நொந்து கெட்டவர்க்கும் நோயாள ருக்கும்
பந்துக்கள் அற்றோர்க்கும் பகலுணவு நீயானாய்
இல்லால் முனிந்து இயலாதென் றாலுமேதும்
இல்லாத போதும் பசிஎடுத்த போதும்
பெரும் கருணை புரிவதும் நீயன்றோ
எருதுக்கும் உணவாவாய் எங்கும் இருந்திடுவாய்
பசித்தோர்க் குணவாவாய் பருத்தோர்க்கு மருந்தாவாய்
விதியின் சதியோ வேறென்ன பழியோ
ஒய்யார மங்கையர்க்கு ஓய்வு கொடுத்தாய்
ஓயாது ஒரு நாளும்ஒழியாது உயிர் காத்தாய்
ஏழையர்க்கு எளிதாக எட்டாதபண்டமானாய்
வேளைக்கு ஒருவிலை யாகஉயர்ந்து விட்டாய்
[illegible]த்தநீ விசும்பில் பறக்கின்றாயே!
[illegible]டு கதியிழந்து செயல்இழந்து சோர்கிறேனே!

- பிறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமிதத்தோடு வாழ்த்துகின்றோம்



எமது வாழ்வகத்தின் பழைய மாணவரும் மட்டக்களப்பு, கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத்தின் தற்போதய ஆசிரியருமான

**திரு.நாகராஜா இதயராஜன்**


அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது கல்வி முதுமாணி (M.Ed.) கற்கைநெறியினைப் பூர்த்திசெய்ததன் மூலம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விழிப்புலனற்றோருள் முதலாவது கல்வி முதுமாணி என்ற பெருமையினைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். இவர் மேலும் பல உயர்வுகளைக் காண உளமார வாழ்த்துகின்றோம்.

வாழ்வக சமூகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

(சி/552170)

## நெஞ்சம் நெகிழும்

37 ஆம் நாள் | 31 ஆம் நாள்



அமரர் ஏரம்பு செல்லம்மா
(மண்கும்பான்)



அமரர் சாம்பசிவம் சாம்புணதீஸ்வரி
(மண்கும்பான்)

| | | |
|---|---|---|
| 05.12.1923 | உதயம் | 15.04.1956 |
| 01.03.2008 | அஸ்தமனம் | 07.03.2008 |

மண்ணில் புதுமலராய் பூத்து புன்னகைத்த எம் செல்வங்களே பல யுகங்கள் போல இருக்குது நீங்கள் இருந்த இடம் எல்லாம் தவிக்குது. எம் உறவுகளே! உங்கள் ஞாபகங்களை இப்புவியில் இருக்கும் வரை வந்தனம் செய்வோம்.

இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னார்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

கே.ரவீந்திரன்
17/27, பண்டாரக்குள லேன், நல்லூர். (72861) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா கண்ணுத்துரை

(முன்னாள் இளைப்பாறிய RAILWAY COLOUR LIGHTS CONTROLLER)

கொக்குவில், புதுக்கோயிலடியைப் பிறப்பிட மாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண் ட செல்லையா கண்ணுத்துரை 02.04.2008 லண்ட னில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா - ராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துவேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் மருமகனும் பூபதி அம்மாவின் அன்புக் கண வரும் ரவீந்தின் (U.K.), பாலேந்திரன் (U.S.A), யசோதரா (வசந்தி), ராஜேந்திரன் (U.K.), குலேந்திரன் (U.K.), சுகந்தி, லோகேந்திரன் (U.S.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயராணி (U.K.), தமயந்தி (U.S.A), இராமச்சந்திரன், ANNA (U.K.), புஷ்பராணி (U.K.), மகேஸ்வரன், ஷர்மிலா (U.S.A) ஆகியோரின் அன்பு மாமனும் தயான், கார்த்திக், GAVIN, DAMIAN, அனுஷன், ஆகாஷ், கேசவ், கிரிகேஷ், ரிஷிகன், ரஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கணேஷமூர்த்தி, பழனித்துரை மற்றும் கனகாம்பிகை, புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோ தரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: ரவி (U.K.) 0208 205 3974 (07957625535)
ராஜன் (U.K.) 0208 906 4689 (07951559961)
குலேந்திரன் இந்தி, (U.K) 0208 204 2664 (07984100881)
0208 933 3992
வசந்தி 2503223
சுகந்தி 2363551

34/4, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
0776171519

தகவல்:
கயிலாயபிள்ளை வசீகரன்

(72864)

### தம்பிஜயா தருமசேகரம்



புத்தூர், நவக்கிரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிஜயா தரும சேகரம் (04.04.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பி ஜயா - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும் தேவராணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற அழகம்மா மற்றும் நாகரத்தினம், குணரத்தினம், சந்திரசேகரம், குலசேகரம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நிலா வரை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் மேற்கு,
நவக்கிரி.

தகவல்:
தேவராணி (மனைவி).

(72862)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**வேலன் இராசையா**

அச்சுவேலி வடக்கை வதிவிடமாகக் கொண்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.விஜயமோகனராஜா அவர்களின் பாசமிகு தந்தையார் **வேலன் இராசையா** அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

உறுப்பினர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சுன்னாகம் ப.தே.வள அபி.கூ.சங்கம்.

(72858)

## நெஞ்சம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



திருமதி

**மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்**

(வலிகாமம் கல்வி வலய மனைப்பொருளியல் ஆசிரியர் கழக முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர்)

அன்போடும் பண்போடும் எம்முடன் சேவையாற்றி
பூத்த புன் சிரிப்பால் எம் மனங்களை மகிழ்வித்தீர்
நீங்காது உம் நினைவலைகள் எம் நெஞ்சை விட்டு

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவ னைப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருற் றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைப் பொருளியல் ஆசிரிய சமூகம்,
(சி/552176) வலிகாமம் கல்வி வலயம்.

### விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.06

கொக்குவில் மத்திய சனசமுக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்துக்காக நடத்திவரும் கிரிக் கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு கொள் ளும் அணி களின் விவரம் வருமாறு:

* காலை 8.30 மணி - ஜொனியன்ஸ் வி.க. எதிர் யூனியன் வி.க.

* பிற்பகல் 1.30 மணி - கிறாஸ் கொப்பர்ஸ் எதிர் நியூ ஸ்ரார் வி.க.(1)

### நாடகம்

யாழ்ப்பாணம்,ஏப்.06

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்குவேம்படி உயர்தரப் பாட சாலையில் 'நரேந்திரர்' தமிழ் நாடகம் காண்பிக்கப்பட வுள்ளது. (202)

### கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.06

சாவகச்சேரி நகர சபை ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் பொதுக்கூட்டம்எதிர் வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை நகர சபைகேட்போர்கூடத் தில் சங்கத் தலைவர் திருமதி கு.ஆறு முகம் தலைமை யில் நடைபெறவுள் ளது. (202-207)

## திருமண வரவேற்புபசாரம்

நிகழும் சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 11ஆம் திகதி 24.03.2008 திங்கட்கிழமை திருமலை, உவர்மலை ஸ்ரீ கண் ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற எமது திருமண வைபவத்தையொட்டிய வரவேற்புபசாரம்.

பங்குனி 24ஆம் திகதி இன்று (06.04.2008) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் வல்லை வீதி, சங்கானையி லுள்ள எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் வைபவத்தில் தாங்கள் அனைவரும் வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

*இவ்வண்ணம்*
*தங்கள் நல்வரவை நாடும்:*

**திரு. திருமதி ர.ஜெயராஜக் குருக்கள் - சுசிலா தம்பதியினர்**

*(பிரதம குரு, வேவில்பதி ஐயனார் கோயில் சண்டிலிப்பாய், பிரதம குரு கூடத்து மனோன்மணி அம்மன் கோயில், சங்கானை.)*

சிவஸ்ரீ ரஞ்சிதானந்த சர்மா - கல்யாணி
பிரம்மஸ்ரீ சோ.சண்முகானந்தாசர்மா - கஸ்தூரி
பிரம்மஸ்ரீ கெ.சிவசங்கரசர்மா - தர்சினி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணக் கல்வி வலய முன்பள்ளி
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**தம்பிப்பிள்ளை பஞ்சலிங்கம்** அவர்கள்

"மலரும் பூக்களின் வாழ்விற்கு அரும்பணியாற்றிய எங்கள் ஐயாவே!
உம்மை கண்ணின்றிக் காலன் கவர்ந்தானே ஐயா!"

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். கோட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்க நிர்வாகம்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(72868)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி
உதவிக் கல்விப் பணிப்பாளர்

**அமரர் த.பஞ்சலிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதா பத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

வலயக் கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

வலயக் கல்விப் பணிப்பாளரும்
முன்பள்ளி ஆசிரியர்களும்.


# New Year Promotions...

## Mp3 / Mp 4 Players



* ORANGE CAR MP3/FM PLAYER - 3800/=
* ORANGE 1 GB MP3 PLAYER - 4800/=
* ORANGE DIGITAL 1 GB USB FLASH / MP3/ FM VOICE RECORDER - 6250/=
* CREATIVE 1 GB M3 PLAYER FM RADIO, USB FLASH DIGITAL - 7250/=

MP4 PLAYER

MP - 4 PLAYER / MP 3 PLAYER / FM RADIO/ VOICE RECORDER.
GAMES/ CAMRA/DV FROM RE 6000/= UPTO RS 12500/=

PRINTER
HP 1460 COLOUR - 5200/=
HP 3940 COLOUR - 4900/=
SAMSUNG ML 2010 LASER JET - 14900/=
[4000 COPIER]
HP 21,22 BLACK AND COLOUR CHARGES [ORIGINAL]. -3750/=

MOTHER BOARD
478 DDR - I - 6800/=
478 DDR - II - 7200/=

PROCESSOR
INTEL 3.0 GHZ 2M - 7800/=
INTEL 1.8 DUAL CORE - 8500/=
INTEL 2.0 DUAL CORE - 10,400/=
INTEL CELERON - 4900/=
INTEL 3.0 GHZ DUAL CORE 4M - 10,500/=

HARDDISK
40 GB IDE - 3300/=
80 GB IDE - 5600/=
160 GB IDE - 6400/=

RAM
1GB KINGSTONDDR - II - 2300/=
512 MB KINGSTONDDR - II - 1500/=
512 MB KINGSTONDDR - I - 3500/=
ATA 512 MB DDR - I - 2400/=
ATA 256 MB DDR - I - 1400/=
SD RAM 128 MB - 1500/=

MONITORS
SAMSUNG 15" CRT - 11250/=
MONITORS 15" LCD - 20500/=
MONITORS 17" LCD - 21750/=

SAMSUNG SATA DVD R/W - 3900/=
CREATIVE [SBS 350] 2.1 BOFER - 3800/=
CREATIVE 5.1 BOFER - 8750/=
MICROLAB 2.1 BOFER - 3800/=

UPS
EAST 650 W - 5600/=
MERCURY 650 W - 5700/=
POWER TREE 650 W - 5750/=
PROLINK 650 W - 6250/=

WARANTY ONE YEAR TO THREE YEARS

MUSIC WORLD & COMPUTERS
141B, [illegible] வீதி,தபால் பெட்டி சந்தி,திருநெல்வேலி
ஞயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும் T.P: 021222 6554


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புத்தாண்டு அன்பளிப்புகள்
WESTERN UNION
எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை 07.04.2008
முதல் 15.04.2008 வரை வெஸ்ரேண் யூனியன் மூலம் எம்மிடம் ஒரு சில நிமிடங்களில்
பணத்தைப் பெறுவதுடன் அளப்பரிய பரிசில்களையும் பெற்றுக்கொள்ள
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
NO, 303 K.K.S.ROAD, JAFFNA.

## உயர்திரு வைத்திலிங்கம் வைத்தியகுமார் அவர்கள் வடமாகாணக் கல்வி அமைச்சில் நிர்வாக உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுச் செல்வதை இட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்பு, பணிவு, பொறுமை நற்பண்பாடு
கண்ணியத்தினோடு கடமை தவறாது
உண்மை வழி நடக்கும் உத்தமனே!
குமார் அன்ப;
உன்புன்னகையும், பொன்மனதும்
தேனாய் இனிக்கும் திக்திக்கும் வார்த்தைகளும்
உன்னை;
இன்னும் உயர்த்தும்
உன் உயர்வு கண்டு
உள்ளம் மகிழ்ந்தோம்
உணர்வுகளால் மெய் மறந்தோம்
நெஞ்சார, நெஞ்சார
நித்தம் உமை வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயம்,
கலாமன்றம் ச.ச.நிலையம்,
திருநெல்வேலி.

அரசடி ஸ்ரீ சிவகாம சுந்தரி
தேவஸ்தானம்,
YMHA, திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவரும்
சிறந்த சமூக சேவையாளருமான

அமரர் லயன்

### சுப்பிரமணியம் யோசேப் பூராசா (J.P.)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தீவக அரிமாக் கழகம்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19
★
10
★
1921



மறைவு
21
★
03
★
2008

### பண்டிதர் க.சச்சிதானந்தன்

B.A.(Hons) Lond, M.Phill (Lond), Ph.D (Jaffna), வானியல் வல்லுநர்

21.03.2008 அன்று எமது குலவிளக்காம் கணபதிப்பிள்ளை சச்சிதானந்தன் அவர்கள் காலமாகிய செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைத்தொடர்புகள், நாளேடுகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சேவைகளைப் புரிந்தவர்களுக்கும், நோயுற்றவேளை வைத்தியசாலையில் சேவைகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, 09.04.2008 புதன்கிழமை அன்று காலை 7 மணியளவில் தும்பளை முத்துமாரி அம்மன் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தும்பளை,
பருத்தித்துறை.

(சி/552171)

மனைவி,
பிள்ளைகள்.

## மதிப்பீடு....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைவபரிபாலன சபைப்பரீட்சையில் வெள்ளிப் பதக்கத்தினை யும் பெற்றுள்ளேன். நண்பர்களையும் மறக்கமுடியாது

எனது கல்வி முன்னேற்றத்துக்கு நான் கல்வி கற்ற தனியார் கல்வி நிலைத்தின ரும் கணிசமான பங்களிப்பை ஆற்றியிருக்கின்றனர். அவற்றை மறக்கமுடியாது. கல்லூரியின் அதிபர், ஆசிரியர்களின் செயற்பா டுகளும் அறிவு றுத்தல்களும் மிக உந்துசக்தியாக இருந் தமை மறந்து விட முடியாது -

## தன்னம்பிக்கையும்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்கப்பதக்கத்தைப் பரிசாக பெற்றேன். யாழ். சைவபரிபால ன சபை கடந்த வருடம் நடத்திய ஆறுமுக நாவலர் தின பேச்சுப் போட்டியிலும் முதலிடம் கிடைத்தது. தங் கப் பதக்கத்தை பரிசாகப் பெற்றேன். களனி பல்கலைக்கழகம் அகில இலங்கை ரீதி யில் நடத்திய கட்டுரைப் போட்டியிலும் சிறப்புப் பரிசு கிடைத்தது.

வட்டு மத்திய கல்லூரியின் வரலாற்றில் 10 'ஏ' சிறப்பு சித்தியை பெற்ற மைதிலி மோகனராசாவுக்கு கல்லூரி அதிபர் சபாரத் தின சிங்கியும், கல்லூரி சமூகமும் தங்கள் ஏகோபித்த பாராட்டுதலை தெரிவித்துள்ள னர். கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பெற் றோர்கள் மற்றும் நண்பர்கள் என க்களித்த உற்சாகமும் உந்துதலும், ஊக்கமும்தான் இவ்வாறு சிறப்பு சித்தி பெறுவதற்கு எனக்கு உறுதுணையாக இருந்தது. அவர்களுக்கே நான் நன்றியுடையவள் - என்றார் மைதிலி மோகனராசன். (அ-135)

## உயிரியல் கற்று...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுக்குக் கிடைத்த பேறாகவே கருது கிறேன்.

பாடசாலைச் சமூகம் கல்வியில் நான் வெற்றி பெறும்போது என்னைப் பாராட்டியும் சில சந்தர்ப்பங்களில் நான் வெற்றியடையாத போது என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கு வித்து வந்ததையும் நான் மறந்துவிடமுடியாது.

அதனாலேயே நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்று அகில இலங்கை ரீதியில் 5 ஆம் இடத்தைப் பெற்றேன்.

கல்லூரித் தாயின் அரவணைபினாலும் இறைவன் அனுக்கிரகத்தினாலும் இப் பெறுபேற்றைப் பெற்றுள்ளதை எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதுகிறேன்.

இலட்சியத்தில்மனம்ஒன்றிவிடமுயற்சியுடன் கற்பதன் மூலம் இலக்கை அடைய முடியும் என்பதில் எனக்கு ஆணித்தரமான நம்பிக்கை உண்டு.

## இலக்கை நோக்கி...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை வைத்து எனது நல்வாழ்வுக்காக செயற்பட்டு வரும் எனது பெற்றோர், சகோ தரர்களை நான் மகிழ்விக்கவேண்டும். அதன் மூலமே நான் மகிழ்ச்சியடைய முடியும்.

நான் ஒருசிறந்த டாக்டராக திகழ்ந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற இலட்சியமே உண்டு. இந்த இலட்சியத்தில் நான் வெற்றி பெறவேண்டும். இதன் மூலம் நான்கல்வி கற்கும் பாட சாலைக்கும் பெருமை தேடிக்கொடுப்பதோடு எனது குடும்பத்தினருக்கும் பெருமையைப் பெற்றுக்கொடுத்து எனது வாழ்வையும் மேம்படுத்துவேன்.

நான் இச்சாதனையை நிகழ்த்த எனக்கு உல்லியனொல்லை கண்ணகை அம்பாளே அனுக்கிரகம் வழங்கியுள்ளார் என்பதை பெருமையுடன் கூறுகிறேன்.

எனது தகப்பனார் உல்லியனொல்லை கண்ணகை அம்பாள் ஆலய குருக்களாவார். எனக்கு எட்டுச் சகோதரர்கள். இருவர் ஆண்கள், அறுவர் பெண்கள். குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியராக இருந்து அக்காதற்போதுலண்டனில்,அண்ணை ஜேர்மனியில் ஒரு சகோதரி மட்டும் திருமணமாகாதவர்.நான் தொடர்ந்தும் உயர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியவேண்டும். (218)

## கண்ணீர் அஞ்சலி

### த.பஞ்சலிங்கம்

(உதவிக்கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சிரேஷ்ட துணை பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அச்சாணியாக விளங்கிய அதிபர், ஆசிரியர், மாணவர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஆசானின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தவர்களுடன் நாமும் இணைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்,
தென்மராட்சிக் கிளை.

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி காசிப்பிள்ளை [ஓய்வுபெற்ற அதிபர்]



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது புத்தூ ரில் வசித்து வந்தவருமான இளையதம்பி காசிப்பிள்ளை 04.04.2008 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சந்திரசேகரம், தம்பாப்பிள்ளை, திருவிளங்கம், சரஸ்வதி, யோகாம்பிகை, மகாலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் தயாளினி, தயாபரன் (ரவி), அகிலநாதன், காலஞ்சென்ற சுதாயினி, உஷாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்நேசன், மேனகா, ஈஸ்வரி, கோடீஸ்வரி, கதிர்வேல் ஆகியோரின் அன்பு மாமனாரும், அருணன், சுபகரன்,சமிரன், வினு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் புத்தூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சித்துசிட்டி புத்தூர் இந்து மயானதில் நேற்று (05.04.2008) சனிக்கிழமை தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவமகம்"
புத்தூர் கிழக்கு,
பத்தூர். தொ.பே. 077 9059524

(சி/558184)

தகவல்:
குடும்பத்தினர்.

### பராசக்தி சின்னத்துரை

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சின்னத்துரை (31.03.2008) இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கதிரவேலு-சின்னம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மீசாலையை (புத்தூர் சந்தி) சேர்ந்த செல்லையா-சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகளும், உதயகுமார், வரதன், அல்லி, விபுலன், பாமா, பத்மா, காலஞ்சென்ற பிறேமா ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகபூசணி, நடேசலிங்கம் (பழனி) குமரகுருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகர், அமுதகௌரி ஆகியோரின் மைத்துனியும், சுகுணா, கிருபாகரன், மேகலா, திருவருள், கஜரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராகுலனின் பெரியம்மாவும், கார்த்திகன், சுருதி, நிலாணி, நிசாந்தி, நிஜந்தா, அஜந்தா, மிதுரன், கனிமொழி, கோகுலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விபுலன்: 0044 2476365703 (லண்டன்)
குமரகுருபரன்: 077 3647025 (இலங்கை)
வைரவநாதன்: 001 4164127198 (கனடா)

நாகபூசணி மாணிக்கவாசகர்
நிலாவரை, புத்தூர்.

### பார்வதிஅம்மை வேலாயுதபிள்ளை



கோப்பாய், பூதர்மடத்தை பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதிஅம்மை வேலாயுதபிள்ளை (03.04.2008) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-கமலாம்பிகை தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற வேலாயுபிள்ளையின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, வெற்றிவேல் (போதனாசிரியர் - தொழில் நுட்பக்கல்லூரி), ஜெகதீஸ்வரி, விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு தாயாரும், செந்தில் நேசனின் பெரிய தாயாரும், சிவகுருநாதர், ஜெயலட்சுமி, பாலகுமாரன் (போதனாசிரியர், தொழில் நுட்ப கல்லூரி), இந்திரகுமார் (இராசா டீசல் என்ஜினியர்ஸ்), துவாரகா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயந்தினி, சிவகுமார் (கனடா), பாமினி (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், மருதனார்மடம்), கஜானன், நாராயணி, சாருகா, லஷ்சனா, சோபனா ஆகியோரின் பேர்த்தியும், ஆரணியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் (04.04.2008) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(72874)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பொற்கொடி (இரத்தினமணி) சுப்பிரமணியம்



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஹற்றனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொற்கொடி சுப்பிரமணியம் நேற்று (05.04.2008) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநெல்வேலி மதியாபரணம் - செல்லம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (உடற்பயிற்சி விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை, சாரண இயக்க ஆளுநர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பங்கசவல்லி, பவளக்கொடி, சிவசுப்பிரமணியம் மற்றும் இராஜலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கெங்காதரன், மகேந்திரன் (இந்தி), குகேந்திரன் (குகா), மாலதி, குமாரசாமி (குமார்), இரஞ்சினி, பகீரதன், சாந்தி, தயாளினி, அமிழ்தினி ஆகியோரின் அன்புத் தாயும், விமலாதேவி, தேவராணி, ஈஸ்வரி, விஜயேந்திரன், வெல்சியா, சிவசுப்பிரமணியம், சந்திரா, சாந்தரூபன், மோகனதாஸ், இந்திரஜித் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7/80, Templers Road,
Tempers Court,
MT.Laviniya
T.P.011 273 0706, 077 312 4313

தகவல்:
கெங்காதரன்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

## உதவிக் கல்விப் பணிப்பாளரின் இறுதிக் கிரியைகள் இன்றுகாலை

யாழ்ப்பாணம்,ஏப்.6

கடந்த வியாழக்கிழமை காலமான யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளருமான த.பஞ்சலிங்கத்தின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறுகின்றன.

அரியாலை, கலைமகள் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, மு.ப. 10 மணிக்கு பூதவுடல் ஊர்வலமாக யாழ்.கல்வி வலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

யாழ்.கல்வி வலயத்தில் கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் அஞ்சலியுரையாற்றுவர்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுச் தகனம் செய்யப்படும். (அ-1)


பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால பயிற்சிநெறிகள் ஆரம்பம்

GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
VISUAL BASIC (G.C.E O/L)
Kids Programming (Year3-10)

Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170



வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இன்ரநெற்றில் முகம் பார்த்து கதைப்பதற்கு ......

Internet Browsing




Internet Call 7/=

இந்தியாவிற்கான அழைப்பு 15/=

திருமுருகன் கொம் நெற்



கிராம அபிவிருத்தி / சமூக அபிவிருத்தி } உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள்

ஞாயிறு [இன்று] 1.00-4.00
திங்கள், செவ்., புதன் நாள்களுக்கான நேரங்கள் வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 021 2223382

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக



ஏசியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு

A/L- 2010
அனைத்து பிரிவுகளும் இரு இடங்களிலும்
ஆரம்பம்-09.04.2008 புதன்காலை 9 மணி

O/L DAY CLASS
ஆரம்பம்-09.04.2008 புதன்காலை 11 மணி

T.P: 0779228706 இயக்குநர்: ஷங்கர்வாமன் (விஞ்ஞான ஆசிரியர்)



விற்பனைக்கு-மாருதி சுசுகி -800

மாற்றலாகிச் செல்ல இருக்கும் வைத்தியர் தனது மாருதி சுசுகி 800 ஐ விற்கவுள்ளார்.

தொடர்பு:- 0602213591
இரா. கந்தையா
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.



36ஆவது வருட சேவையை நோக்கி
BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்

A/L- 2010
★ கலை ★ வர்த்தகம் ★ கணிதம் ★ உயிரியல் வகுப்புகள்
ஆரம்பம்: 09.04.2008 புதன் மாலை 4.00
O/L DAY CLASS ஆரம்பம் 09.04.2008 புதன் காலை 8.00


## ஒகேனக்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுக் குடிதண்ணீர் திட்டத்தை நடைமுறைப்படுத்த அண்மையில் முதல்வர் கருணாநிதி அடிக்கல் நாட்டியிருந்தார்.

ஆனால் இந்தத் திட்டத்தை எதிர்த்து கர்நாடகத்தில் வன்முறைகள் வெடித்தன. இந்த நிலையில் திடீர் திருப்பமாக கர்நாடக மாநில சட்டசபைத் தேர்தல் முடியும் வரை ஒகேனக்கல் திட்டத்தை இடைநிறுத்தி வைப்பதாக முதல்வர் கருணாநிதி நேற்று அறிவித்துள்ளார்.

அதே வேளை கர்நாடகத்தில் அமையும் புதிய ஆட்சியும் இந்த குடிதண்ணீர் திட்டத்தை எதிர்க்குமானால் தமிழர்கள் தங்கள் உடைமைகளையும் உயிர்களையும் இழந்தாலும் கூட உரிமைகளையும் இழந்திடும் சுயமரியாதை அற்றவர்களாக இருக்க மாட்டார்கள் என்பதை உலகுக்கு உணர்த்துவோம் என்றும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாகினும் முதல்வர் கருணாநிதியின் இந்த முடிவு குறித்து தமிழகத்தில் பெரும் வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. அவரின் முடிவுக்கு சாதகமான கருத்துக்களையே முக்கிய அரசியல், சினிமா பிரமுகர்கள் வெளியிட்டனர். (அ-2)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை உறுதிப்படுத்தும் வகையிலும் விமல் வீரவன்ஸவை சமாதானப்படுத்தும் வகையிலும் நேற்று சனிக்கிழமை காலை ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியின் மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவரான லால்காந்த கட்சியிலிருந்து விமல் வீரவன்ஸவை தற்காலிகமாக இடைநிறுத்தியிருப்பதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பான தகவல் என்று தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து விமல வீரவன்ஸ தியாகிகள் நாள் நிகழ்வில் கலந்துகொள்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அவர் இந்நிகழ்வை புறக்கணித்து ஜே.வி.பி இரண்டாகப் பிளவுபட்டுள்ளதை உறுதிப்படுத்தியிருக் கிறார்.

விமல் வீரவன்ஸவை கட்சியில் இருந்து நீக்கும் முடிவு கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்ற ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத் தில் எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப் படுகிறது. (அ-1)


N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ்.றோட், இணுவில்

O/L DAY CLASS

ஆரம்பம்-07.04.2008 திங்கள் 8 மணி
Note: கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 10 மணித்தியாலம்



BRAIN POWER INSTITUTE

A/L- 2010
புதிய பிரிவுகள்
கலை, வர்த்தகம், விஞ்ஞானம்
★ ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்
★ யாழ் நகரின் முன்னணி ஆசிரியரின் ஒருங்கிணைந்த சேவை
ஆரம்பம்-07.04.2008 திங்கள் பி.பி 4 மணி



ஸ்ரார் கல்வி நிலையம்
ஸ்ரேசன் றோட், சுன்னாகம்

O/L DAY CLASS

ஆரம்பம்-09.04.2008
புதன்கிழமை காலை 8 மணிக்கு
நிர்வாகி



நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

O/L பகல் நேர வகுப்பு
DAY CLASS

ஆரம்பம்-09.04.08 (புதன் 7 மணி)
வழமையான ஆசிரியர் குழு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.


## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி இல்லாவிட்டால் இலங்கை இந்தியாவின் கால்பந்தாட்ட மைதானமாக மாறி இருக்கும். நோர்வே உட்பட ஏகாதிபத்திய நாடுகளின் மேலாதிக்க கோட்டையாக இலங்கை மாறியிருக்கும். இதனை நாமே தடுத்து நிறுத்தியிருக்கிறோம்.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கவேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். அப்போதுதான் அம்மக்கள் பிரபாகரனிடம் இருந்து பிரிந்து வருவார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன ஐக்கிய முன் னணியும் படுதோல்வி அடையும். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்காகவே அரசாங்கம் இந்தத் தேர்தலை நடத்துகிறது. பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் அரசாங் கத்தை தோல்வி அடையச் செய்து நாம் ஆட்சியைக் கைப் பற்றுவோம் - என்றார். (அ)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிக்கொண்டு வரும் வகையிலான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிடு வது என்றும் முடிவு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முழங்காவிலுக்குச் சமீபமாக தேவன்பிட்டி கிராமத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள மடுமாதாவின் திருச் சொரூபத்தை தற்காலிகமாக அங்கேயே வைத்திருப்பது என்று அங்கு தீர்மானிக்கப் பட்டது.

மடுதேவாலயப் பகுதியை சமாதானப் பிரதேசமாக்கும் முடிவு குறித்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேசுவதற்காக மன்னார் ஆயர் தலைமையிலான விசேட குழு ஒன்றை கிளிநொச்சிக்கு அனுப்புவது என்றும் தீர்மானமாகியது. இலங்கை ஆயர் மன்றத்தின் ஊடாக மடுக்கோவில், சமாதான வலயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசாங் கத்திடம் நேரில் வலியுறுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டதாக மன்னார் குரு முதல்வர் அருட்தந்தை விக்டர் சூசை தெரிவித்தார்.

ஆலய பரிபாலர்கள், பணியாளர்கள் மற்றும் அங்கிருந்த பொதுமக்கள் அனைவரும் மடுத்தேவாலயத்தில் இருந்து பாதுகாப் பான இடங்களுக்கு வெளியேறியுள்ள நிலை யில் அங்கு என்ன நடக்கிறது என்பது பற்றிய பக்க சார்பற்ற தகவல்களை பெறமுடியா திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மருப்பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரியாள் தேவாலயத்திலும், கிரான்ட் பாஸ் புனித சூசையப்பர் தேவாலயத்திலும் இன்று புனித மடுமாதா தேவாலயத்தின் பாது காப்பு வேண்டி விசேட திருப்பலிகள் நடைபெற ஏற்படாகியுள்ளன. (அ)


Com Maths
வட்டம்
ஆரம்பம் 07.04.2008
Mon 2p.m
By: ...நிசென் B.Sc.
NAVALAR
Jaffna.



புதிய பிரிவு ஆரம்பம்
A/L 2010
கணக்கீடு
P.பகீரதன்
ஆரம்பம்
08.04.2008 Tue 3.pm
(Tue,Wed 3-4 pm)
குறிப்பு: பாடம் மாறிப் படிப்பவர்களுக்காக அடிப்படையில் இருந்து கற்பிற்கும்
Business College
1ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
(மத்திய கல்லூரி அருகில்)


## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் மேலும்பல பஸ்கள் தள்ளி இயக்கும் நிலையில் உள்ளன என்றும் கூறப்பட்டது.

கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்னர் பஸ்களுக்கான ரயர்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இதையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நடவடிக்கையால் ரயர்கள் குடாநாட்டிற்கு எடுத்துவரப்பட்டன. அதன் பலனாக தடைப்படவிருந்த பஸ் சேவை சீராக நடைபெற்றுவந்தது.

தற்போது மீண்டும் பஸ் சேவை தடைப்படும் நிலை தோன்றியுள்ளது. மின்கலங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களில் பலவற்றில் மின்கலங்கள் பழுத டைந்துள்ளமையால் பயணிகள் பஸ்களைத் தள்ளி இயக்கும் நிலைமை அடிக்கடி ஏற்படுகின்றது.

விரைவில் மின்கலங்கள் எடுத்துவரப் படாவிட்டால் பல இடங்களுக்கான சேவைகள் தடைப்படும் என்று சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-202)

## மியான்மரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரிசியின் முதலாவது தொகுதி விரைவில் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேரவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

அரிசியை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்வதற்கு முன்னர் உத்தேசிக்கப் பட்டிருந்த போதிலும், அங்கு குறைந்த விலையில் வாங்கமுடியாதிருந்ததால் மியான்மரில் இருந்து பெற்றுக்கொள்ள முடிவுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ-2)


Softview Computer College
55, Arasady Rd, Jaffna. T.P: 021 2225170

Dip. In Internet E-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hardware Engineering
Start on: 6,9.04.2008



நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
யாழ்.நகரில் முன்னணி ஆசிரியர் குழுவினால்

O/L Day Class
ஆரம்பம்:- 07.04.2008 Mon 8 a.m
அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்



நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை நிறுவனம்: 417, கே.கே.எஸ். வீதி, யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்

இரு இடங்களிலும்
யாழில் தன்னிகரில்லாத் தனித்துவமான ஆசிரியர் குழாமின் ஒருங்கிணைந்த சேவையில்
அன்றும் இன்றும் என்றும்
பிரிவு 2
O/L DAY CLASS (8.30-2.30)
ஆரம்பம் 07.04.2008 8.30 mon



மாணவர்கள் தீர்க்கமான முடிவுடன் இருங்கள்

A/L 2010
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் 12.04.2008
சனி காலை8.30

DMI
நாவலர் வீதி ஸ்ரான்லி வீதி

குறிப்பு: அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்



அறிவித்தல்

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்கள் நாளை (07.04.2008) தொடக்கம் பாலாஜி லொட்ஜ், கஸ்தூரியார் வீதி(கன்னாதிட்டி சந்தி), யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சந்திக்கலாம்.
(குறிப்பு - தவிர்க்க முடியாத காரணத்தால் முன்னைய விலாசம் மாற்றப்பட்டுள்ளது.)



மிதிவெடி விழிப்புணர்வுக் காலம்: ஏப்ரல் 1 - 14
யுத்தப் பிரதேசங்கள், கைவிடப்பட்ட காவலரண்கள், பதுங்குகுழிகள் என்பனவற்றில் வெடிபொருள் ஆபத்துகள் இருக்கலாம்

சர்வோதயம் யுனிசெவ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.